உ

கடவுள் துணை.

292/2-54
2

# மாபாரத
# சமர்மணிமாலை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 MAY 1954
MADRAS

இயற்றியது.

கி. முத்துவேலாயுதம் பிள்ளை,

கோழியூர். (விருத்தாசலம் தாலுக்கா)

*By the Request of*

**V. PERUMAL PILLAI**

Karnem, ADAMANGALEM.

பெண்ணாடம் ஸ்ரீமுருகன் அச்சகத்தில்

அச்சிடப்பட்டது.

31—3—54 விலை ரூ. 1—2—0

O,194NMPI,M
N54.
103584

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 MAY 1954
TAMIL NADU ARCHIVES LIBRARY
103584
O-,194 NMRL M
N54

# சிறப்புரை.

## அறிமுகம்.

பாரத முதநூல் வடமொழியில் வியாசமுனியாலானது அது வடமொழி படித்து உயர்ந்தவர்க்குத்தான் பயன்படும்.

வழிநூலாக பெருந்தேவனுர், வில்லிபுத்தூராழ்வார், நல்லாப்பிள்ளை, அகத்தியப்பட்டர், அரங்கநாதக்கவிராயர் முதலானோர் பலதமிழ் பாரத நூல் இயற்றியுள்ளார்கள், தமிழில் புலமை மிகுந்தவர்களே அவற்றை இன்புறஇயலும்

மேற்கூறியவையன்றி வழிநூலாக நாடகம், கீர்த்தனை, காவடிச்சிந்து, திருப்புகழ் ஆகிய இம்முறையிலும் அநேக தமிழ்நூல் உண்டாக்கப் பட்டிருப்பினும் அவை கருத்துக் கொவ்வாத கற்பனைகளும், தமிழ் மொழிக்கே தாழ்வுவர ஏதுவுங்கொண்டவை.

இன்னிசையில் இசைத்தமிழில் பம்பை தாளம் முழங்க மணிப்பாக்களாய் பாரதசமர்பருவ முழுமையும் உருவாக்கின பெருமை **கோழியூர், கி. முத்துவேலாயுதம் பிள்ளை**, அவர்கட்கே உரியதாம். அன்னார் **"மாபாரத சமர்மணிமாலை"** என்னுமின்நூலுள் கீதை முதலாய தன் பெருநூலனுபவத்தை வைத்திழைத்திருப்பது சாலச்சிறந்தது. பாமர மக்களுக்கே யன்றி மேடையேறி பாரதங்கூறும் பூசாரிகளுக்கும் இன்நூல் ஒப்பற்ற ஊன்றுகோலாய்த்திகழ்வதாகும்.

ஆக தமிழுலகம் நூல்செய்தாருக்கு நன்றியுடையதாகுக.

இன்னணம்,

அங்கனூர்.
26—3—54

M. Panchanatham Pillai,

## ஈச்சங்காடு R. வேங்கடராமய்யரளித்த சாற்றுக்கவி

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஆரணங்கணுன்கினொடு மைந்ததனவேமுதனூலாய மைத்தவேத
பாரணனுமுனியுரைத்த பாரதத்தை வழிநூலாய்ப் பகர்ந்தான்வில்லி
சீரணவுஞ்சார்புநூல் பலகவிஞர்செந்தமிழாற் செய்தாரேனும்
போரணவுஞ் சமர்பருவப் புத்தமுதக்கவியிவைபோல் புனைந்தோர்யாரே 1

சொல்லினிக்கும் பொருளினிக்குஞ் சூட்சிமிகு மனனினிக்குந்
தொடுவோர் கையும்]
நல்லினிக்கும் பாடநனி நாவினிக்கும் பாவினிக்க நவின்றான் செய்ய
நெல்லினிக்குங் கோவிழியூர் களப்பாள கிட்டணனெனும் நெறியோனீன்ற
மல்லினிக்கும் பாவிறலோன் முத்துவேற் புலவனெனு மதிவல்லோனே 2

## புலவர் க. குப்புசாமிப் படையாச்சி தமிழேந்தியார்

### சாற்றுக்கவி பரிசு இன்னணம்

முத்துதிர் செந்நெற் சூழும் கோவிழி யூரின் முன்னாள்
முத்தமிழ் பரிசுதந்த வேளாள முகிழ்மரபின்
முத்துவேற் பாரதப்போர் முறையுடன் விரித்த பாக்கள்
முத்துடன் முத்துசேர்த்த தெனகவி மிளிரும் மாதோ 1

அருந்தேவன் வியாசநூலை யருந்தமிழ் பாக்கட் செய்த
பெருந்தேவன் வில்லி நல்லாப் பிள்ளை சொற் பாரதப் போர்
விருந்தே வண்முத்தவேலன் விளம்பிய சுருக்கப் பாக்கண்
மருந்தே வன்பிறவி நோய்க்கு மனதிற்குங் கனி வுண்டாகும் 2

## இன்னணம் காவனூர் வித்துவான் அ. வேங்கடாசலம்

### தமிழாசிரியர் போர்டு உயர்நிலைப்பள்ளி, திட்டகுடி.

பாண்டவர்க்குங் கௌரவர்க்கும் பார்பிரிக்கும் பகைமையினால்
பாரில் நேர்ந்த]
வீண்வம்பை வியாசனவன் விளம்பியதை வழிநூலாய் வில்லிசெய்த
மாண்புறுநல் மூவாறு மற்போரின் கவியதனை மருவின்றாய்ந்து
ஈண்டுசமர் மணிமாலை எனும் பெயரால் முத்துவே லியற்றும்நூலோ

எட்டதனி லோர்புரட்சி எக்களாச் சந்தமதா விருக்கு மின்பப்
பாட்டதனைப் பயில்வோர்க்குப் பைந்தமிழில் தனிப்பற்றே பாமரர்க்கோ
கேட்டறியுஞ் செவித்தேனே கேள்விஞான முடையோர்க்குக்கண்டும்பாகே
தீட்டியபா நாவன்மை திகழ்முத்துவேற் புலவன் திறந்தான்நன்றே

# மாபாரத சமர் மணிமாலை

### கணபதி துதி.

செங்கையின் மழுமா னேந்தி திரிபுர மெரித்து மார்பிற்
பொங்கர வணிந்தோன் பாதம் பூவென வலமாய் வந்து
அங்கையிற் கனியை யெம்பி அறுமுகன் றனக்கு முன்னே
தங்கையிற் கொடு சுவைத்த ஐங்கரன் சரணம் போற்றி 1

### சரஸ்வதி துதி.

அலைகட லாடை பெற்ற அம்புவி தன்னில் முன்னம்
பலகலை யுணர்ந்தோர் யார்க்கும் பண்புடனருளிச் செய்தாய்,
நிலமகள் பாரந்தீர நின்றிடு மைவர் யுத்தக்
கலைதனைச் சொல்ல வாணி கழலிணைப் போற்றி செய்தேன்

பிரணவப் பொருளைக் கேட்க பிதற்றிய பிரமன் றன்னை
திறமுற சிறையில் வைத்து திரைகட னடுவி லென்றும்
அரவணை துயின்ற மாயோன் அவர் திரு மருகனான
சரவண பவனே யுந்தன் றாளிணை முடிமேற் கொள்வாம் 3

## திரௌபதி துதி.

பாசபந்த மதை யறுத்து பாரினிலே யவதரித்த பரமயோகி
யாசனுப வாசனரு ளம்மகத்தி லவதரித்து ஐவர் தன்னில்
பாசமுடன் வில்வளைத்த பார்த்தனுக்கு மாலைதனைப்பரிந்து சூட்டி
ஆசை பெறு மைவருக்குங் கரங் கொடுத்த துரௌபதையி
னருட்டாள் போற்றி] 4

## குரு துதி.

வாளையுஞ் சேலென் னாளையும் பிணக்கும் வாவிசூழ் நன்னகருடையார்
பாளைய மதனிற் பவக்கடற் புனையாய் பக்தகோடிகட் தனக் கெந்த
நாளையும் வேத மழைபொழி கொண்டல் நாவலுமுகவன் பொற்கமல
தாளையான் றொழுது பாரதப் பெரும்போர் சாற்றுவேன் றரணியாறிய 5

## அவையடக்கம்.

கெருடன் முன் கொசுவைப்போலும் கிரிமுன் னூரகம் போலும்
குருடன்வா னுடுக்கள் நிற்கும் குறிப்பினை காட்டல் போலும்
அருள்பெறுங் கவிஞர் பாமுன் அறிவிலே னுரைத்த பாக்கள்
மருளறும் மயில்முன் னாடும் வான்கோழி போலுமன்றே 6

## சிறப்புப்பாயிரம்

தேங்கினி லமுத மாவின்பாற் கரும்பு செப்பரு மன்னுசிப் பழமும்
மாங்கனிக் கதலி யாசினி ரசமும் வளமுறப் பிழிந்து வொன்றுக
தீங்கிலா மதுவுஞ் சீனியுங் கலந்து சேர்த்தவை மணமொன்றுய்த் திகழ
ஒங்குறு மழலிற் பாகுடன் காய்ச்சி உறுமிளம் பதமதா யிரக்கி 1

சீதள வெப்பமிரண்டு மிலாமற் செவ்வென சாப்பிடுவதற்கு
வேதம் நான்கோடு ஐந்தென வியாசர் விளம்பிய சுலோகத்தை தமிழால்
நாதனுல் வக்கை பாகையின் வில்லி நவின்றனர் நவரச மாக
ஆதாலன் முத்து வே லருந்துமா றமர்மணி மாலையென் றறைந்தேன் 2

பாரதனில் வில்லியருட் கவிவிதையை முத்துவேற் றன்படுகை நெஞ்சின்
ஈரமெனு மன்பதனி லறிவாகுங் காமதனு லெடுத்து ஆன்ற
சோரமிலா தவை முளைத்துச் சொல்லுமவர் கோடேறிச்
சூழ்ந்து கேட்குஞ்]
சாரமுறு மாந்தரெனுந் தனிமரத்தின் கிளை படர்ந்து
தழைத்துப் பின்னும்] 3

அரும்புடனே பூப்பிஞ்சு மதுகேட்டற் சித்தித்தற் றெளித லன்ன
விரும்புபதப் பொருள்காயும் விரைகனியு மதனிரசம் வெறுப்பிலாமல்
கரும்பு சுவை யெனவதனைக் கன்னமெனும் வாயருந்திக் களிக்கவேண்டி
சுரும்ப மித னிசை கேட்டு சோர்ந்திடவு மின்னூலைத் தொடுத்ததன்றோ 4

பூவரிய மதுத்துளியை புசிக்கவெடுத்திடும் வண்டுபோல வில்லி
தாவரிய கவிபூவின் றனிமதுரப்பதப் பொருளின் சாரந் தன்னை
மேவரிய பாவெனுனூற் சாரமெனு மணிகோத்து விரும்புவோரின்
நாவரிய சுவையெனவே நவநவமா யிந்நூலை நவின்ற தன்றே 5

கத்துகடற் சூழ்புவியி லாழ்வாரின் கவிரசத்தைக் கருதினோர்கள்
முத்துவேலின் பாவலங்கள் மூலமது தனையொழிய முடிவொன்றில்லை
சத்துசித் தின்பமெனுந் தன்பயனை யளிக்குமின்னூற்றழுவினோர்க்குக்
கொத்துடனே பவலயமு மத்து விழுஞ் சிரத்தையுடன் கூறவோர்க்கே 6

இசையின்றிப் பாடுமவரின்னலது தாளாம வியம்பக் கேட்போர்
வசையின்றிக் கேட்பதற்கு மணிப்பாட்டி தெனப்புனைந்தேன்
வாசித்தோர்கள்]
தசையுடம்பு புயமிரண்டுந் தான்பூரித் துளமகிழ்வாம தக்கோரெந்தன்
மிசையுறுதி செய்விரென விரைமலர்த்தாளிணைப்
பணிந்து வேண்டுகின்றேன்] 7

நாடறியப் பாரதத்தை நாடகமுங் கீர்த்தனையும் நாடியெங்குந்
தேடறிய காவடியின் சிந்து திருப்புகழாகச் செப்பினாலும்
பாடறியவென்போன்ற பாமரரு மதன்சுவையைப் பருகுமாறிவ்
வேடறிய இயன்றவரை எழுதிதை யளித்தனனல்லித யத்தோடு 8

மெச்சுமரகத நீல புட்பராகம் பவள பேதமுத்து
வச்சவைடூரிய வைர வண்மையுள மாணிக்க மெனப்பதங்கள்
அச்சதனில் வைத்திழைத்தே னம்புவியிலுள்ளோர்களறிய வென்று
இச்சையுடன் செய்த விந்நூலியம்பியதை யாதரிப்பீரின்பமாக 9

விதரவங்கொள் விளக்கெனவே வில்லியவர்
விளம்பியதின் விருத்தப்பாக்கள்
பதப்பொருளை பரிவுடனே பார்த்தவர்க்கும்
பகருவர்க்கும் பயனேதென்றால்
மதங்காம மாச்சரிய மாங்கோப மாம்லோப மானகுரோதம்
அதமாகு மருக்கனைகக்ண்டரும் பனியினாண்போல வகிலந்தன்னில் 10

கண்ணன் துதி.

ஆக்குமவனாரணனு மகிலமதி லவன்படைத்த ஆருயிரை
காக்குமவனாரணனுங் காத்தவுயி ரனைத்தினையுங் கடையுகத்திற்
போக்குமவனுருத்திரனும் போனவுயிராவையும்பின் பூவுலகில்
மீக்குமவ னெவனவன்றன் விரைமலர்த்தா
டுகள்சென்னி மிசையிற்கொள்வாம் 1

தற்சிறப்புப்பாயிரம்.

இப்புவியி லாழ்வார்செய் யிகற்கவியிற் றன்கருத்தா லியற்றி வைத்த
ஒப்புவமை கருத்துரையும் விரிவுரையும் பதவுரையுமொருங்கு சேர்த்து
செப்புஞ்சமர் மணிமாலை பாவினமாய்த் திரட்டியதை தினமும் பார்த்தற்
கப்புறம்யானிக்கவியை தற்சிறப்புப் பாயிரமா யறைந்தேன் மாதோ 2

கன்னலுஞ்செந் நெலுங்கத்தங் கணுக்கதிர்கித் திலஞ்சிந்துங் கழனிசூழ்ந்த
தென்னையுமா சனிக்கதலிதேனிரச மிழிக்கனிமா செழிப்புற்றோங்கும்
நன்னிலங்கோ விழிகரான் னம்மையுடன் கிட்ணனவர் நாடிமுன்னம்
பன்னருநற் றவத்துதித்தான் பாலன்முத்து
வேலனின்னூற் பகரவென்றே 3

பகர்ந்தளிக்கு மணிமாலை படித்தவர்க்குங் கேட்டவர்க்கும் பதிந்துள்ளூரி
யகங்களிக்கும் புறங்களிக்கு முகங்களிக்குஞ் சகங்களிக்கு மதனிசைகேட்

டிகற்களிக்கும் பகற்களிக்கு மிக்கலியினுகங்களிக்கு
மிபமுதலாமெரும்புகளு
மிகக்களிக்கு மிசைசெவியிற் புகக்களிக்குந்
தேன்கனிபால் மிகவுண்டார்போல் 4

குருவான வறுமுகனின் றிருவாக்கி னருளாலுங் கோவலூரின்
றிருகாத தக்கோனின் புதைவிடத்திற் ஞானடைந்த திறலினாலும்
மருகாமற் பேரவைமுன் னாவகேறி பாரதஞ்சொல் வண்மையாலு
முருவான மணிமாலை திருமாலின் கருணையினா லோதினனால் 5

ஆடாது பால்கறக்கு மாவுமிதனிசைகேட்டு மாவுங்கிரிக்
கோடாது எலிபூனைக்கொளியாது வுயர்கருடனுண்ணயிரைத்
தேடாது வாணிழியுஞ் சிசுப்பாலுங் குடியாது செறிந்தபூவும்
வாடாது தலைவணங்கும் வாளெயிற்றே றடற்கரியு மருவிநிற்கும் 6

மான் பசுபுல்தின்னாது மதுவண்டு முண்ணாது மலையிற்கொம்புத்
தேனீயும் நண்ணாது செபமுனிவர் பண்ணாது தேசமாளுங்
கோனரசுஞ் செய்யாது குனித்தவில்லு மெய்யாது குளிர்ந்துதீயுந்
தானெதுவுந் தகியாது சமர்மணிமாலையினிசையைச் சாற்றக்கேட்கின் 7

மறைவல்ல மாமுனிவன்முதநூலு மழகொளிர வரும்பட்டதேவன்வில்லி
குறைவற்ற தமிழ்கவிதை கொடுத்திடினுங் கலைபயின்ற
வல்லுனர்க்காங்க துவிலர்க்கும்
நிறைவுறபா வினமதுவாய் கறையறுமுத்வே
னிகழ்த்தும் நினைவேதென்றால்
முறையுடன்றான் பெற்றவின்பமிவ்வுலகு மடையவெனு முழுநோக்காகும் 8

வருநாளை யெதிர்பார்த்த மாமணித்தா ரதன்மணத்தின் வண்மைநோக்கி
ஒருநாளும் பாரதத்தினுயர்கருத்தை யிவர்நடையி லுரைத்தாரில்லை
தருநாளே மகிழ்ந்தேனித் தாரணியின் வேங்கட கிட்ணன்றனையனான
பெருமாளின்நவகவியும் பேருலகோர் பிரியமுறப் புனைந்தானன்றே 9

## குருதுதி பாட்டு

என்குரு அறுமுகசுவாமியே போற்று மெழுகடல் சூழுமிப்பூமியே
நன்குறுமவர்பாத மன்புறும்பக்தர்கள்
நாட்டிற் கோடாகோடி தேடினார்முத்தி நல்குந்திருவடிசூடினார்

பிறந்ததன்றுடையார்பாளையம் வேதஞ்சுரந்தது நாவெந்நாளையும்
கறந்தது வறியாமை கன்றெனுஞ் சீவர்க்கு
காய்ச்சினோ மவர்ஞானத்தீயிலே உண்டோமாச்சியஞ்
செவியெனும் வாயிலே

மழுவாடி சுயம்பிரகாசனா மவர்சொல் வழுவாத அறுமுகதாசனும்
எழுவாய்ப்பயனிலை இலக்கணவிலக்கியம்
இவைகளைகண்ட சமார்த்தியர் அவர்இருந்தார் கொஞ்சநாளுபாத்தியார்

அத்திபூரனுகூலன் சேவையேகாண நத்திவந்தாரந்தப் பூவையே
சுற்றிலுமாணவர் பற்றியே சூழ்ந்திட
தோன்றினா ரெங்களின்முன்னிலே பாதமூன்றினார் கோழியூர் தன்னிலே

சித்தமலமதை போக்கவே வருஞ் சனனமரணத்தை நீக்கவே
பத்துரெண்டுதினம் ரத்திஞவளி நாலை
பாடமவர் சொல்லலுற்றனர் துணைபாதபூசை செய்யப்பெற்றனர்

அவரருளாலிதைப்பாடினேன் பாதமன்பாக பாமாலைசூடினேன்
தவறேதிருந்தாலு மூவர்சூழ்ந்தப்புவியுள்ளோர்
தான்பொறுப் பீரதைநெஞ்சமே உங்கள் சரண்சிரமதிலெந்தன் தஞ்சமே

சாக்கடைசலமது வேலையே செல்லத் தான்கொள்ளுமாப்போலிக்காலையே
வாய்க்கடங்கா குற்றம் வந்தாலுமதலை சொற்
கேட்கும் பிதாவினைப்போலவே பாதுகாக்கவேண்டு மென்னைசாலவே

ஆழ்வார் கவிக்கிபிணங்கினேன் மற்றுந்தாழ்வார் கவிக்குப்பிணங்கினேன்
வாழ்வாரிப்புவீதன்னில் வாசித்தப்பேரென்றும்
சூழ்வார்க்குப் புண்யமுண்டாகுமே முத்துவேற்
சொற்கவியாற் பாவம்போகுமே

## ஆக்கியோன் பெயர்

தந்தைப்பெயர் கிட்ணப்பிள்ளையா மவர்மைந்தன்
மொழிப்பசுங்கிள்ளையாம்
எந்தன்பேர்முத்துவே லென்பார்களெல்லோரும்
ஈன்றவர் மாசிலாவன்னமே கரமேந்திவளர்த்தார்கள் முன்னமே

நான்பிறந்தேன் குடிக்காட்டிலே பின்புதான்வந்தேன்
மாமன்மார்நாட்டிலே
ஏன்வந்தேனென்றிடில் ஈன்றோளையீன்றவர்
இருந்தார்கள் தானந்தவூரிலே என்றுஎண்ணி வந்தோமதன்பேரிலே

## நாட்டின்வளம்.

சுவேதநதியணைக்கட்டு கால்வாய் தொழுதூர்விட்டு புறப்பட்டு
தவேதன்வதிட்டனால் தான்பூசிக்கப்பெற்ற
தலந்திட்டகுடி வடமேற்கு அதன் தடமூன்றுமைல் தூரம்போக்கு

நீளத்திற்கோரளவில்லை நீர்நிறைந்த மட்டுமதனெல்லை
வாளைவிராற்கயல் ஆளையடித்திடும்
வாரிதியுங்கண்டால்நாணும் எரிமறலியென்னு நாமம்பூணும்

எமனேரியின்றண்ணீர் பாயுமாம்ஓடியெங்கு வெள்ளமாகசாயுமாம்
கமலாசனன்றந்தை கருணையாலெங்களூர்
சமமாய்முதன்மடையாச்சுது பண்டுதரித்திரமெனும் பிணிபோச்சுது

தேங்கொடு வாழைகளோங்குமா கிளிபாங்குடனே குயிற்றூங்குமாம்
வாங்குறுநெற்கதி ராங்குறுவார்வயல்
வரப்பிற் செல்லும்போது காலிலேவீழ்ந் தறுக்கச்சொல்லுந் தகுநாளிலே

காலையிலைபனி சொட்டுங்கதலி தார்சீட்டு பூமியில்முட்டும்
ஆலையிற்செங்கரும் பாடிடுஞ்சர்க்கரை
அந்தரமீன்காணநாணுஞ் சாக்கதுவீசம் பொதிமூன்றுகாணும்

கழிவொன்றைவிட வாலைமெல்லாது பால்வழுவிட பாலடைகொள்ளாது
விழிபொன்மணிகோத்த விதமென்னவதன்கணு
வீறிடமுத்து சொறியவே இந்தப் பாரிடமுள்ளோ ரறியவே

இளம்பாக்குத் தோப்பிதுவென்றேவழி எகிடுவார் சொல்வர்நன்றே
குளந்தோப்பு சோலையிற் குயிலினம் பொறிவண்டு
வளம்பார்த்த தனிசைபாடுமே கேட்டமாகத மயிலினமாடுமே

கழனியின்மதுதுளி சொட்டவே அதைக்கொண்டு கலப்பையேர்கட்டவே
உழவதன்கொழுமையா லெழவைந்தடிமேலே
ஓங்கிவளர்ந்திடுஞ் சென்னெலே கண்டு ஏங்கித்தளர்ந்திடும் கன்னலே

தாழைமடலிணையல்ல சோலைதனக்கு நிகரென்றுசொல்ல
வாழையிலையொரு வாறுரைப்போமென்றால்
வாள்போன்ற சுணைகிடையாது வேறுவகைசொல்ல வுலகினிலேது

ஆனைகட்டுந்தாளதாகுமே போர்வானமட் டுயர்ந்துப்போகுமே
கானவின் எமனேரி கால்வாய் தண்ணீர்சாய
கயல்மடை எதிரேறிபாயுமே துள்ளிக்கரையின் வீழ்ந்ததனுயிர்மாயுமே

புரவியின்வாலொத்த கதிரோனுத்தப் போகாததி லொன்றும்பதரே
பரவியவதன்மணி பகலவனுதையத்தில்
பார்த்தவர் சிரகமென்னவே கோட்டைப் பவுன்நிறம் 'போலதுமின்னவே

தாளறுத்தால் வயற்கொள்ளாதாம் முனையாள்கொண்டு
போய்விடத்தள்ளாதாம்
சேல்வண்டற் சேற்றிலாள் கால்சத்தங்கேட்டதும்
சென்னெற் கடந்துப்பாற்றுள்ளுமே வீழ்ந்துகன்னலைப் பூமியிற்றள்ளுமே

மதன்வில்லுமதனுட னெல்லுமே காற்றி லெதோவீரம்பாரென்று
சொல்லுமே]
இதன் வித்தியாசத்தின் மிதமறியப்பயி
ரிட்டவர்க்குத் தோன்றுமல்லாது சற்றுஎட்ட நின்றோர்க்கது செல்லாது

காணிக்குமுன் னூறுகட்டு களஞ் சென்றாலது பெருமுட்டு
நாணிடும் வரையொரு காணியின்றாட்போரு
நாட்டின் வளஞ்சொல்லநானே எழுத எட்டிலடங்காது தானே

கட்டொன்றுமகாணியொன்பதே அடிக்கக்கொட்டிடுங் களந்தனிலென்பதே
அட்டியிலாதங்கக் கட்டியின்றாள்போல
முட்டிடும் நெல்லோரம்பாரமே கொடுக்கக் கட்டிடுமிருபங்குவாரமே

இந்நகர் கோழியூர்வாசன் ஆழ்வா ரெழில்பெறுங் கவிபுகழ்நேசன்
நன்னயமுத்துவே வின்னிசை பாக்களை
கன்னமிர்தபாகப் பாடுவீர் சொன்ன வன்னப்பதங்கட் கொண்டாடுவீர்

## படையெழுச்சிச் சருக்கம்.

விரிந்தமாவன மலைந்துமீளவு வேண்டு மைவருக்காக
செரிந்தமுத்தருந்தே வருமறியொணு திருவடிசோரியின்றிகழ
பரிந்துவேதங்கள ணுகிடப்பணிக்கொடி பார்த்திபன்றனதிடம் பகையே
புரிந்தகாதனினஞ்சன மேனிஜம் பொரிதனிற் பார்வையிற் பொருந்தும்

திருமுகந்தரியனனுப்பினன் தேரையொரு முகமாகத் திருப்பினர்
குருகுலத்திற் சண்டைகூடின தென்றெண்ணி
வருகிறார்மன்னுதி மன்னரே அந்த வளரத்தினபுரிமுன்னரே

தருமரும் ஓலையெழுதினர்மை தீட்டியதனைக் கழுவினர்
அருமை யென்றுணையான அம்புவியரசரே
அந்தகன்மைந்தனை வெல்லுவீர்நீங்கள் ஐவர்பக்கம் வந்துபுல்லுவீர்

ஈழசோழ பாண்டியாழ்ப்பாணம் நல்லசேரன் தேசங்கொங்குவங்காளம்
ஆரவாரத்துட னதாதர் மகாதர்
அர்த்தாதருடன் சமாதர் வெகுசத்திரங் கட்டியமிகாதர்

வங்கங் கலிங்கங் காம்போசியாம் செழுவங்க மிதிலைகன்னோசியாம்
தங்காதமிக வெங்கும் புடைசூழ
சாளுவமாளவாாரியர் எந்தசமரினும் பின்னிடாவீரியர்

கிடதங்குச்சாமாராடமே வேறுநிகரிலாச் சோனகர்தானுமே
கட்கரிதிடபரி காலாட்புடைசூழ
திடமுடனேவந்துமேவினர் செருசெல்வம்வந்த தென்றுத்தாவினர்

கங்கொங்கணர் கௌசலர் காம்பீலிதேசத்தின் மிகச்சிலர்
செங்காத்தென்னுளுந் தங்கிடும் வாளுடன்
சேனைபெருங்கடலென்னவே முடிதினகான்போற் சென்னிதுன்னவே

குலுக்கர்களப ரொட்டதேசமே மேலுந் தெலுங்கர்பப்பளருடனேசமே
நலுங்கச்சேடன் ரேளுங்குலுங்கப் பூமிராளும்
ரதகரிபரிகாலாள் கூட்டினர் இந்தநாடெங்குமே வெற்றிநாட்டினர்

பூபாரந்தீர்க்கைவர்க்கர்கவே வேணுகோபாலன் சாத்தகியேகவே
நேபாளத்திலுள்ள பூபாலரனைவோரும்
நிரைநிரையாய்க் கொடியாடவே யானைநிமிர்ந்துமும் மதமாறுயோடவே

தேருஞ்சகடையினுலையே ஆறுஞ்சேறு கொண்டதந்தக்காலையே
கூறுகொண்டது குதிரைக்குளம்பிலே
நிறுய்ப்பாந்ததுவானிலே யங்குநின்ற பெரும்படைக்காலிலே

வேந்தர்வியந்திடுந்தேசமே மிக்ககாந்தாரமாங் குந்திபோசமே
மாந்தர்மடங்கலான் மத்திரபூபதி
மருகனுக்குத்துணைஎகவே துரியன்வழிமயக்கிக் கொண்டுபோகவே

துரியனுடன்றம்பிமார்களே அவர்தொண்ணூற்றி யொன்பதுபேர்களே
பெரியவீடுமன் சொல்லரிய துரோணனும்
பேர்பெற்றவச்சுவத்தாமனே இந்தப்பார்பெற்ற பகதத்தபூமனே

சகுனியுடன்விந்துபூரியே கூடித்தானும்வந்தான் கிருபாச்சாரியே
மிருதன்மருடனும் விறல்விட சேனனும்
வெஙகதிரீன்றிடுங் கன்னனேஅவன் வில்வித்தையிற் பிரபன்னனே

அலம்புதனுடன் சையித்திரதனுமிந்தத் தலம்புகழ்யாதவகிருதனும்
வலம்புரியலங்கலான் மன்னனுக்காகவே
வடிக்ணைவில்லம்புத்தூணியும் பகைபொடிபட சேனையக்ரோணியும்

சித்ரசேனன்சித்ரகீர்த்தியே இவர்செருசெய்வதின் வெகுநேர்த்தியே
மற்றவன்சித்திர வாகுவிலக்கணன்
வந்தொருமித்தங்குகூடினர் அந்தவெந்திறலை வரைத்தேடினர்

துருபதனுந்திட்டத் துய்மனேவிற்றுரோணனுக் கெனவந்தயேமனே
வெருவிமூன்கோபித்த வீடுமன்வைரியும்
விறற்சிகண்டியும்வேகமாகவே கையில்வில்லும்புசேனை யோடேகவே

விராடனுஞ்சதானிகநிருபனும் மற்றும்விறற்சுவே தனனுத்ரகுமானும்
தராதலம்புகழ் பெற்ற தருமருக்காகவே
தானையோரக்ரோணி கூட்டினன்வெற்றி தருவேனென்று நிலைநாட்டினர்

அபிமன்னன்கடோற்கசனறிவானும் இந்தப்புவிமன்னர்வீயவாளெறிவானும்
தவியாமற் பாரதந்தான் முடிப்பேனென்று
தக்கவிளம்பஞ்ச பாண்டவர் உக்ரமிக்கத்தும் பைமாலைபூண்டவர்

ஈரொன்பதக்ரோணி சேனையேஎழுந் தூளிமறைத்தது வானையே
பாரொன்பதின்ரெண்டு பாடைமன்னவரும்
சேரவொருமித்துக் கூடினர்முத்து வேலபாரக்கவிப் பாடினர்

எழக்ரோணி சேனைக்கூடினர் ஐவரிடம்வந்து எல்லாரும்நாடினர்
வாழவகை தெரியாத துரியன்பால்
வந்ததைந்துடனாக்ரோணியே அவன்சிந்தை மகிழ்ந்திடப்பேணியே

கடல்திரண்டு வந்தாப்போவே இருகட்சி சேனைகளுஞ்சாலவே
திடமானபோர் கோலஞ்செய்தார வாரித்து
செயபேரிகை தானடித்தனர் தன்சித்திர வாளைவடித்தனர்

சங்குபேரிகை முழங்கினஎங்குந்தங்கு மல்லாரித்தயங்கின
பொங்குமேளதாள மெங்குந்தொனித்திட
பூபாலர்தேரேறிச் செல்லவேபெரும் போரினிற்சென்றங்குவெல்லவே

வாங்காவளைகொம்பு ஊதினதேர்வந்து வொன்றேடொன்றுமோதின
தேங்காதயெக்காளம் நீங்காமற்சப்திக்க
வாங்காதவால்வளை யோதமேபார்த்தோர்
மயங்கினர்கள் சென்றுகாதமே]

தம்பூர்வீணைகுழற்பாடவே அங்குத்தான் விறலியர்நடமாடவே
கெம்பீரக்கர்ணவும் பம்பெனும்பூரியும்
அன்பானமுழவொலி வாத்தியம்ஆறஞ்சுடனி ரண்டாகும்பூர்த்தியும்

சரிகமபதநிசபாடின பாயும்பரிகளுமதைக் கேட்டுஆடின
எரியெழுதுரியன்கண் பொறிவிழவீடுமன்
இணையடிதன்னிற்பணிந்தனன் முத்துவேற்புனைகவி
சொல்லத்துணிந்தனன்]

## இருதரக்கட்சியுந் தங்கள் தளபதியுடன் செல்லுதல்

தளபதிவீடு மனுகவேதுரியன் வலம்வந்து முன்புறம்போகவே
வளங்கண்டதுரோணனும் மகனச்வத்தாமனும்
வலமிடங்காத்தவர் செல்லவே கன்னன்பெலங்கொண்டு
பின்னலேபுல்லவே

சுவேதன் சேனபதியாகவே தருமர் சொர்ணத்தேர் மீதன்றுஎகவே
விவேகன் றனஞ்சயன் விரைந்தவர்முன்செல
வீமனும்பின்னலே செல்லவே சிலர்வெற்றி பாரக்கெலாஞ் சொல்லவே

இட்டவலநகுல சாதேவனும் வீரஇளங் சிங்கமானமகிபனும்
திடங்கொண்டு வாளேந்தி தேர்நின்றேரிருவரும்
படங்கொண்ட பாம்புபோற் சீறுவார் தெவ்வை பலிகொடுப்பே
னென்றுகூறுவார்

வடகிழக்கிலபிமன்னனும் நிருதிவாய்த்ததிக்கிற் பப்புருவாகனும்
குடதிசைவடக்கினிற் கடோற்கசகாளையாம்
கூறுந்தீதன்னில் நல்லறிவானும் புவியாரும் போற்றிடப்போர் புரிவானும்
சமர்பூமி யிருசேனைவந்திட நின்றத் தனஞ்சயன்மன னொந்துவெந்திட
தமர்குருபாட்டன் சகோதரரைக்கண்டு
தானைநடு தேர்நிறுத்தவே முத்துவேற்கானக் கவிவற்புறுத்தவே

## வீடும பருவம் முதற்போர்ச்சருக்கம்.

### கண்ணன் துதி

தாவரும்பிரமானந்த சாகரமாகி அண்டத்
தேவர்கண்மூப்பதோடு செய்புமுக்கோடியாகி
மூவருமாகிசெய்யும் முத்தொழிற்கர்த்தனாகி
பூவரும்பாரந்தீர்த்தான் பொன்னடி சென்னிபூண்பாம்

தேரைநிறுத்துமையனே சுற்றத்தார்களை யெல்லாஞ்
சேதிக்கமாட்டேன் மெய்யனே
பாரையெனண்ணனுள பார்த்திபரொன்னுல்மாள—சுருள்
பாதகமின்றி சாதகமில்லை வேதனையீன்ற நாதனேயெந்தன் தே

### கண்ணன்

காண்டீபா யென்னசொல்வது பித்தஞ்சிரமது தன்னிற்கண்ணை
மறைத்தோ செல்வது
தாண்டிச்சபதமிட்டாய் தபனன்மைந்தனைக் கொல்ல—சு
சாதகமன்றி பாதகமில்லை யோதனந்தனிலிப் போதனைசெய்தேன் கா

### அருச்சுனன்

பாட்டன்குரு நண்பன்றன்னையே வதைத்துகடற்சூழ்ந்த
[நாட்டையாள்வது பின்னையே
கேட்டவுடனே மனம்வாட்ட மடையுதையோ—சு
கேசவவைகுந்த வாசவநின்னடி தாசனுனறிந்தே பூசனைபுரிந்தேன் பா

### கண்ணன்

அறியாமையாலேபேசுறுய் படைவலிதனைக்கண்டு அம்பெடுக்கவுங்கூசுறுய்
நெறியாந்தத்துவஞானம் சரியாயடைந்தபேர்க்கு—ச
நித்தமுஞ்சத்துரு மித்துருவேது இத்தலமீதி லுத்தமவோது அ

### அருச்சுனன்

தமையன்றம்பி மார்தோணுதே அவர்தங்களைக்
கொல்ல தானுமனமுநாணுதே
சமையமிவரைக்கொன்றால் சாதிசங்கிரமமாகும்—சு
சந்திரகுலத்திலோர் நிந்தையதாகு மெந்தையேவுமக்கு
வந்தனஞ்செய்தேன் த

### கண்ணன்

பிறந்திறப்பதுமில்லையே புவிதனிற்பிறந்தோர்க்கு
பேசுவதென்று லுந்தொல்லையே
சிறந்திடுமான்மாவொன்றே தேகமனைத்துநிற்கும்—சு
செருவினிலதனை சருவறுத்திடவு மொருவராலாகா குருகுலாபுவியில் பி

### அருச்சுனன்

பிறந்திருப்பதுமில்லையா இதுவரையான் சொன்னபேச்சும்
பொய்தானோ சொல்லையா

இறந்தவர் மைந்தரைக்கொண் டிமக்கடன்முடித்து—சு
எண்ணிருதினத்திற் பண்ணுவர்கருமம் புண்ணியமெனநாம்
நண்ணியவுலகில் பி

கண்ணன்

உருவமதற்குமில்லையே திரிகாலமதனிலும் ஓதவுண்டோ சொலெல்லையே
செருவிற்படைக்கலத்தாற் சேதிக்கமுடியாது—சு
தேயுவின்வேகா வாயுவிலேகா ஆயுங்காற்றண்ணீ ரதனினும்போகா உ

அருச்சுனன்

சிரங்கரங்கால் மெய்த்தோணுதே கண்ணுவுன்வார்த்தை
செவியிற்கேட்கவும் நாணுதே
இரங்காயோவுன்மனது ஏழையெந்தனின்மீது—சு
இன்னலையொழியாய் கன்னலின்மொழியாய் நன்னயவிழியாய்
சொன்னதைப் பழியாய் சி

கண்ணன்

நாம்வுருவமோசமே திரிகாலங்கடனிலும் நாடாததுவும் நாசமே
பாமரரிவ்வுண்மையை பாரிலறிந்திடார்கள்—சு
பாமனைவில்லாற் சிரமதிற்புடைத்த காமிகுவிசயா தலைதனிற்காணும் நா

அருச்சுனன்

காமனையீன்ற கண்ணனே செகமதுதனைகாக்குங்
காயாம்புமேனி வண்ணனே
எமனுயிர்பிடித்தா னென்பார் புவியிலுள்ளோர்—சு
எதிதிலையம் மேதினியதனில் வாதினிசெய்யாய் மலர்க்கணையெய்யுங் கா

கண்ணன்

எமனுற்றாலமும் போகுமே சூட்சுமசரீரம் இனியோருடலைத்தாவுமே
விமலாக்காரணஞ் சென்மவித்தா யிருக்குங்காண்பாய்—சு
வேறிதையொருவரும் பாரினிலறியார் நேரினிலின்றே
கூறினேன் கொடிய ஏ

அருச்சனன்

தூலஞ்சூட்சுமங்காரணம் சரீரத்திரயஞ் சொல்லிவந்ததோ வாரணம்
காலமிதுவரைக்குங் கண்டறியேனே வையோ—சு
கதியெனுமோட்ச நிதிதனையடைய மதியெனக்கருள்வாய்
துதியுனைசெய்தேன் து

கண்ணன்

ஆன்மாவொன்றேயழியாது யுகப்பிரளயமதினும் யாருமதைப்பழியாது
தேமாகதவிப்பலா சிறந்தகுருநாடாகேள்—சு
தேவர்கள் முனிவர்கள் யாவருமழிவார் கோமகனேகேள்
குவலயமதனில் ஆ

அருச்சுனன்

பலபேரென் கண்ணிற்றோணுதே அவர்தங்களை யெல்லாம்பார்க்க
நாணமும்பூணுதே
உலகிலுள்ளதுவத்து வொன்றே வேறில்லையென்றாய்—சு
உன்னுடையானும் மன்னவர்தானும் இன்னமும்புவியோ
ரெண்ணிற்பல்கோடி ப

கண்ணன்

நீநானிரண்டுமல்லவே துவிதபாவமதெல்லாம் நிற்குமதனைவெல்லவே

தாணுயசகத்தனைத்துங் காணுதவரைத் தோன்றும்—சு
சத்தொடுசித்து தனிப்பெருமின்பம் வித்தெனுமாயை யத்திடிலாகும் நீ

அருச்சுனன்

வீடுவாசலிருக்குதே மிகசாதனமான வாடுமாடுபெருக்குதே
சாடுசெடிமலைகள் மேடுபள்ளம்நதிகள்—சு
காணுதபாராய் தோணுதநோய் எனதுயிலையென் பதுதனைக்கூறுய் -வீ

கண்ணன்

சொற்பனபார்த்தம்போலவே இந்தவுலகமதெல்லாந்
தோன்றுமுனக்குசாலவே]
அற்பநாமவுருவ மழிந்தாலுலகமேது—சு
அப்பெனகானல் இப்பியில்வெள்ளி தப்பிதமில்லை யொப்பிடுகாணும்-சொ

அருச்சுனன்

கனவின்பொருளுமல்லவே இந்தவுலகமதையான்
கண்டதென்றுநீர்சொல்லவே]
நனவிற்கனவின்பொருள் நாசமாவதுவுண்மை—சு
நந்தகோவலனேசந்திரன்முதலா யெந்தநாள்வரைக்குமிருக்குதேவுலகம்—க

கண்ணன்

வினவியகேள்வியுண்மையே மெய்வாய்கணுசிசெவி
விவகாரம் நீக்கினன்மையே]
நனவிற்சுழுத்திவந்தால் நாசமாகுமுலகம்—சு
நாட்டினிலாருங் கேட்டறியார்கள் போட்டிசெய்யாமல்
வாட்டிடுபகையை—வி

அருச்சுனன்

சாபமெனக்குச்சாருமே குருகுலவாசியர்கள் தாலியிழக்கநேருமே
பாவமிந்தப்பழியை பார்த்துமேற்றுக் கொள்வேனே—சு
பார்க்கடன்வண்ணு மேற்கடன்மன்னு தேர்க்கடவின்னுட்
போர்க்கடங்காத சா

கண்ணன

ஆக்கலளித்தலழித்தலே என்கடமையதாகும் அக்ரமந்தானொழித்தலே
சாக்கிரசொற்பனங்கள் தக்கசுழுத்தியினும்—சு
சச்சிதானந்த மெச்சிடுமந்த உச்சிதமாமென் னுருவமேநிற்கும் ஆ

அருச்சுனன்

உருவமிகச்சிறந்ததோ இப்புவிபிறப்பதன்முன் ஒருங்கேயெங்கும்
நிறைந்ததோ
சருவகாரணனீயே தகுந்தபதிற் சொல்வாயே—சு
தக்கவென்றேக மக்கினியாக மிக்கவேய்வில்லும் வீழ்ந்திடுதையோ உ

கண்ணன்

ஆதிமத்யந்தாகிதமரம் அண்டச்சுவற் றினப்பாலும்
அதுவும்நிறைந்த சகிதயாம்
பாதிக்கமுடியாத சோதிசயம்பிரகாசம்—சு
பண்டையமறையுங் கண்டறியாது தொண்டனுமுனக்கு
விண்டனிப்போது ஆ

அருச்சுனன்

பார்க்கக்கூடுமோ சொல்லுவீர் ஞானமெனும் படையதனுல்
பகைகளாறையுங் கொல்லுவீர்
காக்கவென்னுற்கூடாத காமாதிதன்னையின்று—சு
கண்டனஞ்செய்வீர் துண்டமதாக வண்டுறுதுளப மார்பனேயென்னுல் பா

கண்ணன்

விச்வரூபத்தைக்காட்டினர் பல்லாயிரங்கரங்களை
விண்ணுலகத்தில் நீட்டினர்
அசைவிற்கற்பகஞ்சாத மரிசந்தனஞ்சந்தனம்—சு
அந்தரமேவு மந்தாரைப்பூவும்விந்தையசப்பு வுவியின் வீழ்ந்திடத்தனது வி

அருச்சுனன்

கண்டான் மெய்கால்நடுங்கவே பார்த்ததேவர்கள் ககனத்திற்றுளெடுங்கவே
அண்டாதி தேவர்க்கெல்லா மமுதமளித்தஈசா—சு
ஆத்திரம்வேண்டாங் காத்திரமொடுங்க தோத்திரஞ்செய்தேன்
காத்திடுமெனமுன் க

கண்ணன்

சிரங்கட்கோடான கோடியே வீராவேசமதாகதிக் கெட்டுந்தன்னைகாடியே
உரங்கொள் மேகம்பிழிந்து உறும்வேட்கை யைத்தணிக்க—சு
உக்கிரமான வக்கிரதந்தம் அக்கினியன்ன வனந்தமுமின்ன சி

அருச்சுனன்

சதுர்த்த சபுவனந்தன்னையே சொரூபந்தன்னில் தானும்
பார்த்திடப்பின்னையே
எதிர்த்தப் பதிஞேக்ரோணி இவன்றனை எழக்ரோணி—சு
இருதாக்கட்சி துரியர்களவர் எனையதேவர் வானவரோடு ச

பொது

வானவர்தான்றுதிக்கவே அம்புவிதனில்விசயன்
வணக்கஞ்செய்து மதிக்கவே
கானன்வேணு கோபாலன்றனுங் கொண்டகோலத்தை—சு
கண்டிடுங்காட்சி விண்டிடவிசயன் தொண்டினுக்கிரங்கி
சுருங்கிடமேலே வா

அருச்சுனன்

கண்டேன்காணுத காட்சியே உன்திருவுருவதனிற் களங்கமிலாத சாட்சியே
மண்டோதரித்தலைவன் மாவமுன்யுகந்தன்னில்—சு
மறைதனக்கெட்டா மரகதமலையே தரையுறச்செய்தாய் தசமுடிதனைநான்.க

கண்ணன்

உலகின்பொரு ளெல்லாம்நானே இன்னதெனவதுதனைநான்
உந்தனுக்கோதிடுவேனே
அலகிற்சர்ப்பகூட்டத்தி லனந்தனுவதும்யானே—சு
அரசொடுகலுழன் அரிவிலங்கதனில் அரசரில் ராமனுகிடுவேனிவ் உ

அருச்சுனன்

உந்தன்பெருமை சொல்லவே மூவுலகமதனிலும்
ஒருவருண்டோ தானல்லவே
நந்தகோபன்மனையின் விந்தையுடன்வளர்ந்து—சு
காவினுற்பூதகி யாவியையழித்து வாவியிற்காளிங்கன் மணிமுடிமிதித்த உ

கண்ணன்

மாதத்தின்மார்கழிநானே வருஷந்தனிற்பிரபவ
மறைதனிலிருக்கு மாவேனே
வாரத்திலேசனியாம் வளர்நவக்கோளதனில்—சு
மறையுறுகுருவே வரையுறுயார்பா தரையுறுசீவர் சகலமும்நானே மா

அருச்சுனன்

சத்தசத்துத்தெரிந்தேனே நின்கருணையாலின்று
சகத்தசத்தென் றறிந்தேனே
நித்தநடக்குந்தொழில் முத்தனுன்னாலேயன்றி—சு
நெடுமுடியரசர் அடுதொழில்யாவும் நடுநிலையுள்ள நாரணனென்று ச

கண்ணன்

செருக்கோலந் தன்னையணிவாய் எதிர்த்தவர்களை யெல்லாஞ்
சிரந்துணித்திடத் துணிவாய்
மருவொன்று முந்தனுக்கு வாராதென் வார்த்தைநம்பு—சு
மண்டழலளித்த வாசிதேர்வில்லுங் கொண்டதிலூர்ந்து
குலப்பகைமுடிக்க செ

அருச்சுனன்

ஆன்மாவொன்று தானித்தியம் பஞ்சபூதமிவ்வுலக மழியும்
பொருளனித்தியம்
கான்மாதனையுரித்த கண்ணுதலுமனித்தியம்—சு
காருத்தனேயென் வாய்குற்றம் பொறுப்பாய் சேய்குற்றஞ்
செயினுந் தாய்வெறுப்பளோவுன் ஆ

கர்மம்பக்தியும் யோகமே நற்சாதனமடைய பிரமஞானத்தின் போகமே
வர்மம்வையாதே சத்திரியதர்மம் யுத்தமதாகும்—சு
வானவராயினும் வந்தெதிர்ப்பாரேல் கானம்பாடிடுமென்
கணையொன்றால் வெல்வேன் க

அத்வைதமாம் பொருள்நீயே அயமாமென்மனதை சுத்தப்
பொன்னாகச் செய்தாயே
சத்துசித்தின்பம்நீயே சர்வசீவர்க்குந்தாயே—சு
சாக்கிரசொற்பன சுழுத்திகடனிலும் நீக்கமிலாமல் நிறைந்திருக்கின்ற அ

சீவனீசன்கூடத்தமே ஒன்றென்பதுதன்னை தெரியாதிருந்தேன்சித்தமே
ஆவதுமளித்தலுமழித்த லுன்னாலேயன்றி—சு
ஆரிலிவேறே கூறிடவுண்டு மாறுசெய்யாதே மறைதனிலோதும் சீ

தேரைசெலுத்துமையனே போரினில் வந்தபேரை
வதைப்பேன் மெய்யனே
காரையொத்திடுமெந்தன் காண்டிபத்தாலேயின்று—சு
காற்றினுக்கடிய கூற்றினுங்கொடிய நூற்றுவர்தானை
யேற்றுவேன்வானில் தே

கண்ணன்

பாட்டனிடத்திற் சென்றனர் பஞ்சமூர்த்திகள் பணிந்துநின்று புகன்றனர்
கேட்டவுடனேமன வாட்டமுங்கட்கு வேண்டாம்—சு
கிட்டிடசிகண்டி கிரீடியின்கணையாற் பட்டிடுந்தேகம் பத்தமர்தன்னில் பா

அந்தணரிடத்திற் செல்லவே பாதாம்புயமதனில்
அன்பாய் வணங்கிச் சொல்லவே
எந்தையேயுன் னிடத்திலெதிர்க்க வெங்களாலாமோ—சு
எப்படிசெயிப்போம் செப்புவாய்நீயே தப்பரிதாகும்
சதுர்மறையாயென அ

துரோணர்

பத்தோரைந்து நாட்போரிலே கூற்றுவன்மைந்தன்
பரிவாயெந்தனின்நேரிலே

செற்றானுன் மைந்தனென்று வுற்றசேதியைச் சொன்னால்—சு
ஒறியதிட்டத் தாய்மனுங்கொல்வான் போரினில் முத்துவேல்
கூறியபடிக்கு பத்

## முதநாள் ஆரம்பயுத்தம்.

சங்கமெங்குமுழங்கின தம்பட்டைபேரி தானுமிகத்தயங்கின
பங்கமிலாச்சுவேதன் தங்காரதத்தைத்தூண்டி
செங்கரந்தன்னிற்சாபமே எடுத்துப்பாண மெங்கணும் விட்டான்கோபமே

சுவேதன் மிஞ்சினனென்னவே வீடுமன்றேருஞ் சூறுவளிபோற்றன்னவே
தவேதன்றுரோணச்சாரி தானும்பின்னால்நடக்க
சங்கம்வாயில் வைத்தா தினன் தேரொடுதேரை தானும்விடுத்துமோதினன்

யானையோடானைபாயவே மத்தியில்நின்ற அரசர்முடிகள் சாயவே
குதிரைவீரர்கள்மேவி குருநிலந்தன்னிற்றாவி
கொடியயுத்தங்கட் செய்யவே ரெணக்களத்தில் குருதிமழையும் பெய்யவே

வாளொடுவாளும் பாய்ந்தன மிகக்கூறிய வேலொடுவேலுந் தோய்ந்தன
சேலொடுசேல்பொருதுஞ் சிலமெனும்படிக்கி
தேர்வீரர்பாணமெய்யவே இருதாத்துசேனை யுடலம்நையவே

சத்தியெடுத்துத்தாவுவார் எதிரிகளைகுத்துவே னென்றுகூவுவார்
அத்தியைகண்டசிம்மம் பற்றிப்பாய்வதுபோல
சத்திவேற்றானெறியவே மணிக்குடர்கள் தான்பூமியிற்சரியவே

எதிர்த்தவன்றன்னை வீச்சுவே சிரம்வீழுமுன்
னதிர்த்திவன்றன்னை யோச்சவே
விதிர்த்திருபேரும்வீழ மேதினிதன்னிற்றாழ
வீரர்கடன்னையிகழ்ந்தார் இவர்களதி சூரர்களென்று புகழ்ந்தார்

கேடயந்தன்னைத்தாங்கியே வலக்கைவாளாற் கிட்டினேர்தன்னை ஓங்கியே
சேடன்முடித்தள்ளாடி ஆடவேகமாயோடி
தேரைத்தாளாய் நொறுக்குவார் முகத்தின்மீசை
எறக்கையான் முறுக்குவார்

தோமரங்கொண்டு வெல்லுவா ரெதிரிகளை பாமரரென்று கொல்லுவார்
காய்மரங்களிற்கல்லை தாமெறிந்ததைப்போல
கலகலவென்றுவீயவே இரத்தவெள்ளங் காவிரிபோலசாயவே

காலனைப்போற்கரத்திலே அயிலையேந்தி மேலவர்தானுரத்திலே
வேலவன்குன்றெறிந்தாப் போலவர்சேனைமீது
வீசவனைத்துநாசமே துரியன்சேனை வீழ்ந்தததிகமோசமே

வீரர்விற்றான் வளைக்கவே பட்டவர்த்தன சூரர்மேனிதுளைக்கவே
தீரர்வர்கட்செய்யும் போரின்மாண்டனகோடி
சேற்றிற்றோழி செல்லவே முத்துவேற்கவி போற்றி
யெல்லோருஞ் சொல்லவே

### அருச்சுனன் வீடுமன் யுத்தம்

விசயனும்வீடுமன் கேரிலேகையில் வில்லெடுத்தார் முதற்போரிலே
வசையிலாவிருசேனை வாள்யுத்தஞ்செய்திட
மண்ணினுஞ்நாகம் நடுங்கவே மேல்விண்ணினும் நாகரொடுங்கவே

### அருச்சுனன் வீடுமன் பருவம்

இருதேரும் வலமிடமாகவே கண்ணிமைகொட்டு முன்வேகம்போகவே
பொருதேரிரண்டையும் புரந்தானுலகுள்ளோர்
போக்குவரத்தையறிந்திலர் பாணம்நீக்கும் விதத்தைத்தெரிந்திலர்

### வீடுமன்

வீடுமனுங்கோடிவாளியேயெய்ய விண்ணிலெழுஞ் சோரித்தாளியே
பீடுடைவிசயனும் நாடிஎதிர்நின்று
சாடினான் தன்பாணந்தன்னையே பாட்டன்கோடிப்பாணம் வீழமுன்னையே

### துரியன்

பாட்டன்முன்னருச் சுனன்றன்னையே துரியன்
நாட்டமிட்டதற்குப் பின்னையே
தாட்டிகச்சகுனியுஞ் சல்லியன் றன்னையும்
தம்பிமார் பலரையுமேவினான் விசயன்றா மறப்பீரென்று கூவினான்

### தருமர்

இந்தமொழி யவர்காதிலே உடன்வந்த தளக்கணப்போதிலே
விந்தான்வீமனை சுந்தரவபிமனை
விசயனுக்குத் துணைசெல்லவே அதிவிரைவிற் போவீரென்று சொல்லவே

### வீமன்

மந்தரமனையதேரேறினான் இதோவந்தேனென்றப் போதுகூறினான்
அந்தரந்தன்னிலே ஆடும்பனைக்கொடி
யதையறுத்துப் புவிதள்ளவே தமையனுமனன் னப்பாய்ந்துதுள்ளவே

### அபிமன்யு

பனைக்கொடி பூமியிற்புரளவே கண்டபார்மன்ன ரொன்றாய்த்திரளவே
சினத்தபிமன்னனுந் தேர்ப்புரவிதன்னை
சிரம்புவிதனில் விழவெட்டினான் எதிர்சேனையுடனோடிக்கிட்டினான்

### சல்லியன்

மத்திரனுங்கோபமாகினான் விராடன்புத்திரன் மேற்கணையேகினான்
உத்தரகுமாரனுஞ் சித்தஞ்சலியாமல்
அத்திரந்தன்னை விடுத்தனன் அவன்சித்திரத்தேரைக் கெடுத்தனன்

வேறொருதேரின்மேலேறினான் இந்தப்பாருருவக் கணைதூரினான்
ஓரொருரோமத்தில் ஈரொருபாணங்கள்
ஊடுருவும்படிமத்திரன் கணைசாடும்போத பிமனின்மித்திரன்

இவனைவில்லால் வெல்லலாகாது நேரேசிவன் வந்தாலுமுயிர்போகாது
பவனன்மேருமலைப் பறித்தெறிந்தாப்போல
பாரவேலொன்றினையெய்தனன் உத்தரன்ஆரமணிக் கண்டங்கொய்தனன்

### வீமன்

உத்திரன் மாண்டதைக்கண்டனன் வீமன் சித்திரத்தண்டை கைக்கொண்டனன்
மத்திர பூபதி மாவோடு வலவன்வில்
மணிமுடி சிதறிடவோடினான் முத்துவேலணிவெற்றி பாமாலைசூடினான்

### துரியன், வீமன்

சேனைகளோடிடக்கண்டனன் துரியோதனனுங் கோபங்கொண்டனன்
யானை சிங்கமீதுதானே சென்றதென்ன
அரிக்கொடியோன்றேரை மோதினான் சங்கமண்டம் நடுங்கிடவூதினான்

### வீமன்

கார்முகந்தன்னையெடுத்தனன் அம்புநேர்முகமாக விடுத்தனன்
பார்முழுதுமாண்ட பாம்புகொடியோனின்
மார்முழுதும்பாணமெய்யவே வீரமன்னனுந்தன் தேகம்நையவே

தண்டையெடுத்தெதிரோடினன் தேர்சாரதி புரவியைச்சாடினன்
கண்டசல்லியனுங் காந்தாரன்சகுனியும்
சண்டமாருதம்போல்வாளியே விடத்தானை விழுந்ததோரோளியே

### வீ. சகுனி சல்லியனைத்தாக்குதல்

ஆத்திரத்தோடன்று வீமனே துரியனுதியருக்கொருயேமனே
சாத்திரசம்பன்னன் கோத்திரமறச்செய்வான்
சகுனியே நில்லாதே செல்லடா வீரசல்லியனேயிங்கு நில்லடா

### சல்லியன்

சல்லியன் வில்லையெடுத்தனன்வாயு தனையன்மேற்பாணம் விடுத்தனன்
வல்லியம் போல் வீமன் சல்லியன்றேரையும்
மாவலவன்றனைச்சாடினன் முத்துவேற்பூவலஞ்செய்கவிபாடினன்

### சுவேதன் கோபம்

மத்திரபூபதிஎங்கே உயிர்மடித்திடுவேன்கண்டாலிங்கே
சத்திரந்தன்னிலே தாகந்தீர்த்தானென்று
சர்ப்பக்கொடியோனிட மற்பத்தனமாய் சென்ற—ம

பஞ்சவர்மருமகனாகவே பொல்லா வஞ்சத்துரியனிடமேகவே
நெஞ்சந்தனிலீரங் கொஞ்சமுமில்லாமல்
நேரில்வந்தான் முதற்போரிலே வேறுகிகாரவனுக்கிப்பாரிலே

பகன்முகத்தக்கினியென்னவே கோடி பாணம்பறந்தன மின்னவே
அகங்கொண்ட துரியன்கார் முகங்கொண்டசேனையை
மிகரெண்டதுண்டமாய் வெட்டினன் தேரைவேகமுடனோட்டிக்கிட்டினன்

கோடிமன்னர் வந்துக்கூடினர் இருகோடி பாணங்களைச்சாடினர்
நாடியசுவேதன்றேர் ஓடியப்பாணத்தை
நாலுகோடியாகச்செய்தன வந்த நரபதிமுடியெல்லாங்கொய்தன

பனங்காயன்னத்தலையுருளவே சுவேதன் பாணந்தாங்காமல் வெருளவே
புனந்தேடியெல்லோரும் போரிற்பதுங்கவே
தனந்தேடியுண்ணாது போலவே வில்லைத்தலையில் வைத்துசென்றூர் சாலவே

சேனைபூளை வனமென்னவே விராடன்றேரனிலமெனத்துன்னவே
பூனைபோலேங்கிப்புவிபாலரெல்லோரும்
போற்றினர்சுவேதனினுண்மையை மகிழ்ந்தேற்றினர் தனுர்வேதக்கேண்மையை

பட்டவரெத்தனையாயிரம் வீரங்கெட்டவர்கள் பதினாயிரம்
தொட்டவரிவில்லும் விட்டெறிந்துசிலர்
கட்டப்பட்டோடினர்காதமே முத்துவேவிட்டக்கவி ஐந்தாம்வேதமே

### துரியன் தம்பியர்

சல்லியனின்றுணையாகவே துரியன் றம்பியறுவருமேகவே
சொல்லுக்குள்ளாயிரம் வில்லிற்கணைகளை
சோனைமேகமென்னபெய்யவே விராடன் சுதன்சேனையகிதமாகினையவே

சுவேதன்

வீரமில்லாத்துரியன் றம்பியே நீங்கள் வில்லெடுக்காதீர்கள் நம்பியே
ஆரமணிக்கண்டம் அறுப்பேனேர் நொடியிலே
அரிக்கொடியோன்வாக்கு பொய்க்குமே நாளையவன்பாணமுங்கள்மேல்தைக்குமே

து. தம்பியர்கள்

அறுவரும் வில்லையெடுத்தனர் சுவேதன் கருவறப்பாணம் விடுத்தனர்
வெருவறவிராடனேர் விற்கொண்டவர்வாளி
மருவுறவிரண்டாக வெட்டினன் ஆற்றுமணலென தேர்தூளாய்கொட்டினன்
சுந்தரத்தம்பிமார் வாடவேபாணஞ் செருகிமார்பில் ரெத்தமோடவே
சந்திரனைக்கண்ட அந்தகாரம்போல
வந்தவழிதேடிவோடினர் முத்துவேற் செந்தமிழ்க்கவிதனைப்பாடினர்

சல்லியன் சுவேதன்

மத்திரபூபனுமெதிர்த்தான் சுவேதன்மீது அத்திரங்கள்தன்னையுதிர்த்தான்
அத்திதனைக்கண்டவரி பற்றியெதிர்பாய்வதுபோல்
சித்திரவில் தன்னைவளைத்தான் சல்லடைக்கண்போல் மத்திரன் தேகத்தைத்
துளைத்தான்

சல்லியன்

சல்லியனுங்கோபமீறினன் பசுவைக்கண்டு துள்ளும்புலிபோல சீறினன்
வல்லியம்போலநடந்து வில்லிலே கணைதொடுத்து
அல்லற்பட சேனைதன்னையே அவன்முனைந்து கொல்லவுஞ்சுவேதன்முன்னையே

சுவேதன்

அத்திரப்பின்னென்றையெடுத்தான் மத்திரதேச வித்தகன்றேர்மீது விடுத்தான்
உத்தரன்றமையன்பாணஞ் சித்திரத்தேரையொழித்து
அத்ததவன்கையின் வில்லுமே பாகுடனே சுத்தவீரனென்ற சொல்லுமே

சல்லியன்

இத்திறத்தான்றன்னை வெல்லவே கணையில்லையென்று மத்திரத்தானன்று
சொல்லவே
சித்திரம்போலதிகைத்து புத்தியும் மனம்பதைத்து
அத்திரமெறிந்து வோடினன் முத்துவேற் கவிச்சித்திரம் புகழ்ந்து பாடினன்

வீடுமன் சுவேதன்

மச்சராசமைந்தனவன் அச்சமின்றி வீடுமன்மேல் லெட்சக்கணக்கானபாணம்
வீசினன்—எமனுக்கின்று
பட்சணஞ்செய்வேனென்றுரை பேசினன்

வீடுமன்

பேசிய சுவேதன் மீது மாசிலாத கங்கை மைந்தன் ஆசிலாதவாறு நூறுபாணமே
[விட்டெறிந்தான்
தேசுவுங்குலைய அட்டகோணமே

சுவேதன்

ஆறுநூறுபாணங்களைநேருநேராதாகநின்று கூறுகூறதாகரெண்டாய்வெட்டினன்
[அவன் ரதத்தை
மாறுபட சென்றெதிரே முட்டினன்

வீடுமன்

முட்டியசுவேதன்தன்னை கிட்டியேவாரதவண்ணம் அட்டியிலாதவன்சேனை
வெட்டியெறிந்தான் சுவேதன் முன்னையே [தன்னையே—பலியாக

சுவேதன்

பஞ்சவர் சேனைநெளிய நெஞ்சமுங்கலங்கிடமால் அஞ்சாமற்பனைக்கொடியை
பஞ்சுபோற் பறக்கபாணந்தாத்தினன் [வீழ்த்தினன்—தேர்புரவி

வீடுமன்

இந்த வில்லவனுக்கரன்தந்த வில்லெனக்கருதிஎண்ணினன்மனதிலொருசூட்சியே
கண்ணிலாதோன்மைந்தன் செய்தஆட்சியே [—எதுபோல

சுவேதன்

கட்சிரெண்டின் சேனையினும் பட்சபாதகமிலாமல் சொச்சம்நின்ற நாலக்ரோணி
பட்சணமென்றுன்றுரியன் முன்னையே [தன்னையே—நரிக்கியின்று

வீடுமன்

கேளடா சுவேதனேநீ வாளொடுத்து யுத்தஞ்செய்தால் சேவிசெய்வாருன்னை
தாழவைத்தான் வில்லையந்தத்தேரிலே [யிந்தப்பாரிலே—என்றுரைக்க

வைத்த குறியையறிந்துசித்தமிகவேயெரிந்து மற்றும் வில்லைநாணிதளர்த்
பற்றி நின்றனப்போதவன் நேரிலே [தாமலே—கையின்வில்லை

பாரினிற்குதித்து பாலன்சீறியே கொதித்தெழுந்து சாரிவந்து சேனைசூறையாட
தேரில் நின்றவன் பாணத்தைப்போடவே [வே—அப்போதந்த

மெய்யிலொருகையும் வீழஐயன் வீடுமன் சிரத்தை கொய்யுவேனென்றெதிரே
கையனுமவன் சிரசைத்தள்ளினன் [தள்ளினன்—விற்பிடித்த

பொது

பட்டனன் சுவேதனென்றுகெட்டன சேனைகளெல்லாந்திட்டெனச்சமர்முகத்தில்
இட்டமுத்து வேற்கவியைச்செப்பினர் [தப்பினர்—தங்கள் தங்கள் 9

## இரண்டாம் போர்ச்சருக்கம்.

எழுவகை யோனி பேதமெந்த வெந்தவிதத்தினுஞ்
சூழவந்த வகைகண் முற்றுஞ் சூட்சியான தன்மையை
வாழநின்ற விசயனுக்கு மனத்தின் கண்ணுணர்த்திய
ஆழிமாய னிணையடிக ளன்புடன் வணங்குவாம் 1

செங்கண்மால் தன்றிரு வாக்கினல்திட்டத்துய்மன்சேனபதியாக்கினர்
எங்கணும் புகழ்பெற்ற தங்காதமீது
பொங்காவமென்ன சீறியே புலி பாய்ந்தது போலவனேறியே

அபிமன்வீமன்விசயன்முன்செல நல்லறியான்கடோற்கசன்பின்செல
ரவியன்னநகுலனும் புவிபோற்றுஞ்சாதேவன்
நாடியிரு புறஞ்செல்லவே கவிஞர்ஒடி வெற்றிகவி சொல்லவே

வீடுமன்

பஞ்சவர் சேனையைக்கண்டனன் பீட்மன் பாரவில்லைக்கையிற்கொண்டனன்
கஞ்சமலர்த்தாளான் செஞ்சொலச்வத்தாமன்
கண்முன்னேயிருவருஞ்சென்றிட பின்னல் காந்தாரன்சகுனியும் நின்றிட

பகதத்தனிலக்கணன் வலம்வர எங்கும் இகல்பெற்ற சாதனனிடம்வர
திகதத்தவெனமேளந் தகதத்தவென்றிட
துரியனுந்தன் தேரிலேறினன் புவியாரியதுகமக்கெனக்கூறினன்

இருதாச்சேனையுஞ்சூழ்ந்திட வாளால் இளைத்தவர்கள் சிரம்வீழ்ந்திட
துருபதன்மைந்தனுந்துரோணரும் விற்கொண்டு
சோனைமழையென்ன வாளியே விடத்தானை விழுந்ததோரோளியே

துரோணர்

வீசினானுபாணந்தன்னையே தேரின்வாசியும் வீழ்ந்திடப்பின்னையே
அசியிலேநின்ற திட்டத்துய்மன் றன்னை
எசிப்பாணத்தாலடிக்கவே அவன் இடதுகைவில்லையொடிக்கவே

பின்னொருவாளியெடுத்தனன் துய்மன் பொன்னொளித்தேரைக்கெடுத்தனன்
சன்னப்பின்னலாக மன்னவன்றேகத்தை
தான்துளைக்கப்பின்னாலோடினான்முத்துவேற்கான்முளைக்கவிதனைப்பாடினான் 2

கலிங்கன் யானைப்படை

வடகலிங்கதேச மன்னனே எஞ்சாதிடமாவயுத்தப்பிரபன்னனே
கடகரிபரிதேருங் காலாட்கள் தன்னோடும்
காளையொத்த வீமன்றன்னையே சக்ரவாளமொத்து வளையப்பின்னையே

கலிங்கன்

யானையம்பாரி மீதேறினான் அடங்காதகோபத்தோடு சீறினான்
கானமுறும் வன்னியானதென்னவன்று
காளைவீமனொருதேரிலே கடல்கடைந்தசைலமன்னப்போரிலே

யானைச்சிறப்பு

கருங்கல்லின்தூணொத்தக்காலே திரண்ட இரும்பொத்ததன் பெரும்வாலே
இருங்காதின் பெருங்காற்றில் வருஞ்சேனைமாண்டிட
இமயமதனையொத்தமெய்யே பெரிய இருப்புலக்கைதுதிக்கையே

மலைக்குகையதை நிகர்வாயே எதிரிதனைக்கண்டாலுமிழுங்கண்தீயே
சிலைக்கொண்டன்றுவடதேசக்கலிங்கன்வில்
கலைக்கொண்டு தன்பாணமெய்யவே முன்கண்டவீமனெதிர்க்கொய்யவே

நிழற்கண்டு கோபித்து சீறும் வேறு நிகரிலாமற்செய்யும்போரும்
தழல்விழற்றன்னைத்தகித்ததுபோலவே
தள்ளிமிதித்திடுங்கால்களால் தாண்டித்தள்ளியடித்திடும் வால்களால்

வீமன்

தாக்கினான்றன்பெருந்தண்டையே ஓங்கித்தாக்கினான் கரியதன்மண்டையே
போக்கியென்புத்தூளதாக்கிப்புவிமீது
புரண்டது புழுதியில்யானையே பார்த்து விரண்டதவன்பெருஞ்சேனையே

கலிங்கன்

தோமீது பார்மன்னனேறவே வீமாசெபிப்பாயிப்போதென்றுகூறவே
போர்வயவாளியால் நேர்நின்றவனது
தார்கண்டக்குறி வைத்துவெய்யவே அவன்றலைதுள்ளிப்பூமியின்விய்யவே

வீமன்

ஆட்டுமர்தைப்புலியன்னவே வீமன் யானைக்கூட்டமதிற்றுன்னவே
கோட்டுக்கிம்புரிபிடித் தாட்டித்தலைகீழாய்
குத்துவான்குஞ்சரந்தன்னையே காலாலெத்து வானஞ்சிடப்பின்னையே

வாலைக்கரங்கொண்டு பற்றுவான் றலைமேலே காகமென்னச்சுற்றுவான்
காலைப்பற்றி வடவேலைக்கனலன்ன
ககனத்தில் வீசப்பறந்தது புவிகண்டுயிர் தன்னைத்துறந்தது

வாரிதிகட்டினக்காலே அனுமன் வாரியெறிமலைப்போலே
சாரிவந்து பீமன் சூரிவிடும்யானை
தான்விழுஞ்சேனைக்கடலிலே வீமன் மேல்விழுவானதன் பிடரிலே

துதிக்கைக்காந்தனிற் பற்றுவான்மேலே தூக்கிக்கபாலத்தி லெத்துவான்
மிதிக்கவுடம்பெலாம் பதிக்கப்புவிமீது
வேறுசிலயானை தூக்குவான் உடற்கூறுவிழவுயிற் போக்குவான்
தந்தியைவாரியெறியவே சென்று அந்தரந்தன்னிற்றிரியவே
இந்திரனாற்சிர கிழந்தவரைபோலே
இபமெட்டின்மேற்சென்றுவீயவே முனிவர்தவங்கெட்டுக்கு ஊகயினிலோயவே
சென்றயானை விழுமுன்னையே கீழ்நின்றயானையை யதன்பின்னையே
வென்றிகொளும்வீமன் அன்றுயெறிந்திட
வேகமுடன்சென்றுமோதவே தேவர்மேகச்சண்டை யென்றுவோதவே
மைந்தனோடுந்தந்தையானையே தனக்குச்சொந்தமாய் சென்றனர்வானையே
சந்ததமுத்துவேற் செந்தமிழ்மாலையை
வந்ததுவாழ்வென்றுகூடினான் மிகசந்தோடமாகக் கூத்தாடினான் 3

வீடுமன்.

யானைநிர்நாசமாகவே பார்த்த வானநதிமைந்தனேகவே
சோனையம்புயல்மேகஞ் சொரியுமழையன்ன
சேனைதனைத்துண்டமாடவே யாருந்திசைதப்பிப் பின்வாங்கியோடவே 3

வீமன்.

சேனையோடுவதைக்கண்டனன் வீமன் தேர்மீதாரோகணங்கொண்டனன்
யானைமீதுசிம்மந் தானேசென்றதொப்ப
ஏனையசேனைகள்கூட்டினான் வந்தெதிர்த்த மன்னர்களை வாட்டினான்
வீடுமன்பனைக்கொடி தாழவே நாலுவேகப்பரிகளும் வீழவே
சாடும்பாணங்களாற் சாரதிமாய்ந்திட
வாடுமனத்துடன்நின்றனன் சண்டவாயுவின் மைந்தனும் வென்றனன்

அபிமன்யு

கோடிமன்னர்வந்துகூடினார் அறுகோடி பாணங்களைச்சாடினார்
சாடிநின்றோர்களை பேடியின்செல்வனும்
தேடியோரத்திரமெய்யவே அவர்சிரந்தரையுற விழச்செய்யவே
பாருருவக்கணைப்போக்கினான் எதிர்த்த பார்மன்னரையெல்லாந்தாக்கினான்
ஓரொருநெத்தியில் கூறுறும்வாளியை
ஊடுருவிப்பாயவிட்டனன் அவர்கட் கூடுருவிப்பாயகெட்டனர்
கவந்தமெழுந்துகூத்தாடின முத்துவேற் கவியுல்லாசமாகப்பாடின
சிவந்தகுடபாலில் தினகரன் சென்றிட
சென்றனர்பாசறைநாடியே ஐவர்வென்றனரென்று பின்னோடியே.

## மூன்றாம் போர்ச்சருக்கம்.

தங்களுரியிற்கோவியர்கள் ததிநவநீதவமுதத்தை
கங்குற்றனிற்றன் னண்ணனொடு கனத்தலூகலமீதேறி
அங்குற்றனவெல்லாமருந்தி அக்கோபியர்முன்பரிகசித்து
தங்குற்றவிடம்வந்தானின் றாளின்கமலந்தரமணிவாம்

குணதிசை ஞாயிறுதித்தனன் யெழுந்தனைவருங்கர்மமுடித்தனர்
கணகணவெனமேளந் தனதனதனவென்ன
மணமகன் போலத்துரியனேவந்தான் மண்ணாசைகொண்ட வெறியனே
டங்காவுடுக்கடிபட்டன சேனைதான் பயணமாகிவிட்டன
சிங்காதனமேறுந் தேசத்தரசர்கள்
சங்காரவாரங்கட் செய்யவேஇகலோர் தன்காதிற்போய் சத்தம்விய்யவே

கட்சிரெண்டின் சேனைசென்றனர்ரெணக்களத்தில் வில்லம்போடுகின்றனர்
பட்சிகள்வானத்தில் பரிதிமறைத்திட
பாண்டவரு மக்கேசென்றனர் உலகம்ஆண்ட துரியனும்நின்றனன்.

துரியன் வீமன்

காட்டில்திரிந்திட்டபூமனே தலையோட்டிலறிவுண்டோ வீமனே
மேட்டிமையாகவே காட்டுவனுண்மையை
வில்லெடுத்தென்முன்னே நில்லடாவீரமில்லை யென்றாற்பின்னேசெல்லடா

வீமன்

மண்ணாசைகொண்டதரித்திரம் இந்தமண்டலம்போற்றுமுன்சரித்திரம்
பெண்ணாசையாலே நீஎன்னென்னசெய்தனை
பேயனேபொய் சொல்லும்வாயனே கடும்பொட்டையன் பெற்றிட்டசேயனே

துரியன்

கண்சிவந்துகணையெடுத்தான் துள்ளுகாளைவீமன் மீதுவிடுத்தான்
விண்முறிந்துதேரும் வீணிலழிந்திட
வீசினான்சாரதிதன்னையே நாலுவாசியும் வீழ்ந்திடப்பின்னையே

வீமன்

பின்னொருவில்லையெடுத்தனன் அதிற்பேரம்பு நாலுவிடுத்தனன்
மன்னாதிமன்னனை சின்னாபின்னஞ்செய்து
மாவலவனுயிர்மாளவே பொல்லாமாசுணக் கொடியோனுமீளவே

வீடுமன்

வீடுமனப்போதுகண்டனன் நின்றவிசயனை விட்டுவெகுண்டனன்
ஓடியரசனைத்தேடி யெடுத்தவன்
உயர்ந்தசஞ்சீவியளித்தனன் சற்றயர்ந்தவன்போல விழித்தனன்

துரியன்பயந்தன்று ஓடினான்முத்துவே லரியகவிதனைப்பாடினான்
சரிசரியுந்தனின் சாமர்த்தியமெல்லாம்
சாப்பிட்டுவந்திதோபார்க்குறேன் உனைகூப்பிட்டெமலோகம்போக்குறேன் 2

வீடுமன்

பின்னையும்வீடுமனோடினான் ஐவர்பேரணி சேனையைச்சாடினான்
மன்னவனருச்சுனன் மாவிருபேர்மீதும்
மரகதமேனியில்சோரியே சிந்த வாளிவிடுத்தனன்கூறியே

கண்ணன்

மானமென்னவுனக்கில்லையா வில்லில்வாளி தொடுத்திடவல்லையா
ஆனதுனக்கினி யானதெனக்கென
ஆழிகரத்திலெடுத்தனன் கண்ட அருச்சுனன் ஓடித்தடுத்தனன்

ஊழிமுகக்கனல்போலவே கரம்ஓங்கியே நின்றிடசாலவே
தாழிதனக்கொரு வீடளித்ததிரு
தாளிணைதன்னைப்பிடித்தனன் அன்றுசகத்திர நாமம்படித்தனன்

வீடுமன்

கண்டவீடுமன்நடுங்கினார் கரக்கால்மெய்யுஞ் சோரவொடுங்கினார்
அண்டாதிதேவர்கள் கொண்டாடுமெய்ஞான
ஐயாவுனக்கெதிரல்லவே சக்ரகையாளன் மேற்குறைசொல்லவே

இனிப்பிறவாவரந்தந்திடு இந்தஏழைக்கிரங் கியேயுவந்திடு
முனியாதேயென்மீது இனியான்செய்யேன்றீது
முத்தியெனக்குக்கொடுத்திடு பெருமோசம் வராமற்றடுத்திடு

கண்ணன்

செய்ததருச்சுனன்யுத்தமே நீர்செருசெய்த தின்மீதுகுற்றமே
எய்தவன்றனையன்றி ஈட்டியென்னசெய்யும்
கைதவறென்றுபொறுத்திட்டேன் ஆழிகனன்றதை யானுமறுத்திட்டேன்

வீடுமன்

செய்ததபசாரமையனே சிறுதேபாஞ்சசன் யக்கையனே
கைதவன்மருகன்மேற் கணையெய்தபோதது
கார்முகமுமாறுபட்டதோ பொல்லாக் காலமுன்மேற்கணைதொட்டதோ

கண்ணன்

கண்ணனுந்தன்கோபமாறினன் உடன்காண்டீபன் தேர்மீதுயேறினன்
வண்ணவாளிக்கண்ணன் சொன்னப்படிவிட
வாடியேவீடுமன் ஓடினன்முத்துவேற்தேடிய கவிதன்னைப்பாடினன் 3

## நாலாம்போர்ச் சருக்கம்

அகலிகை சாபமதன்று தீர்த்ததாள்
சகமதை ஓரடி திட்டஞ்செய்ததாள்
ககனத்திற் கங்கையை கஞ்சனுலேற்றதாள்
தகவுறு சகடையை சங்கரித்திட்டாள் 1

வரசங்கர்தாரை முழங்கின பலமல்லாரி கொம்புதயங்கின
திரைகடல்போலிருசேனை யானைபரி
செருக்களந்தன்னையே நாடினர் பாரசிலைவளைத்துப்பாணஞ்சாடினர்

வேழப்படை தன்னை கூட்டினர் தங்கள் வில்வளைத்துப்பாணம்பூட்டினர்
ஆழப்புவிதன்னில் ஆதிசேடன்முடி
ஆயிரமும் நஞ்சுகக்கின புவியதிர்ச்சியினற்கண்டம்விக்கின

வீமனைவந்துவளைத்தனர் மார்பின் சேமக்கவசந்துளைத்தனர்
பூமிதனிற்பாய்ந்து கேமியான்மைத்துனன்
புகுந்தனன் யானையின்கூட்டமே கண்ட போர்மன்னரெல்லோருமோட்டமே

வீமன்

மத்தகத்தின் கையாற்குத்துவான் தூக்கிவலதுகால் தன்னினுலெத்துவான்
அத்திவெகுதூரம் அந்தரத்திற்சென்று
அத்திகளாகவுதிர்ந்தன அப்போ தண்டமுசடுமதிர்ந்தன

கிம்புரிகட்டியதந்தமே மேருகிரிபோன்ற யானையினத்தமே
வெம்புலிபோல் வீமன் தும்பிக்கையைப்பற்றி
வீசிப்புவிமீதிற்றள்ளுவான் பெருவேலையின்சேல்போலத்துள்ளுவான்

பின்னங்காலை வாரித்தூக்குவான் தள்ளிக்கன்னங் கபாலத்தைப் போக்குவான்
மன்னன்வேழப்படை சின்னப்பின்னமாக
மண்டையுடைத்து எறியவேசோரி அண்டகூடத்திற் சொரியவே

யானையெல்லாம் பின்னல்ஓடின முத்துவேற் கானக்கவிதனைப்பாடின
சேனையோடக்கண்ட துரியோதனனப்போ
தானையைவேகமாய்த்தாண்டினன் தேரைசக்ராகாரமாகத் தூண்டினன் 2

துரியன்-வீமன்.

என்னம்புக்கு எதிர்நில்லடா எமாந்தாயாகிற் பின்னேசெல்லடா
உன்னம்புவீரமும் ஒருநொடிதன்னிலே
சின்னபின்னம தாக்குறேன்உன் சீவனைஎமபுரம் போக்குறேன்

வீமன்
ஆறம்புதன்னையெடுத்தனன் அரவக்கொடியோன் மேல்விடுத்தனன்
பாரத்தேர்வாசியும் பாகுங்கொடிஞ்சியும்
படுசூரணமாய்மடிந்தன கையிற்பற்றிய வில்லுமொடிந்தன

துரியன்
வீமன்மீது வாளிஎய்யவே சோனைமேக மன்னகணைபெய்யவே
சேமக்கவசமுஞ் சிம்மக்கொடியுடன்
தேருந்தூளாக வொடிந்தன வாசிசெலுத்திய பாகுமடிந்தன

தருமர்
சமரினில் வீமனிளைத்தனன் என்று தருமருப் போகளைத்தனர்
தமரினில் வெகுபேரை தக்கத்துணையாக்க
தான்சென்று னுத்தமபானுவே எந்தச்சமரினுஞ் செயம்பெற்றகுனுவே

வீமன்
இளைத்தவனுஞ் சோகமாறினன் அவயமெழுந்தாக கீர்சிறினன்
வளைத்துத்துரியனை துளைத்தொருவாளியால்
மண்ணினில் வீழ்ந்திடச்செய்யவே பாயும்வாசிநாலின் சிரங்கொய்யவே
ஓடியெடுத்தனன் மத்திரன் தண்ணீர் தேடிக்கொடுத்தனன் மித்திரன்
நாடியசகுனியும் வாடிமருகனைக்
கூடியெடுத் தொருதேரிலே அவனைக்கொண்டு போனார்நான்காம்போரிலே
மைந்தன்மூன்றும் நாளில்வீழ்த்தினன் அவன்றந்தையிவன் வீரந்தாழ்த்தினன்
எந்தன் முன்னேசமர் தந்திடுநீயென்ன
இரையற்றபுலிபோலச்செல்லவேமுத்துவேற்புரையற்றகவிதனைச்சொல்லவே 3

துரி. தம்பிஐந்துபேர்.
வீமா உனக்கென்னவீரமா புவிவேந்தன்றம்பி மார்கள்சோரமா
பூமானுமெங்களை நீமானமில்லாமல்
போக்கு வேனுயிரென்றுபேசுகிறாய் வில்விற்பூட்டநாணி தன்னைக்கூசுறாய்

வீமன்
வீசுங்கள் வாளியைப்பார்க்குறேன் ஓராசுகத்தாலுயிர் போக்குறேன்
மூசுபலாக்காய் முறிந்ததுபோலவே
முடிஐந்தும்பூமியிற்றள்ளுவேன் மார்பில்அடிவைத்துப் புலிபோலத்துள்ளுவேன்

எதிரிகள்
மாடுதுள்ளும் பொதிசுமக்காதென்பா ராடுமரிக்கொடியுமக்கா
காடுசெடிமலை ஓடித்திரிந்தநீ
காவலரை வெல்லலாகுமாநீயும் கேவலமாய்ச் சொல்லப்போகுமோ

வீமன்
பேருக்கோர்பாணத்தைதொடுத்தான் அவர்கள்தேருக்கொன்றாகவேவிடுத்தான்
காருக்குள்பேரிடி போரிட்டதைப்போல
கந்தாமைந்தையும் போக்கினன்தேரை கதையொன்றினாலே தூளாக்கினன்

ஏகசமர்
ஒருபக்கம் வீமன்விசயனும் மற்றொருபக்கம் நகுலசாதேவனும்
இருபக்கமபிமனும் இடும்பன்மருகனும்
இவரோடு உத்தமபானுவே கூடிஎதிர்த்தார் வேறெதிரிலாச்சூனுவே
எழுவரும் பாணத்தாற்சாடவே குருதிஎங்கு வெள்ளமாகவோடவே
கழுகுபருந்துடன் காகம்பறந்திட
களமெங்கணு நிழலாகவேசேனை களைத்ததன்வழியாக ஏகவே

வோற்ற கொடியெனவாடவே புவிவேந்தன்சேனை பின்னாலோடவே
காரோத்தகிறமதன் சீரோத்தபகதத்தன்
பேரோத்த யானையைக்கூட்டினான் வெற்றிபெறுவே னென்றுசிலை நாட்டினான்

கடோற்கசன்

கண்டான் கடோற்கசமீளியே கோபங்கொண்டான் கைமிற்கோடிவாளியே
திண்டாடஅவன்யானை திடம்பெற்றவுடல்ரெண்டு
துண்டாகவெட்டி எறியவேகணைசோனை மழைபோற் சொரியவே

இபமாயமாகவே ஓடினகளமெங்கும் விழுந்துதள்ளாடின
தபங்கெட்டுமுனிவருஞ் செபம்விட்டு நின்றிட
தாழ்ந்தது பகதத்தன்சேனையே புவிவீழ்ந்ததுவுயிர் நீங்கிவானையே

பயந்தன்று பகதத்தன்ஓடினான் முத்துவேற்செயம்பெற்றகவி தனைப்பாடினான்
வயம்பெற்றதினகரன் மகரங்குதித்திடும்
வாரிதிதன்னிலே மூழ்கினான்சூரியன் யாரினிகெதியென்று மாழ்கினான் 4

## ஐந்தாம் போர்ச்சருக்கம்.

கண்ணன் துதி.

கார்மர்முகிற்கோல மனத்தின்க ணிறுத்தக்கதி யெய்துமே
போர்மா வதைத்தேவுங் கம்சன்ற னுயிர்கொண்டு புனல்வாவியின்
நீர்மேவு பகன்கொக்கின லகைப்பிளந்து நெடுகில வீழ்த்தியும்
சீர்மேவு காளிங்கன்முடி நடித்தவ்வடிசிரஞ் சூடுவாம் 1

எங்கும்பேரிகை யடித்தனதொனி எழுந்தண்டகோளம் வெடித்தன
பொங்குங்கர்னபூரி சங்குமுரசுகள்
பூமியெங்கணு மதிர்ந்தனவானிற் பொருந்தும் உடுக்களுதிர்ந்தன

அலைகுமிழி நுரைபோலவே புவியரசன்பெருஞ் சேனைசாலவே
சிலைவேத கலைகற்றோர் உலைவாயனற்போல
செருமுனையில் வந்துகூடினார் எதிர்த்தோர் கருவறவே வாளிசாடினார்

குரக்குக்கொடிசிறப்பு,

அரக்கன் ராவணனைக் கொன்றேன்இப்போ தருச்சுனன்தேர் மீதுநின்றேன்
இறக்கத்துரியனை பறக்கச்செய்வேனென்று
குரக்குக் கொடியுங்கூத்தாடின மாயன்குறிப்பிட்ட வழிதேருமோடின

அருச்சுனன்.

நதிமைந்தனிடங் கணஞ்சென்றனன் கொல்லும்விதி வந்ததெனமுன்னால்
[நின்றனன்
சதிகொண்டகலிங்கேசர் குதிகொண்ட தேரின்மேல்
தனுவளைத்துப் பாணம்போடவே விசயன்சரமெய்ய அவர்பின்னாலோடவே

அசுவத்தாமன்.

ஆரியன்மைந்தனுங் கண்டனன்யார்க்கும் அடங்காமிகக்கோபங் கொண்டனன்
வீரியமாய்நின்ற விசயனேயிப்போது
வில்லெடுத்தென்முன்னே நில்லடாபதில்வேறு ஏதாகினுஞ் சொல்லடா

அருச்சுனன்

சூரியவத்திரந்தொடுத்தான் பொங்கிசீறிய சர்ப்பம்போல் விடுத்தான்
எறிபதேர்வில்லு மிவுளியுஞ்சாரதி
பாரினில்வீழ்ந்து மண்ணாகவே விட்டபாணம்ரெண்டு துண்டாய்போகவே

### அசுவத்தாமன்.

கஞ்சமலர்த் தாரான்ஓடினான் முத்துவேற்செஞ்சொற் கவிதனைப்பாடினான்
வஞ்சக்குடிகொண்ட நஞ்சுக்கொடியோனின்
மன்னர்கள் வீமனைசாடவே அவர்கள்மணிமுடிகள் கழன்றோடவே 2

### துரி. தம்பிமார்கள். வீமன்.

மன்னன் தம்பிமார்கள்கூடியே நின்றமருத்தின்மைந்தன் மீதோடியே
வன்னக்கணையினா லுன்னையுமிப்போது
வானுலகங் குடிபோக்குறேன் அன்றிவனவாசமுன்ன் தாயாக்குறேன்

சல்லியன்சகுனியுங் கூடினார்வீமன் சாத்தினால்மெலிந் தன்றோடினார்
வில்லொடுமுன்னின்ற வேந்தன் றம்பிமாரை
அல்லற்படவானி லோட்டினான் அள கேசனிடம்வெற்றி நாட்டினான்

### துரியன்.

தம்பியரடிபட்டுமாளவே மனம்வெம்பித் துரியனும்மீளவே
அம்பொடுவில்வேந்தி செம்பொற்றேரிலேறி
அனிலன்மைந் தனைவிகொள்ளுவேன்சிர மம்புவிவீழ்ந்திடத் தள்ளுவேன்.

கையிலோர் வில்லையெடுத்தனன் வீமன்மெய்யிலையிரு சரம்விடுத்தனன்
பையரவக்கொடி பார்திபன்வாளியும்
பாய்ந்தது வீமனினமார்பிலே குருதிதோய்ந்து நின்றதொருசார்பிலே

### வீமன்

அடல்வீமன் சோபமதாகியே துரியன்மிடற்வீழ கோபமாயேகியே
சடசடவெனவாளி விடவிடவப்போது
சாய்ந்தனன் தேர்தட்டுத்தன்னிலே முடிவீழ்ந்தது போர்க்களமண்ணிலே

### பூரிசிரவர்யு

வாரிதிபோற் சேனைகூட்டினான் பார்த்தபூரிசிரன் தேரையோட்டினான்
தேரின்மேலேநின்ற செயவீமன்மீதிலே
ஓரிரண்டுகணையெய்யவே வீமன்உடம்பும் புண்ணாய்நொந்து நையவே

### சாத்தகி.

பூரிசிரனொரு தீரனாஇந்தப்புவியரசர் போற்றும்வீரனா
பாரினில்வீமனை போரினில்மதியாமல்
பாய்ந்தவனை உயிர்போக்குவேன் சிரஞ்சாய்ந்தவனை விழத்தாக்குவேன்

### பொது.

இருவரும்வாளியைத் தொடுத்தார்திக் கெட்டுமறைந்திட விடுத்தார்
மருவறும்போரினில் இருவரின் விற்களும்
வளைத்திட ரெண்டாயொடிந்தன கீழ்வாய்கடித்ததர்மடிந்தன

புவிதனிலிருவரும் பாயவேகண்ட போர்வீரர்கள் யுத்தமோயவே
ரவிமதிஎனபல கதிவந்துவாளினால்
நாலிரண்டு திசைசுற்றுவார் வாளைக்கோலிப்பலமுடன் பற்றுவார்

வையாரயிற் கணைசூலமாம்கூர் வாள்கப்பணம் பிண்டிபாலமாம்
கையாலெடுத்தமர் செய்யாயிருபத்து
ஐயாயிரமன்னர் மாண்டனர்இந்த அம்புவியரசையும் வேண்டலர்

அலக்கணுற்று சேனையோடவே முத்துவேல் வலக்கணுற்ற கவிபாடவே
சிலைக்கைவயம்பெற்ற துரியோதனன்முதல்
தலைக்கைவைத் தொருமித்துஓடினார் சேனைதன்னுடன் பாசறைநாடினார் 3

## ஆரும் போர்ச்சருக்கம்.

### கண்ணன் துதி.

கடுவுறைவாயுள கட்செவி சயனத்தின்
நடுவுற பாற்கடன் கற்றுயிற் கொண்டவா
வடுவறு வாழிசங் கட்கதை கோதண்டந்
தொடுவுறு நாதனர் துவாரகை மன்னனே 1

ஆரணமொத்தப் புரவிதோதனிலே பிணித்து பூரணக்கும்ப மெடுத்துமாட்டினன்
வாரணம் நடுங்கவன்று வோட்டினன் [—தேரையெட்டு

வீமன்

வஞ்சமற்றவீமனவ நெஞ்சினிலஞ்சலி செய்துதஞ்சமையா உன்னுபயபாதமே
செஞ்சொலெர்தனுக்கு ஐந்தாம்வேதமே [—தங்களது

துரோணன்

என்றுசொல்லி வீமனிற்க கன்றியத்துரோணனூறு பொன்றிடும் வாளிவீமன்
நின்றவீமனுங்கதை யாற்சாடவே மேற்போடவே—தேரின்மீது

பஞ்சவரென்னு மிருளுக்கஞ்சுமோ செங்கதிரென்று அஞ்சரீகந்தன்னைவில்லிற்
நெஞ்சுக்குநோராக வதையோட்டினன் [பூட்டினன்—வாயுமைந்தன்

குருவென்று சொன்னலொரு கும்பிடுஉந்தனை வெல்லமருவுமோ எந்தன்கதை
வெருவுமோ காட்டின்புலி மெய்யனே ஐயனே—பூனைக்கென்றும்

துரோணன்

அந்தணனுந்தன்மனது வெந்தனல்மெழுகெனவே கந்தவாகன் மைந்தன்றனை
மந்திரதேவாத்திரங்கட் செல்லவே [வெல்லவே—ஒருசோடி

வீமன்

யோதனத்தில் வேதக்கொடி பாதலத்திலேயழுந்த வேதமொத்த நாற்புரவி
காதஞ்செல்லும்தேரை அளாய்தட்டினன் [வெட்டினன்—கொடிதன்னில்

வென்றவீமனுக்கு முன்னேநின்ற சல்லியன்றனையே இன்றெனக்குமுன்னே
மில்லையென்றுவிப்போ பின்னேசென்றிடு [சற்றுநின்றிடு—உனக்குவீர

சல்லியன்.

சல்லியனும்வில்வளைத்து வல்லியம்போல் நாணியேற்றி சாடினனேர்கோடி
மூடுபனிபோல வீமன்முன்னையே [பாணந்தன்னையே—கவிந்துபெய்யும்

வீமன்

அத்திரமெடுத்து வீமன்மத்திரனேறியிருந்த சித்திரத்தேரினைத் தூளதாக்கினன்
கைத்திறத்தினலே வுயிர்போக்கினன் [—வில்லும்வாசி

மற்றவரசர்கள்.

மேவலர்படையினின்ற காவலம்புவி புரக்குங்காவலர் வந்தாரனந்தக்கோடியே
தாவரும்வீமனைப் பாணஞ்சாடியே [—வெற்றிபெற்ற

அங்கம்பதைத்திட வுக்ரசிங்கம்போ லெழுந்து வீமன்செங்காத் திற்றண்டு கொண்
பங்கமாய்ப் படீரெனவெடிக்கவே [டடிக்கவே—கபாலமுடி

ஆனைபரிசேனைதேரை வானவன் மைந்தன்றமையன் கானகத்தீயன்னவோடி
லானகவிநம்ம தென்று பாடினன். [சாடினன்—முத்துவேற்சொல் 2

விகர்னன்

மன்னன்சேனையோடுவதைக்கண்டனன் விகர்னனுமப்போது கோபங்
[கொண்டனன்

பொன்னசைல மென்னவொரு வன்னாதமீதிலேறி
என்னவிதுவாச்சரியமென்றனன் வில்வளைத்து எமனைத்தலைமனிடம்
[சென்றனன்

**அபிமன்யு**

காண்டீபன் மைந்தனுமதைப் பார்த்தனன் தன்ரதத்தைத்தாண்டியே
[சென்றிடமுகம் வேர்த்தனன்
தாண்டியொருவாளியினால் தனுதேர்புரவிபாகுந்
தீண்டிடாவகையினிற்றூளாக்கினான் கால்நடையாய் திகைத்துவென்
[கொடுத்திடப்போக்கினான்

**விகர்னன்**

தம்பிசித்ரசேனன்றருந்தேரின்மேல் பலவம்பெடுத்தபிமன்யுவின் நேரிலே
வெம்பிடவனேகவாளி தம்பியுந்தானும்விடுக்க
அம்புகொண்டனைத்துமெதிர்வெட்டினான் வீண்வம்புபகதத்தன் வந்துகிட்டினான்

**அபிமன்யு**

மத்தபகதத்தனேநில்லடா என்றன் வாளியொன்றினுக்குப்பதில் சொல்லடா
அத்திரமெடுத்து பெரும் மத்தகந்தனையொழித்து
வெத்திதனக்கென்று நிலைகாட்டினான் கால்கள்ரெண்டுந் தத்திடப்பின்னாலவனை
[யோட்டினான்

**விகர்னன்**

மைத்துனனுமற்றதம்பிமார்களே கூடிவந்தனரனந்தமான பேர்களே
சித்திரக்கணையாலவர் நெத்தியைப்பிளந்திடவும்
எத்திறத்தினாலும் வெல்லக்கூடுமா உயிர்பிடிக்கும் எமனுமிவனிடத்தில் நாடுமா

தம்பியருந்தானுஞ்சேனைவாடவே சூரியனுஞ் சாய்ந்துமேற்றிசைக்
[கிரிக்கோடவே

பண்புறுமுத்துவேற்கவிக்கன்புறுமபிமன்யுவும்
பாண்டவருமே புகழ்ந்துபாடினர் தங்கள்தல்கள் பாசறையதனிடமேகூடினர் 3

## ஏழாம்போர்ச் சருக்கம்

### கண்ணன் துதி

ஆயர்கோனுடன் உலூகலமறை யருகிருக்கவே சோதை கண்முனம்
காயம் பூவினிற் காமுங்கால்களுந் தாழவீழ்ந்திடத்தவழுங் கண்ணனே
மாயமாகுமுன் தந்திரத்தினால் மருதொடித்துமகிழ்ந்து நந்தர்கோன்
சேயனாகித் தினந்திரிந்திடும் செங்கண்மாலின் சேவடி வணங்குவாம் 1

இருதாச்சேனையெழுந்திட சேடன்பெருமுடிசதம் பத்தழுந்திட
வருங்கரி கூட்டமும் அரும்பரி நாட்டமும்
வாகைகாவளைக்கொம்பு கோட்டமும் வெற்றிவாளேந்தி செல்பவரோட்டமும்

பேரிகைதானுமடித்தன சத்தம்பூமியதிர்ந்துவெடித்தன
சீறியபாம்புபோல்சாரி வரும்வீரர்
வீரியங்களெல்லாம்பேசுவார்போரில் வென்னிடத்தன்னிடங்கூசுவார்

சந்தனமாயிரஞ்சொச்சமாம் கூடிவந்தமன்னர்கோடி லெட்சமாம்
அந்தணன் மைந்தனும் ஆரியன் கிருபனும்
சிந்துவின்மைந்தனுங்கூடினர் இன்றுசெயம் நமக்கெனக்கவிபாடினர்

மத்தகய பகதத்தனும்போரில் வெற்றிபெறும் பிரசித்தனும்
ஒற்றதுர்ச்சாதனன் மற்றதம்பிமார்கள்
தத்தம்தேரின்மீதுஏறினர் சண்ட மாருதம்போலவே சீறினர்

### அருச்சுனன்

தானவரைவென்ற சூரனும் சிவன்தன்னுடன்போர்செய்த வீரனும்
வானன்மைந்தன் வேணுகானன்றேரோட்டிட
மற்றொருநால்வரும்பின்னையே வந்துவணங்கினார்கோபாலன்றன்னையே

மைத்துனனுந்திட்டத்தூய்மனே மாசுணவூகம் வகுத்தனன்பூமனே
ஒற்றிடுமபிமன்யு வெற்றிகடோற்கசன்
அத்திமாதேருங்காலாளுமே செல்ல வதிருமாதிசேடன்றோளுமே

இருதளமும் வந்துகூடினார்மே லெழுந்துவானவரும் ஓடினார்
மறுவறுமுத்துவேற் குருவருட்கவிதன்னை
மகிழ்ந்துசந்தோடமாய்ப்பாடவே கேட்டமயிலினம் மலைதோறுமாடவே

### வீடுமன்

வீடுமன்சகடவியூகமே வகுத்துநின்ற விந்தையென் சொல்வேன்வேகமே
ஆடும்பனைக்கொடியை நீடுந்தேர்தன்னிற்கட்டி
அடித்தான்பேரிகைதன்னையே வெற்றிமுரசும் அரவகொடியோன்முன்னையே

### துரோணர்

அந்தணன்றன்தேரையோட்டினான் வழுதிபஞ்சவன் நொந்திடப்பாணத்தால் [வாட்டினான்
வந்தனன்வீமன் மைந்தனும் வெந்தணற்றுரோணன்மீது
முந்தியொருவாளிஎய்யவே புரவிநாலும் அந்தோ புவிதன்னில்விய்யவே
வெண்ணையுண்டகண்ணன்றம்பியே சுதாயுகெட்ட எண்ணமதைக்கண்டு [வெம்பியே
வண்ணவிற்றனைவளைத்து எண்ணருங்கணைவிடுக்க
மாய்ந்தனர்கோடானகோடியே சுதாயுவில்லும் ஒய்ந்தனப்பின்னாலேஓடியே

சகுனிசல்லியனும் ஓடினான் வீமனும்வெற்றி தாரதனைபோரிற்சூடினான்
தருமேருவெனுந்தேரில் மிகுங்கோபவில்விசயன்
தான்சிம்மம்போலஎறவே உலகையளந்தோன்விளைவினிலூரவே

வீடுமன்முன்னே தாத்தினான் கம்சனின்மண்டையோடுடைத்தத்திறத்தினான்
சாடுமிருவர்பாணங் காடும்பற்றியெரிய
ஓடுமதிகவேகமே வானிற்பருந்து கூடுங்கழுகுகாகமே

புரமெரித்திட்டஈசனேபோலநகைத்தான் திறவட்டகுலநேசனே
உரம்பெற்றயிருவோரும் வரம்பெற்ற அத்திரங்கள்
காம்பற்றித்தான் விடுக்கவே தங்களின்மீது கணைபடாமற்றடுக்கவே

குகன்றாருகன்போற்றுன்னவே சண்டைசெய்தார கவன்ராவணனுமென்னவே
பகலுமிரவும்போல பாணம் விட்டார்கள்சால
புகலுந்தேயுவும் வாயுவேபோன்றயிருவர் இகலுஞ்சொல்ல நாவோயுமே

பட்டவர்த்தனரோடியே எதிர்த்து வீணாய்கெட்டனரொத்தனைகோடியே
அட்டதிக்குங்கரிகள் கெட்டுவீழ்ந்தப்பரிகள்
வட்டாதங்கண்நாசமே வீடுமன்சேனை பட்டததிகமோசமே

குற்றுக்காற்றானொடிந்தன துவசமெல்லாம் அற்றுவீழ்ந்துப்படிந்தன
பற்றியிருதாத்தும் பாணம்படாதாருண்டோ
பாடும்முத்தவேற்கவியே வதனைக்கேட்டு ஓடுமேற்றிசைரவியே

### கண்ணன் துதி.

கமலபூவினி லுதித்த நான்முகன் ககனபூமிபல் பஞ்சபூதமும்
தமதுசிருட்டியாலுற் பவித்தவன் சகலதேவருஞ் சதுர்மறை
யுமதுசேவடி தேடிநின்றிட உம்பர்நாயகா ஐவரில்
விமலபார்த் தனுக்கிரத மூர்ந்ததோர் விந்தையாரும் வியப்பதே 1

### அலம்புதன். வீமன்.

தருமன்றம்பீ வீமனெனக்கே அவன்றலைதுணைத்திடுவே னானிங்கே
அருமையென்றமையனை ஆற்றங்கரையிலே
ஆத்திரத்தோடன்று வென்றவன்பார்ப்பன் வேத்திரகியத்திற் கொன்றவன்

### வீமன்

அலம்புதனே யிங்குநில்லடா உன்னண்ணன்போன விடஞ்செல்லடா
தலம்புகழுந்தனை நிலம்புகவைப் பேன்யான்
தாக்குவேன்வாளி யாலுன்னையே உயிர்போக்குவேன் சூரியனின்முன்னையே

### அலம்புதன்

பழிக்குப்பழியுனை வாங்கவேதருமன் பார்த்தாகுலன் றேவனேங்கவே
விழித்திமைக்குமுன்னே விண்ணுலககேற்றுவேன்
வீமாவுனக்குநான் எமனேகாட்டில் வெட்கமிலாச் சென்றபூமனே

### கடோற்கசன்

இடும்பிமைந்தனதைக் கேட்டனன்ஒரு இடியத்திரந்தனைப் போட்டனன்
விடும்புகழ்தேரையும் வில்லொடுவாசியும்
கெடும்படி துண்டாக வெட்டினன்சீறி கிட்டிஎதிரோடி மூட்டினன்

எல்லையிலாவமர் செய்டவேவீர ரிருவருங்கணை மழைபெய்யவே
புல்லறிவாளன்செய் வல்லமையைக்கண்டு
நல்லறிவான்கோப மீறினன்பல நாகவுருக்கொண்டு சீறினன்

### கடோற்கசன் அறிவான்.

ஒருபுறமிவனுத்தஞ் செய்யவேமற் றொருபக்கமவன் விடம்பெய்யவே
இருதரத்தினும்வேந்தர் எலிகள்போலேங்கியே
பொருவருமிருசேனை மாண்டனர்சென்று பொன்னுலகமதை யாண்டனர்

### அலம்புதன்.

மாயக்கருடனாய் வந்தனன்பறந்து வட்டமிட்டு சேவைதந்தனன்
ஆயன்பெருமாளென் றறிவான்துதிசெய்ய
அலம்புதன்பின் னோடிவெட்டினன் கண்டஅபிமன்னுவும் வாடிகிட்டினன்

### அபிமன்யு.

கண்டவுடனம்பை யள்ளினன்சேல் கெண்டைபோல் பாய்ந்தெதிர் தள்ளினன்
விண்டலம்போனலு முந்தனைவிடேனென்று
வீரபிமன்யுவுமோடினன் முத்துவேற்கூறதிசயக் கவிப்பாடினன் 2

## ஒன்பதாம் போர்ச்சருக்கம்.

### கண்ணன் துதி.

நதியாவமூழ்கி விதிநூற்பிதற்றி நாவமுலர்ந்து பவத்தின் 1
கதியானமேன்மை நிதியானமோட்சக் கருதாதிருந்த காவீர்
மதியாதமூவி ரெண்டானசமய வடிவாகிநின்ற வதித
பதியானவனை துதியாநிற்போர்கள் காணும்பரமபதமே

துரியன் கன்னனிடங்கூறல்.

அண்ணா உனக்கிணை யாருஇந்தஅம்புவி தன்னிலேகூறு
மன்னாதிமன்னர்கள் மாண்டார்பலகோடி
என்னாவென்றிப்புவியாள்வது இங்குளத்தனை பேர்தம்பிமாள்வது

சிவன்மூன்னமத னென்ன வெம்பியே வீமனவன்முன மாண்டார்கள்தம்பியே
எவன்வந்தவன்றனை எதிர்த்துப்போராடுவார்
என்னாநான்செய்வ தெனண்ணனேமகுட மன்னாதிகட் போற்றுங்கன்னனே

பஞ்சவர் தன்னையுங்கொல்லுவேன் கோபாலகிட்டணனையுங்கொல்லுவேன்
அஞ்சனமேனியன் நெஞ்சமெரியுண்ண
செஞ்சுடர்வாளியைப்பூட்டுவேன் பண்டுதிருமால் பதவிக்கேஓட்டுவேன்

விசயனைக்கொல்வதபாரமா எதிர்த்து வெல்லாவிட்டாற் சுத்தவீரமா
நிசைபுலருமுன்னம் நீறாக்கிவிடுவேன்யான்
தசைகுருதிமூளைசிந்தவே யமதருமன் மைந்தன் சேனைபிந்தவே

பாட்டனார்சொல்லினைகேட்டையே இப்போபார்த்தபின்நெல்லிக்காய்
கேட்டதுண்டோ எந்தகிழவனுக்கும்வீரம் [மூட்டையே
நாட்டிலுண்டோவதைச்சொல்லுவாய் வெற்றிநான்றனையெப்படி வெல்லுவாய்

வீடுமன் கன்னனை நிந்தித்தல்

அம்புலிக்கு நிகர்சுங்கனா வீரஅருச்சுனனின் நிகராங்கனா
என்புயவலிமையையான் சொல்லிஎன்பயன்
இப்போதேவுங்களைக்கொல்லுவேன் நாளைத்தப்பாமலென்பதஞ் செல்லுவேன்

விசயனைக்கொலவுன்னாலாகாது உங்கள் வென்னீரால் வீடொன்றும்வேகாது
இசைமுத்துவேற்கவி இப்போதேபாடுவேன்
எதிர்த்தவர்களைச்சூறையாடுவேன் ஐவர்க்கிப்போதேயான் முடிசூடுவேன் 2

அலம்புதன் வீமன்

எங்கே வீமனென்று கூடினான் அலம்புதனா மங்கேமல்யுத்தின்மேவினான்
செங்காத்தினாலே வீமனங்கமுறவேபிடித்து
பங்கமுறவேபுவியிற்றள்ளினான் உக்ரவீரசிங்கம்போற்குதித்தெழுந்துதள்ளினான்

அலம்புதன்

எக்கரமுடன்குலாலன்சக்கரம்போல சுழன்றுதக்க வீமனைத்தரையிற்றள்ளினான்
உடம்பில்ரெத்தங் கக்கிடநகத்தினாலே கிள்ளினான்

ஆர்ப்பரித்தெழுந்தாக்கன்காற்பிடித்து மேற்சுழட்டி தோற்கடித்து தோள்கள்
பாற்குடித்தபற்களெல்லாங்கொட்டினான்[ரெண்டுந்தட்டினான்-தாயிடத்தில்

கட்டியிங்காத்தினாலே முட்டியிஞ்சிரத்தினொடு தட்டியுநிலத்திலே விழுந்தனர்கை
கொட்டியவர்பந்து போலெழுந்தனர்

முட்டியிறுகப்பிடித்து கொட்டுவர்சூடத்தினொடு தட்டுவர் சிரத்தில் மூளை
வட்டவடிவாக வந்துபிந்தவே [சிந்தவே—இருவர்களும்

அம்பரத்தவர் திகைக்கத்தென்புலத்தவர் பதைக்க பின்புறத்திலோடிவந்து
முன்புறத்தில்வாடா வென்றுகத்துவார் [குத்துவார்—எதிரிதனை

கோடையிடியென்னவமராடையிலே வீமனவன்முடையிலே எட்டியேயறைந்
ஆடையுங்குலைந்திடக்கரைந்தனன் [தனன்—அரக்கனிடை

இப்படிக்கிருவர்களும் தப்பிதமிலாமல் யாருஞ்செப்பமுடியாதவமாடினார்
ஒப்புவமையில்லாக்கவிபாடினார் [—முத்துவேலின் 3

அலம்புதன் வீமன்யுத்தம்

வில்லெடுத்துஎந்தன்முன்னேநில்லடா மல்யுத்தத்தில் வென்றுவிட்டாயோ நீ
கல்லெடுத்ததோள்விடலை வல்லவனரக்கனைப்போல் [யென்னைச்சொல்லடா
கொல்லுவேனுந்தனைக்கணந்தன்னிலே எங்களது செல்வதுரியோதனன்றன் [முன்னிலே

வீமன்

செப்பியராவணன் முடிபத்துமே ராகவனுல்குப்புற விழுந்ததுவோத்துமே
எப்படியுமுந்தனைநானிப்போதுவிடுவதில்லை
அப்புறம்போகாமலிங்கே நில்லடா உனக்காண்மையிருந்தாலெந்தனைவெல்லடா

வாளனையகூரெயிற்றால் கீழதாத்தைக்கடித்து
தோளிணையிற்பாணமைந்து எய்தனன்—ஆடித்திங்கட்
சோனைமேகம்போலகணைபெய்தன்

வீமன்

வாளியைவிலக்கிப்பலகூளிகள்கடஞ்செய்திட
தோளிணையில் ஒன்றையறவெட்டினுன்—அரக்கனுமே
சேணிலத்திலே மறைந்து கிட்டினுன்

அலம்புதன்.

மேருவென்று சொல்வதற்குநேரு மென்றஓர்மலையை
வேருடன் பிடுங்கி வீமன்மீதிலே—நேருபட
சீருடனெறிந்து நின்றப்போதிலே

அபிமன்யு

பார்த்தபிமன்றன் முகமும் வேர்த்தொழுகவம்மலையை
நீர்த்துளிபோலவுடைத்துத்தள்ளினுன்—ஒருவேலை
பார்த்தெடுத்தரக்கன்முன்னே தள்ளினுன்

காலன் காத்தேயிருந்தசூல மொத்தவேலதனை
பாலனரக்கன்றன்மீது எய்யவே—அப்பொழுது
மாலைநிறத்தோன் சிரமும் விய்யவே

மற்றுமுள்ளசேனைசிரங் கொத்துடனே அத்துவிழ
அத்திரமெடுத்தபிமன் சாடினுன்—முத்துவேற்சொல்
சித்திரம்புகழ் கவியைப்பாடினுன் 4

## பத்தாம்போர்ச் சருக்கம்

### விடுமன் களங்குறுகல்

### கண்ணன் துதி.

வணக்கும் பிரகலாதனுக்கு வந்தயின்னற்றனையெலாஞ்
சுணங்குமாறு பாதுகாத்த தோன்றலெங்கட்கண்ணனே
பிணங்கிநின்ற கசிபனுக்கு பெரிய நரசிம்மமா
யிணங்கியன்று காட்சிதந்த திவனலாதுயாவனே 1

வீடுமன் நடந்தானே அமர்செய்ய விசயனைத்தொடர்ந்தானே
ஆடும்பனைக்கொடி வாடிவதகிட கோடியானசேனை நாடியேசூழ்ந்திட
சல்லியன்கிருபனுந் தாமனுஞ்சகுனியும்

வல்லியம்போலவே வந்திருபுறஞ்சூழ—வீடு
ஆனையுடன்பரிசேனையுடன்றேரும் வானமீன்போலொளிர்மண்டலீகருடன்—வீ
எக்காளம்பேரிகை தம்பட்டை கொம்புகள்முக்கால் முழங்கிட எக்காலு
டங்காவுடுக்கைகள் தம்பூருவீணையும் மோயாமல்—வீ]

மங்காதவாத்தியங் தங்காமற்சமர்க்களம்—வீ
கத்திமுனையில்ல சுத்திப்பறந்திட
அத்திபிவளிகள் அயர்ந்துபடுத்திட—வீ
துற்சகுனம் பலத்தோன்றிட வீரனும்
அச்சமொன்றியே அதாதனுகியே—வீ
எத்திசையும் புகழ்முத்துவேலின்பரி
சுத்தமாங்கவி தனைநித்தம் போற்பாடியே—வீ 2

வீடுமன் விசயன்

வீடுமனுங்தேரிலேறினான் விசயன்மீதுவேக்கையன்ன வந்துசீறினான்
சாடுகின்றபாணமது மூடுபனிபோலகப்ப
கோடுகோடுவென்றழுகிறார் சேனைகளெல்லாம் வாடிப்பின்னாலோடி வீழ்குறார்

அட்டதிக்குந்தானதிரவே வீடுமன்கோபம் அண்டத்துதேவர்பதறவே
விட்டபாணம்பட்டுரெத்தஞ் சொட்டுசொட்டதாய்வடிய
பட்டணத்தைநாடியோடுவார் மணல்வறுத்து ஒத்தடம்போடென்றுகூடுவார்

இந்திரன்குபேரன்வாயுவே அந்தாத்திற் சந்திரன் சூரியன்றேயுவே
சுந்திரர்மனம் பதைக்க சந்துகள் வாடித்திகைக்க
அந்தரம்புதைந்துதுள்ளவே நீரைவாரி இந்திரன்லோகத்தைசெல்லவே

யானையொருநூறழிந்தன அடர்ந்தபரி தானுமறுநூறொழிந்தன
சேனையோரிரண்டுகோடி தேர்கள் பதினாயிரமும்
வானகத்திலன்றுசெல்லவே முத்துவேற்கவிதானவர்மகிழ்ந்துசொல்லவே 3

அருச்சுனன்

அருச்சுனனுங் கோபமீறினான் வீடுமன்மீது ஆலகாலம்போலசீறினான்
பற்குனனும் வில்வளைத்து சிற்சிலகணை தொடுத்து
சற்குணபாட்டன்மேல் விடுத்தான் வீடுமன்றன் பொற்கணையினாலேதடுத்தான்

கண்சிவந்துகோபமாகவே பாட்டனெதிர் காலன்போலபாணமேகவே
விண்சுழன்றுமண்சுழன்று வேலையேழுமேசுழன்று
வீடுமன்கைவில்லைவெட்டவே போடுமுனங்தேடியதுதன்னைத்தட்டவே

நெத்தியிற்புருவமேறவே எதிர்த்துநின்ற சத்துருக்கள்கண்டுசோரவே
புத்திபுத்தியென்றுசொல்லிபோகவுஞ் சேனைகளெல்லாம்
அத்திகண்டசிம்மம்போலவே வீடுமன்மேல் சத்தியொன்றுஏவசாலவே

வீடுமன்

தன்னிடம்வந்திடுமுன்னமே பார்த்தன்வேலைபின்னிடச்செய்திடுமெண்ணமே
என்னிடத்தில் உந்தனுக்கு என்னவேலையென்றுசொல்லி
பின்னிடப்பாணத்தாலடித்தான் உடனதனைசின்னபின்னமாக ஒடித்தான்

அருச்சுனன்

கண்ணாவிதுவென்னமோசமே வீடுமன்யுத்தங்காணவுந்தோணுதபாசமே
என்னயினிசெய்வதென்று எந்தனுக்குத்தோணவில்லை
எப்படிப்புவியிலுய்வது கண்ணாவுன்றன் சொற்படியினிமேற்செய்வது

கண்ணன்

வேண்டாஞ்சிகண்டியைக்கொண்டுவா வன்னிக்காக காண்டாவனமெரித்தவா
எண்டாவனக்கணம்பு தீண்டாவீடுமன்றன்னை
இந்தக்கணத்தில் வெல்லுவேன் உனக்குவேறு என்னவுபாயஞ்சொல்லுவேன்

சிகண்டி

சொன்னவுடனேயடுத்தனன் சிகண்டிகணை பின்னமில்லாமல் விடுத்தனன்
அன்னவன் முகத்தையிரு கண்ணினுலேகண்டவுடன்
அத்திரம்விற்றன்னைவைத்தன் றிலேகுனிந்து சித்திரம்போலாகைத்தனன்

துர்ச்சாதனன்

வீடுமனைப்பின்னே தள்ளியே சாதனனும் மேனடந்துசென்று துள்ளியே
காடுமன்னுதியினைப்போல் ஓடியொருஅம்பினுலே
கார்முகமதனைவெட்டினுன் சிகண்டிபின்னுல் போர்முகமிழந்தனட்டினுன்

சிகண்டி

மீளவுஞ்சிகண்டிமுந்தினுன் விசயனெடுவாளிகளநேகமுகந்தினுன்
ஆளியெனநின்றவய மீளியின்மேனிமுழுதும்
அருச்சுனன்வாளியும்பாய்ந்தது வீடுமன்றேகம் அமர்க்களந்தன்னிலேசாய்ந்தது

வீடுமன்

தேவருமவர்க்கிரங்கினுர் இருதாத்துயாவரும் வந்துவணங்கினுர்
தாவரும்முத்துவேற்கவி பூவருஞ்சுரும்பினம்போல்
பாவரும்பதத்தைப்பாடினுர் அயனான்மால் மூவருமிவர்க்குவாடினுர் 4

துரியன் அனுதாபம்.

பாருமிழந்தேனய்யனே எனக்குநல்ல பேருமிழந்தேன் மெய்யனே
சீருமிழந்தேன்தேச சிறப்புமிழந்தேனையோ
யாருந்துணையுமல்லவே சத்துருவான ஐவர்தங்களை வெல்லவே

வீடுமன்

வீரமுள்ளத்துரியனே இந்தச்சமரில் சோரம்யாரோ தெரியனே
பூரமென்னவர்ச்சுனன் பாணம்பாய்ந்ததினிமேல்
பரிதிமைந்தனைநாளையே தளபதியாயுறுதி செய்வாயிவ்வேளையே

அங்கர்பதியேவெல்லுவான் செயித்தேனென்று அரசேவுன்னிடஞ்சொல்லுவான்
புங்கவாளிகட்பட்டு அங்கமுருகுமென்னை
போற்றினுலென்னலாபமே அழாதேயென்று தேற்றினுனன்று சோபமே

பாண்டவர்.

பஞ்சவர்தானுஞ்சென்றனர் வலமாய்வந்துஅஞ்சலி செய்துநின்றனர்
அஞ்சாகத்தாற்சிரங் கொஞ்சமுயரவைப்பாய்
அருச்சுனவென்றுசொல்லவே சோரத்திரத்தால் அவனுயர்த்தினுன்மெல்லவே

வாத்தினுற்சாபம்பெற்றவா அசுரர்களை ஊத்தினுலன்று செற்றவா
சாத்தினுலெந்தனுக்கோர் சயனமளிப்பாயென்ன
தானுமப்போதளித்தனன் முத்துவேற்கவி மேலுஞ்சொல்லிக்களித்தனன்

வீட்டுமபருவம் முற்றிற்று.

## துரோண பருவம்.

கண்ணன் துதி.

தேகமும் பொறியும் யாருஞ் செப்பும் சூட்சமமா யெல்லா
வாகமும் நிறைந்து நின்று மண்ணொடு விண்ணும் நீங்கா
தேகமுமாகி யார்க்கும் மியல்புற மறிவானந்த
போகமுமாகி நின்ற பொருபெறு மாதியானே. 1

வீடுமன்பத்துநாள் போரிலேசெய்த யுத்தத்தைபாடினே மகிழப்பாரிலே
குடுமெம்புயத்தான துரோணவாசிரியன் செய்த—சுருன்
துகளருமைந்து தினமதிலிகலை புகலுவோராமே அகமகிழ்வாக—வீ

வீடுமன்றானும் வீழ்ந்தனன் கவசமிழந்து வெய்யோன் மகனுந்தாழ்ந்தனன்
மூடும்பனிபோல்வாளி சாடுமச்சுவத்தாமன்—சு
மூண்டமர்செய்யான் கிளைந்திடுமென்ன கணந்தனிலவர் களந்தன்னில்
[வந்தார்—வீ

அளகையான் மன்னனென்னவே மணிமகுடம் பளபளவென்ன துன்னவே
தளபதி துரோணனோடும் தம்பியர் தானையோடும்—சு
தார்வலம்புரியான் பார்முழுதாள போர்புவிதன்னிற் சீர்பெறநின்றான்—அ

நதியிலாநாடுஞ்சான்றதே என்றுமேதக்க நிதியிலாவீடும்போன்றதே
மதியிலாவானும் நல்ல சுதியிலாகானம்வேத—சு
விதியிலாவேள்வி கெதியெனவீடுமன் பதியிலாதன்றோ பார்மன்னன்சேனை—ந

சகடவியூகமாகவே நால்வகைப்படைதன்னை தானும்வகுத்துவகவே
பகடையாடியேயிந்த பார்முழுவதுந்தோற்ற—சு
பஞ்சவர்சேனை பதிக்கிரவுஞ்ச எஞ்சலில்யூகம் மிஞ்சிடவகுத்தான்.ச

தளபதியிருவர்நேரிலே பனிவெண்டிங்கட்குடையுடை கிருபர்போரிலே
இளம்பிறையென்னவில்லை வளம்பெறவே வளைத்து—ச
இத்தனையோர்கள் சித்ரும்புகழும் முத்துவேற்கவி போலுத்தமே
செய்தார்—த 2

சகுனி-சகாதேவன்.

மருத்துவர் மைந்தரிளவலே சகுனிகருத்துடன் பொரநின்றவளவிலே
ஒருத்தரையொருத்தர்போர் மறுத்திடமுடியாமல்
திருத்தமாய் மாமனைநாடியே வில்லிறுத்ததிலே வாளிகோடியே

ஒருகணையாற்பாகன்மாயவே மற்றிருகணையாற்றேருஞ் சாயவே
வருகணைதடுத்தவன் மார்பினிலேயொரு
பொருகணை விடுத்திவன்சாடினான் வீரம்புகழ் வெற்றிமாலையைச் சூடினான்

வன்றியோடுவான் போற்றண்டையேயெடுத் தோங்கிச்சகாதேவனண்டையே
தாண்டியடித்திட சாதேவன்கண்ணனை
வேண்டித்தன் தண்டை யெடுத்தனன்சகுனி வென்னிடப்பின்னால் விடுத்தனன்

வீமன்-துரியன்.

வீமனுந்துரியனு மோதினான்வாயில் வெற்றிச்சங்கம் வைத்தூதினார்
பூமனுந்துரியனின் எமனுமப்போது
பிடித்தவில்லை ரெண்டாய்வெட்டினான பெருஞ்சேனைகளைத்தண்டாற்றட்டினான்

சல்லியன்.

பல்லியர்தானுமுழங்கவே கண்ட சல்லியன்றானுமயக்கவே
வில்லினால்வீமனை கொல்லவேராசகம்
வல்லியம்போலவிடுத்தனன் தட்டிவாயுமைந்தனுங் கெடுத்தனன்

நகுலன்

சல்லியா என்முன்னேநில்லடா கையிற்றனுவெதற்காக நீசொல்லடா
சொல்லியென்சுடர்வாளி வில்லில்விடுக்கிறேன்
தோத்திடாயாகிற்றடுத்திடு உனக்குவாத்தியார் யாரோவிடுத்திடு

மோகனமுன்னுன்கு வாளியேசேனை முனிற்போல் விடுத்தானம்மீளியே
          பாகனைப்புரவிதேர் பற்றியதுவசமும்
நாகநுடங்கிடவீடவேகாலால் நடந்துமித்திரத்தானோடவே

பகதத்தனுடன்யாகசேனனே ஒருபகன்முழுதுஞ்சோமதேசனே
          இகல்சோமதத்தனும் புகல்வீரசிகண்டியும்
அகல்வானவர் கண்கட்கூசவே அம்பெடுத்தொரு வாயிரம்வீசவே

சிகண்டிவீரஞ் செப்பப்போகுமா எந்ததேசத்தரசர்க் குண்டாகுமா
          புகன்றிடவோர்நாவும் போதாதாயிரமில்லை
சகன்றிருத்தாளைதயின்கீர்த்தமே முத்துவேற் சொற்கவியின் றரும்போதமே 3

அபிமன்யு இலக்கணன்.

கார் நிகர்ப்போ லொத்தயானையே பெருந்தேர் திறல்பரி காலாட்சேனையே
          பார்த்திபன்மதலையும் பார்த்தன்மாமதலையும்
கோத்தனர் வாளிநிறையவே பூமிகொள்ளாமல் வானம்நிறையவே

இலக்கணன்

சூரியன்மகன் கோபமிறினான்கல் லெறியுண்டநாகம் போற்சீறினான்
          வரிகழலபிமன்வில் முறியவோராசுகம்
செறியாகவிட்டதும்பட்டதே வில்ரெண்டுதுண்டமாகி விட்டதே

அபிமன்யு

விற்றுணியைக்காம் பற்றினான் சிரமேலே காகனெனசுற்றினான்
          அற்றிடவாசியுஞ் செற்றிடப்பாகனை
அடித்தனன் யாருங்நடுங்கவே மண்டை வெடித்தனதேவரொடுங்கவே

இலக்கணன் வார்குழல் பற்றினான் கொண்டு வலக்காந்தன்னிலே சுற்றினான்
          அலக்கணுற்றமர்க்கள நிலக்கணில் வீழ்ந்திட
அபிமன்னன் றன்றேரிற்கட்டினான் எதிர்த்த அரசர்கள்தேர் தூளாய் கொட்டினான்

சிந்துபதி

தூண்டித்தேரபிமனுஞ் சென்றனன் அங்கு தாண்டியெதிர் சிந்துநின்றனன்
          காண்டிபன்மைந்தனை கணையெடுமீயென்ன
தூண்டிபின்மீன் போலதாபினன் வெகு தூரஞ்சிந்து பின்னுற்போயினன்

கன்னன்

அங்கர்பதி பின்னுற்செல்லவே டேயபிமன்னுநில்லென்று சொல்லவே
          பங்கப்பட்டவன்முடி அங்கஞ்சிதறிட
பாலனல்லயிவன் காலனேவிடும்பாணமதாமுகவேலனே

சல்லியன்

பார்த்த சல்லியனுமோடினான் கொடும் பாணம்விட்ட பிமனைச்சாடினான்
          வேர்த்தொருகாந்தண்டை சேர்த்தன்று வீமனும்
தேரைத்திடத்தண்டாலடித்தனன் மகுடந்தோளெலும்பெல்லா மொடித்தனன்

அபிமன்யு

சந்தையேயிதென்ன வீரமா எனக்கிவனை வெல்லுவதபாரமா
          சிந்தையாகுலத்தினால் நொந்து மயங்கிட
தேரிற்சல்லியனைத்தூக்கியே அபிமன் பேரிலவன்றனை நீக்கியே

சென்றானிலக்கணன்பின்னையே தர்மைத்திரியோதனன் காணமுன்னையே
          அன்றுமெமர்தன்னில் நின்றுடக்கல்ந்தங்கள்
வென்றானபிமன்ய சேனையே யாரும் பொன்றாரில்லை வாளிசோனையே

பாரும்நடுக்கிடப்போரிலே சிறுபாலன்றனை யெதிர்ப்பாரிலே
யாரும்நடுக்கிட அபிமனும்வீமனும்
அறம்பெற்றத்தருமனைக்கூடினார் முத்தவேல் வரம்பெற்ற பாமாலைசூடினார் 4

துரியன் துரோணரை வேண்டல்

அய்யாஎந்தனின்குருவே தளபதியாகவுன்னை அழைத்தேன் கற்பகத்தருவே
மெய்யாமனுவனைய பொய்யாவதிட்டிரனை—கருள்
விரைவினிலவனைச் சிறைதனில்வைத்தால் அரைநொடிதனிலென் குறையது
தீரும்—அ

துரோணர்

துரியாநீயென்னசொல்வது தருமன்றனையானும் சரியாயெப்படிவெல்வது
அறியாயோவீமன்பின்னும் அனுமக்கொடியோன்முன்னும்—சு
அவன்றம்பிநகுலன் இவன்தம்பிதேவன் சிவன்வந்தாலுந்தான் எவன்வெல்லக்
[கூடும்—து

துரியன்

நீருமக்குமில்லையா நம்மிடமது தன்னிற் சேனையில்லையோ சொல்லையா
ஆரம்மரவிந்தமார்பா ஐவர்தன்னையேவென்று—சு
அம்புவியாள நம்பினேனுனையே எம்பியர்யானு மிருந்திடச்செயிக்கும். நீ

துரோணர்

இப்பிறப்பிலுமாகாது உன்சொற்படிவெல்ல இனிபிறப்பிலும்போகாது
செப்பியவாரையான்றாய் கொப்பளித்துத்துப்பிடு—சு
சீர்பெறும்வாளி யேறரிதர்மன் போர்முகம்விடுத்தால் யாரதைத்தடுப்பார்—இ
தருமார்தனைவெல்லவே எழுகடன்மிசூழ்ந்த தரணியின்யாருமல்லவே
பொறுமையுடையதர்மன் அருமைக்கணையை விட்டால்—சு
புரந்தரனுபினும் நிரந்தரநில்லான் சிறந்திடுமுத்து வேற்கவிசொல்லான்—த 5

## பனிரெண்டாம் போர்ச்சருக்கம்.

மெய்யான் கௌவசிகனின் வேள்விதனைத் தானழித்த
மையாறு மாக்கிதனை வாளியொன்றினால் வதைத்த
கையாழிக் கார்மேனி கதிர்மதியும் போன்முகத்து
ஐயாவுன் றாள்காத்துக் காகியதோ விருசாபம் 1

பகதத்தன்

மிகமத்தயானை மேலேறினான் வந்துபகதத்தன் தருமர்மேல்சீறினான்
சிகைசெஞ்சுடரொத்து தகதகவெனதன்ன
சிலையொருமலையென்ன வளைத்தனன் எதிர்த்து செருவின்வந்தோரைத்
[துளைத்தனன்

தருமர்

கண்ணிலவன்றன்னைக்கண்டனன் மனத்தெண்ணிலாத கோபங்கொண்டனன்
விண்ணினுடுக்களு மண்ணிலுதிர்ந்திட
வேழத்தலை தயம்பாலடிக்கவே யானைத்துவேடத்துட்னேயொடிக்கவே

பகதத்தன்

யானைக்காதால் வருங்காற்றிலே வந்த சேனையெல்லாம் ரணச்சேற்றிலே
வானவிற்போல வளைத்தந்த தருமனை
என்வந்தாய் மானிடப்பூச்சியே என்னைஎதிர்க்கவுன்றனலர்மோர்சீசியே

தருமர்

முரசக்கொடியோனும் பார்த்தனன்கொற்றி முகமெலாமுத்துபோல்வேர்த்தனன்
சரசமாயிவனோடு சமர்செய்யலாகாது
தானும்பின்வாங்கிடப்போகாது பிரமன் றலையிலமைத்ததும்போகாது

பகதத்தன்

இடியிடித்தாற்போல் சிரித்தனன் களமெங்குமனலாயெரித்தனன்
        பொடிபொடியாய்ச்சேனை துடிதுடித்துமாள
புகைகப்பியெங்கினுமூடவே சேனைத்* திகைதப்பியவர் மனம்வாடவே

கண்ணன்

கண்ணனரக்கனைக்கண்டனன் உடன்காண்டீபனுக்கதைவிண்டனன்
        எண்ணிலாத்தர்மன்மேல் வெண்ணிலாயெயிற்றனும்
எகினானமர்தனைச்செய்யவே நீஎழுந்திருயவன் சிரங்கொய்யவே

அருச்சுனன்

சொன்னவுடன்வந்து தோன்றினான் தன் வன்னச்சிலைதன்னையூன்றினான்
        சன்னபின்னலாக பின்னமிலாமலே
தறுகணைவெட்டினான் முருகனேயொத்த குருபதி துருபதன்மருகனே

பகதத்தன்

அரக்கன்பூமியிற்குதித்தனன் செவ்வரக்கனல்போலக் கொதித்தனன்
        செருக்களந்தனிலன்று வெறுக்கொளும்புலிபோல
சிலைவளைத்தொருபாணமெய்யவே அதைத்தேவேந்திரன் மைந்தனுங்கொய்யவே

அருச்சுனன்

விடுத்தபாணங்களைவெட்டியே சென்றடுத்தவன்முன்பாகக்கிட்டியே
        தொடுத்தொருபாணத்தாற் கெடுத்தவன்வலிமையை
தடுத்தவன்சிரம் வீழத்தள்ளினான் முத்துவேற் கொடுத்திடுங் கவிபாடித்
[துள்ளினான் 2

துரோணர் தருமர்

ஆரியன்றர்மரைத்தேடினான் என்னோடமர்செய்யவாவென்று ஓடினான்
        பாரினிற்றுரியனுஞ் சீறியேவுந்தனை
கூறியேகைப்பிடியாகவே கொண்டுவரச் சொன்னானெனைக்கோபமாகவே

தருமர்

என்னகீரையனே சொல்வதுசமரி லெப்படியுந்தனை வெல்வது
        மன்னாதிமன்னனை என்னானுஞ்செய்தது
வாயினாலிவ்வார்த்தைச்சொல்லினான் பொல்லாவஞ்சமன நெஞ்சக்கல்லினான்

துரோணர்

அந்தணன் வில்லையெடுத்தனன் பலஅம்பைத்தர்மன் மேல்விடுத்தனன்
        மந்திரவிந்தய சந்திரமண்டல
அந்தரத்தோரும் நடுங்கவேசேட னாயிரமுடியுமொடுங்கவே

தருமர்

குருவென்று சொன்னாலோர்கும்பிடு நான்கூறியவார்த்தையை நம்பிடு
        இருவரும்நாம்நின்று எதிர்த்துப்போராடினால்
யார்வெற்றியென பலரறியவோ இதைப் பார்சுற்றியுளோர் வசைபுரியவோ

துரோணர்

அப்பாலோர் வாளியெடுத்தனன் குறிதப்பாமற்றர்மன் மேல்விடுத்தனன்
        ஒப்பார்தனக்குநேர் செப்பாத்துரோணனும்
இப்பாணந்தன்னை நீவெல்லடா ஏமாந்தாயாகிற் பின்னேசெல்லடா

தருமர்

செல்லவோ நானிங்குவந்தது உந்தன்சேவையெனக்கு நீதந்தது
        வில்லுடன்றேர்வீர சொல்லுடன்வாசியும்
வெட்டினேன் ரெண்டுதுண்டாகவே இன்னமட்டியென்ன பின்னாற்போகவே

* திகை—திசை

துரோணர்

வளத்தகிடா கைபிற்பாயுதே என்மார்பில் ரெத்தவெள்ளஞ்சாயுதே
இளைத்திடுவானென்று இதுவரையெண்ணினேன்
யானினித்தப்புவதில்லையே முத்துவேல்தேன் பொழிக்கவி நாவின்வல்லையே ௯

## பதிமூன்றும் போர்ச்சருக்கம்

### கண்ணன் துதி.

அச்சமிலாததோ ரந்தகனுலுயி ரலைபொழு தென்மருங்கே
கச்சணிமாதர்கள் வீழ்ந்தளம்நொந்துக் கலக்கினும் யான்மறவேன்
மெச்சுந்துழாயு மந்தாகினியு மறைவிரைகழலிணை முகுந்தன்
உச்சிதநீல வரைமுகில் பவ்வநீருறுநிற மேனியுமே

ஐவர்சேனாபதி சென்றனன்வெற்றி அமர்க்களந்தன்னிலே நின்றனன் 1
பைவருமாசுணக் கொடிதளபதியின்மேல்
பாரவிற்றனில்நாணி யேற்றினான்கோடிபாண மழைபோலத் தூற்றினான்

துரோணன்

அந்தணன்றன்தேரையுந்தினான் இன்றுஅமருக்கு நானெனமுந்தினான்
செந்தணற்றன்னிலே வந்திட்டத்தாய்மனே
அந்தகன்நமக்கென்று எண்ணியேகொடிய வமர்செய்ய அவனோடு நண்ணியே

திட்டத்தாய்மன்

உனைக்கொல்லவந்திட்டஎமனேபூ வுலகம்போற்றுந்திட்டத்தாய்மனே
எனைவெல்லவந்தனை வியலாதுமுயலாதே
எப்படியுமுனைவெல்லுவேன் பருவந்தப்பாமலுந்தனைக் கொல்லுவேன்

துரோணன்

வேதியனுங்கோபமீறினான் மதவேழமன்ன தேரில்சீறினான்
ஆதிவராகம்போல் பேதியாமல்நின்று
அன்றவன் தேர்வில்லழிக்கவே பாய்ந்துசென்றிடும் வாசியொழிக்கவே

திட்டத்தாய்மன்

பாப்புக்குழூய் பென்பதில்லையேஉன்மேற் பழியொன்றும்நான் சொல்லவல்லையே
தாய்ப்புலிபோலவர் தங்களைக்கா ப்பேனான்
எய்ப்பதென்றாலிங்கே செல்லாதுஉன் னிடிபாணஞ்சா கோபிகில்லாது

துரோணன்

செல்லாதுஎன்றிட்டத்தூய்மனே உனைவெல்லாது விடுவனோபூமனே
கொல்லாதுங்கொல்லுவேன் கொலைபழிவாங்குவேன்
கோல்கொண்டு மார்பைத்துளைக்கவே நீர்விட்டசேலென்று வாடிக்களைக்கவே

மார்பினில் ரெத்தம்வடியவே கையில்வைத்திருந்த வில்லொடியவே
போர்முகம்விட்டவன் நேர்முகங்கெட்டன்று
சீர்முகத்தருமனைநாடினான் முத்துவேல்பார்புகழ் கவிதன்னைப்பாடினான் 2

தருமர் ஆறுதல்கூறல்

மைத்துனனேசற்று இளைப்பாருவாய் உனக்கொடுமை இத்ததிசெய்ததுயாரோ
சுத்தமானமேனியெங்கும் ரெத்தமயமாய்வடிய [கூறுவாய்
கைத்தலவில்லுமொடியவந்தனைசிந்தைமிககலங்கியென்முன்னால்வந்துநொந்தனை

திட்டத்தாய்மன்

வேதியனுமிக்க கோபமாகியே எந்தன்சிர மாதியந்தவரை கணைஏவியே
தீதிலாததேரும்வில்லுஞ் சூதிலாபுரவிபாகும்
கோதிலாத யெந்தனையுமெய்யவே சூல்கொண்ட மேகமன்னகணை பெய்யவே

திருமர்

அந்தணனுக்கிந்த வாண்மையாகுமா செழும்வெந்தணல் வந்தோனை வெல்லப்
சந்தணிக்குலவுதோளாய் சமரிலிளைத்துவந்தாய் [போருமா
மைந்தனபிமன்னனையுங் கூட்டிடு அவன் மாமன்பட்ட பாட்டையெலாங் காட்டிடு

அபிமன்யு

அழைத்தக்காரணமென்னத்தந்தையே இன்று அமர்க்களந்தன்னிலென்ன
இழைத்தயார் குற்றமது உழைத்த என்மாமன்றனை [விந்தையே
தழைத்தச்சிங்காரவனந்தன்னிலே காற்றடித்து தான்முறிந்தாப்போல் தங்கள்
தருமர் [முன்னிலே

பாலாவபிமன்னனே நீசெல்லுவாய் துரோண பார்ப்பனன் வகுத்தவியூகம்
[வெல்லுவாய்
வேலையொத்த சேனைதன்னிற் சேலையொத்துப்பாய்ந்து தள்ளும்
வீரமுள்ள மைந்தனே நீசெல்லுவாய் சமரிலார வாரஞ்செய்யுமந்தணனை
அபிமன்யு [வெல்லுவாய்

தந்தைசொல்லின் மிக்க மந்திரமில்லையே இதைத்தடுத்துச்சொல்லிட நாவும்
அந்தரத்தை தாவுஞ்செம்பொன் மந்தரமனையதேர்மேல் [வல்லையே
அமர்க்களமரைநொடி செல்லுவேன் முத்துவேலைத் தமர்கவி பாடியின்று
வெல்லுவேன்

அபிமன்யு தேர் ஊர்தல்

அணியைப்பின்புறமாட்டினான் வில்லின்நாணியை முன்புறம் பூட்டினான்
நாணிடசர்ப்பங்கள் நாகலோகமெல்லாம்
தானொருவாளை அறையிலே அதைத்தரித்தானிருக்கும் உறையிலே

கத்திகேடயத்தை தாங்கினான் மாயன் கட்டத்திலே மனமேங்கினான்
சுத்தி வலம்வந்து தூபதீபங்காட்டி
சொர்ணரதந்தூசுதட்டினான் மேலே துவசமொன்றெடுத்து கட்டினான்

பத்தரையோர் மாத்துதங்கமே வந்த சித்திரத்தேருக்கோர்சிங்கமே
எத்தரையுஞ்சமர் வெற்றி பெற்றுவந்த
இந்திரன்மைந்தனின் மைந்தனே அவனுக்கிணை சொல்லலாகுமோ கந்தனே

தோமரமீட்டி வேலாயுதம் கதிர்சுடர்போன்ற முனையின்சூலாயுதம்
தாமதமில்லாமல் எமன் வந்தானென்ன
சதுரங்கசேனைகள் சூழவே பெரியதந்தை முடிசூடி வாழவே

எக்காளந்தானு முழங்கவே திக்கெட்டிபமெல்லாமயங்கவே
தக்கதம்பட்டையும் மிக்கவயமுள்ள
சாரதிதன்தேரை யோட்டிட அதற்குத்தக்கபுரவிகள் காட்டிட

சொன்னபுரவியை பூட்டினான் நான்குவன்னக் கடிவாளமாட்டினான்
மின்னமிலாவபி மன்னன் தேரின்மீது
புலியன்ன சிவ்வென்றுபாயவே சேடன்நலிய அவன்முடி சாயவே

பொற்றேரின் மணியதுஆடவே சிலர் வெற்றிக்கவி தன்னைப்பாடவே
சற்றேனும்சில்லாமல் சண்டமாருதம்போல்
தானோடினகணங்காதமே இல்லை தபனன்றேருக்கிது பேதமே

கதிரிரண்டு சேர்ந்தாப்போலவே காதில் கனகுண்டலமின்னுஞ் சாலவே
எதிரில்வந்தப்பேரை இப்போதே யான்கொல்வேன்
என்றுஅமர்க்களம் நாடினான் முத்துவேல் வென்றுநிற்குங்கவிபாடினான்

துரோணன் திட்டத்துயுமன்
மாமனையடித்த பயல்ஆரடா சிறு மைந்தனெந்தனுக்கு முன்னேகூறடா
ஏமனிடம்உந்தனைநா னிப்போதே ஒப்பித்திடுவேன்
தாமதமிலாமலந்த காமன் றனையும் பழிக்கும்—மா

துரோணன்.
சொல்லுவதென்னடாவபிமன்னனே இப்போ துரோணனெனு
[மெந்தனுமஞ் சொன்னனே
வெல்லவல்லபமிருந்தால் வில்லுடனே இங்கே நில்லு
அல்லவென்று சொன்னாயானால் ஐவரிடமே நீசெல்லு —சொ

அபிமன்யு.
தொல்லுலகில் நீர்தானென்னவீரனு வில்விற்றுரோணனெனும் பேர்படைத்த
நல்லதவுன் வில்லெடுத்து நாணிதனைப்பூட்டிவிடு [சூரனு
நில்லுமென்னெதிரேஒரு சொல்லுக்கு ளுனைப்போக்குறேன் —தொ

துரோணன்.
அப்படியாவென்று வாளியெடுத்தான்குறி தப்பாமலபிமன்மீது விடுத்தான்
செப்பரிய பாணம்புகை கப்பியெழுந்துசெல்ல
வெற்புயவபிமனதை அப்புறம்போகாமல் வெல்ல —அ

அபிமன்யு.
நல்லவாளி நாலைம்பதெய்யவே அந்த எல்லையெலாமம்பு மழைபெய்யவே
சொல்லும்புலிபோலபிமன் சொல்லுஞ்சக்ரவியூகமதை
நெல்லியே தனதுகாவில்வினைத் தளர்த்தினின்றான் —நல்ல

துரோணன்.
தந்தையும் மைந்தனும் யுத்தஞ்செய்பவே வந்துதான் பிறந்திரிந்தவுலகுய்யவே
எந்தனிட வாளிகிரீடி மைந்தனிடஞ் செல்லாதென்று
தந்தனன் வென்பின்னுமென்ன சந்ததமுத்தவேற் சொன்ன—தந் 5

கன்னன்—அபிமன்யு
அங்கதே சத்ததிபதியே நான் அம்பெடுத்தாலதோ கெதியே
சிங்கம்போன் றெந்தனை சிறுவனென் றெண்ணியே
செகசாலவித்தைகள் பேசுறாய்நாங் தெற்குவடக்காக வீசுறாய்

கன்னன்.
பார்த்திபன் பெற்றிட்டசேயே உனைப்பார்த்தாலுங் கத்தரிக்காயே
எற்றப்பலமுண்டோ எந்தனைவென்றிட
எப்படியும் அதமாக்குவேன் சூரியன்சொற்படி எமபுரம்போக்குவேன்

அபிமன்யு.
எமபுரமுன் வசமாகுமாவெற்றி என்னதென்று சொல்லப்போகுமா
தமனியத் தக்கினை தாம்பரமோ சொல்வாய்
தக்கப்படியுன்னை வெல்லுவேன் உடலைச்சக்கைச் சக்கைடாகக் கெல்லுவேன்

கன்னன்
இளங்கன்று பயமறியாதுபோல இப்போதுரையாதேநீது
மலையன்ன வெந்தனைச் சிலைமுன்னேநின்றிட
வல்லவர்யார் புவிதன்னிலே உண்டுசொல்லுவர்ய்நீ யெந்தன்முன்னிலே

அபிமன்யு
மலையுடைப்பது சின்னஉளியே உலோகமாசெடுப்பதும் நல்லபுளியே
சிலைகொண்டு நீயிந்த சென்மத்தில் எந்தனை
தலைகொண்டு போகவுஞ் செல்லாது உன்றனுவெந்தன்முன் சற்றும் நில்லாது

**கன்னன்**

கன்னனபிமன்மேல் மீறினன் கொடிய கார்கோடகம் போல சீறினன்
மின்னொளி போல்வாளி தன்னொளி வீசிட
மேல்நூறு பாணங்களெய்யவே சப்தமேக மழைநிகர் பெய்யவே

**அபிமன்யு.**

வீரபிமன்யுவின் வாளியே சிரஞ்சோக்குவித்ததோர் ஒளியே
பாரக்குதிரையும் பாகுடன் தேரையும்
சேரவில்லைத்தூளாய் செய்யவே கன்னன் திசைதப்பி சிந்தையும் நையவே

**கன்னன்**

பின்னொருதேரின் மேலேறினன் அபிமன்னுவிடம் வந்துசீறினன்
வன்னக்கணை கோடி முன்னும்பின்னுமாக
வந்தது அக்கினிவீசவே பார்த்த வானவர்கண்களுங்கூசவே

**அபிமன்யு.**

எய்தகணையை விலக்கினன் கன்னனிருதயந்தன்னைக்கலக்கினன்
கைதவன் மருகன்முன் செய்தவம் போல்வந்த
காலையபிமனவ்வேளையே அம்பாற் கலக்கினன் கன்னனின் மூளையே

**கன்னன்**

கன்னனுந்தன்மனம் வாடவே கடைக்கண்ணினலே தண்ணீரோடவே
என்னவெஞ்சமரினி இவனோடு செய்வது
என்றுரைத்துப்பின்னலோடினன் முத்துவேல் நன்றிபுகல் கவிபாடினன் 6

**அபிமன்யுவினிடம் பலதிருபர்கள்**

கிருபமாமுனி கிருதவர்மனே தனுகேள்வியிலெதிரிலா வர்மனே
இருவருமபிமனோடிகற் செய்துநெடுநேரம்
வெருவியே தன்மனம் வாடினர் வில்லுமற்றுவெறுங்கையோடோடினர்

சகுனியுமைந்தனும் வந்தனர் ஏனை தானையோடுஞ்சமர்தந்தனர்
மகன்விழவாளியால் மற்றுள்ள மன்னரும்
மிகநடுங்கிட ஓடிவிழவே சகுனிவெனகொடுத்துப் பின்னல்தாழவே

விண்முகத்திலெழும் வாளியே வீகன்னன் விலக்கநிலமெழுந்தூளியே
நன்முகவபிமனும் மின்முகவாளியால்
துன்முகன் தென்முகமாகவே வி கன்னனும் பின்முகம் போகவே

**அபிமன்யு**

உனக்கெதிர் நானல்ல சித்தப்பா இன்றுஓடிப்பிழைவுயிர் தத்தப்பா
எனக்கெதிராகிய ராசசபையிலே
தனக்கென நன்னீதி சொற்றவா உலகில் தக்கோனென்னு நாமம்பெற்றவா

ஆனையோராயிரமாய்ந்தன சேனைஐம்பதினாயிரஞ்சாய்ந்தன
வானமளாவிய தானாதமெல்லாம்
மண்ணாகித்தானுமழிந்தன இவளியெண்ணுயிர்களொழிந்தன

எங்குரொத்த வெள்ளமோடவே பறவைஎடுத்துக் கட்டி பந்தல்போடவே
கங்குலெனவிரு ளெங்கும் நிறைந்திட
கவந்தமெழுந்து கூத்தாடினமுத்துவேற்குவந்த செந்தமிழ் கவிபாடின 7

**சையிந்தவன் கொன்றமாலை சூட்சி.**

மைத்துனனே என்னசெய்குவேன் அபிமனைவென்று மண்மீதெப்படி உய்குவேன்
கொத்துகொத்தாக சிரமற்றுவிழுதே ஐயோ —கருள்
குருகுலசேனை வருமபிமன்னால் செருவினிலின்றே கருவறுத்திடுவான்—ஐம

சிந்து.

அண்ணலே நானென்னசெய்வது இவன்சிரத்தை அமரிலெப்படி கொய்வது
கண்ணைமூடுமுன் கோடிகாவலர்களை வெல்வான்—சு
காத்திரத்திவனை தோத்திடச்செய்ய பாத்திரன்யாரோ தோத்திரஞ்செய்தாய்—அ

துரியன்.

ஈ மைந்தன்றனையுந் தோற்றனே அந்தத்துயரை எந்தவிதமு மாற்றேனே
அந்தகனூரிற்செல்ல அபிமன்னன் றன்னைக்கொல்ல —சு
ஆரினிவெல்லப் பாரினிற்சொல்ல நேரினில்நீயே கூறிடுவாயென்—மை

சிந்து.

கொல்வதென்ன வுபாயமே எனக்கிப்போது கூறிடுவாய்நீ நியாயமே
வெல்லவல்லப முள்ளோரர் விண்ணினுமில்லை யென்றால்—சு
விறலுடையிவனின் றிறமைதக்காண புறமிடுவார்கள் புவியிலுள்ளோர்கள்—கொ

துரியன்.

தந்திரத்தாலே கொல்லுவாய் அரனளித்த மந்திரந்தன்னைச் சொல்லுவாய்
உந்தியான்மாலையை வெந்திறலபிமன்மேல்—சு
ஒருவருமிவனை மருவுறுவண்ணம் வெருவறமாலை வீசிடிவ் வேளை—தந்

சிந்து

வீமனைக் கொல்வதெப்படி அரன்மாலையை வீசுவேனுந்தன் சொற்படி
எமன்போலவே காட்டிலென்னைப் பங்கஞ்செய்ததும்—சு
இத்தனையறியு மூத்தமவனுக்கு சித்தமாய்த்தெரிந்தும் மெத்தவும்வைரி—வீ

துரியன்.

தப்பினாலல்ல கொல்லுவாய் காளைவீமனை சமரிலெதிர்த்து வெல்லுவாய்
அற்பமாக வெண்ணாதே ஐந்துவீமனிவனே
அரனடிபணிந்த சிரமதுதப்புந் திறமைதசொன்னேன் வரமருளின்று—த

சிந்து.

பஞ்சாட்சர மந்திரந்தன்னையே மிகச்செபித்து பாலனபிமன் முன்னையே
கொஞ்சமேனுந் தனக்கு நெஞ்சிற்றயவிலாமல் —சு
கொன்றையின் மாலைவன்றிறலாலே சென்றிடவளைந்து நின்றிடவீசன்—ப

வீமன்.

காளைவீமனும் வந்தனன் மாலையைப்பார்த்தவ் வேளைமனது நொந்தனன்
பாலனபிமன்னனை பதின்மூன்றாம் நாளிலவெல்ல—சு
பாரிலுள்ளோர்கள் தேரினிலின்றே நேரினில்வரினுங் கூறிடுந்தேகம்—கா
மாலைகடவே னென்றனன்வணங்கி வாயுபாலன்திகைத்து நின்றனன்
சோலைக்குயிலையொக்கும் சீலன்றனைக் காணாமல்—சு
சொரிந்திடக்கண்ணீர் சரிந்திடமார்பில் எரிந்திட முகமுங்கரிந்திட வீசன்—மா
முத்துவேற் கவியைப்பாடினான் மாலையினிதழ் முடிமேற்பட்டிட சூடினான்
சுத்திசுத்தி மைந்தனை எத்திசையுங் காணாமல்—சு
சோகமதான வேகமதுடனே ஆகவந்தனிலோர் அதிசயமென்றே —மு 8

சயித்தவனிட்ட மாலையாலுன் பலரிடம் அபிமன்

வேந்தனின் றம்பிமார்முந்தினார் அதிவிலைவினிற்றந் தேரையுந்தினார்
மாந்தரின் மடங்கலான் மானவன்றம்பியை
வாளிபல விட்டுசாடவே ரதந்தூளியாகப் பறந்தோடவே
ஈ மைந்தனென்றது சகுனியின் மைந்தனை

சகுனிகர் துரோணனுங்கூடியே தன்மகனச் வத்தாமனும் நாடியே
இகலபிமன்னனை மிகவெல்லு வேனென்று
எதிராகநின் றமராடினர் கரமெடுத் தவில்லெறிந்து பின்னோடினர்

விண்முகத்திற் பாணமேவினன் கெட்டதன் முகனுஞ்சமர் தாவினன்
நன்முக விசயனின் பொன்முக வபிமனும்
கண்ணிமை கொட்டுமுன் வென்றனன் ஓர் கணையாலவன் றனைக் கொன்றனன்

வங்ககலிங்கரும் வந்தனர்பலர் பங்கப்பட்டு முதுதந்தனர்
சிங்களர் மாளவர் சீனவர்சாளுவர்
தெலுங்கரும் பப்பரரோடினர் செய்வதென்ன வென்றுமனம் வாடினர்

தரணிபரொரு கோடிசூழவே அவர்கள் தலைசிந்திப் பூமியில்வீழவே
இரணியனைக்கண்டு எழுநரசிம்மம்போல்
எங்கும் வெறுங்களமாக்கினன் கணைகள் எட்டுதிக்குஞ் செல்லப்போக்கினன்

எதிர்ப் பாரொருவருமில்லையே முத்துவேலெழு திலைவத்தக் கவிசொல்லையே
மதிப்பாருமின்றிய மாசுணக் கொடியோனும்
வன்னவிற்கன்னனைக் கூவினன் அபிமன்னனிடஞ் சமர்க்கேவினன் 9

மாலையரனுன் கன்னன்மறு தட்டை.

படைகளைக்கூட்டியே வாருங்கள் விசயன் பாலனபிமனைச் சீறுங்கள்
கொடையாளி யென்றென்னைக் கொஞ்சமும் பாராமல்
அடையாளஞ் செய்திட்டப்பாவியே இன்று அந்தரம்போக்கு வேணுவியே

அபிமன்.

முகத்தின்மீசை யென்பதில்லையா நாண முன்னுபின்னுங் கொஞ்சம்வல்லையா
செகத்தினிலுனைப்போல செருசெய்வாருண்டோ சொல்
சின்னப்பட்டு முன்னேசென்றாயே கையில்சிலையேந்தி என்முன்னம் நின்றாயே

கன்னன்.

செல்லஞ்சொல்லுக் கஞ்சாதல்லவா பெரியோர்செப்புவார் சீயதைச்சொல்லவா
வில்லெடுத் தம்பினை வேகமாய் விட்டிடு
வீரத்தை என்னிடங்காட்டிடு வெற்றிவாகையுன் றந்தைக்குச் சூட்டிடு

அபிமன்

வண்ணக்கணையொன்று தொடுத்தான் கன்னன் பின்னப்படும்படி விடுத்தான்
மன்னனன்றேர் வில்லுமாவொடு பாகனும்
சின்னப்பட்டு நாசமாகவேஅவன் திசைத்தப்பி மோசமாய்ப்போகவே

கன்னன்.

கன்னனும் பின்வாங்கிஓடினன் அபிமன்னனு முனமேறுங்கிச்சாடினன்
எண்ணுற் கிறுபுதமெடுத் தபிமன்னுவின்
தன்வாங்கு சிலைமணியாடவே முத்துவேல் பொன்வாங்கு கவியன்று
[பாடவே 10

இலக்கணன் அபிமன்யுத்தம்.

இலக்கணக் குமரனும்வந்தனன் சமர்நிலக் கண்புகையெழத் தந்தனன்
சிலைக்கையபிமனை யொருக்கை பார்ப்பேனென்று
தேரொடுதேரெதிர் முட்டினன் தனிச்சிலைவளைத் தெதிர்சென்று கிட்டினன்

அபிமன்யு

வந்தயிளவலைக்கண்டனன் எதிர்வாய்திறந்தொரு வார்த்தைவிண்டனன்
இந்தவில்வினைக் கொண்டோ எந்தனை வெல்வது
எளிதுவீணைகவந்தனை இது யாருடன்செய்திட்ட சிந்தனை

**இலக்கணன்**

அபிமன்னுவந்தனைக்கொல்லவே சென்று ஐவர்கட்டங்களைவெல்லவே
புவிமன்னர் யாவரும் போற்றிடு மென்றந்தை
பூலோகந்தனையெல்லாமாளவே நீங்கள் சாலோக சாரூபமேளவே

**பொது.**

இருவருந்தன் வில்லையெடுத்தார் அங்கு எதிரெதிர்கணைகளைவிடுத்தார்
பருவதக்காடெல்லாம் பற்றியெரிந்திட
பாலரிருவர்கள் யுத்தமே இரண்டு காலனென்று சொன்னார் நித்தமே

**அபிமன்யு**

இலக்கணமாளுவாய்சென்றிடு எமனுக்கிரை நீயென்றால் நின்றிடு
அலக்கணுற்றிப்போதே நிலக்கணில் வீழுவாய்
அப்புறமுந்தனினிட்டமே நின்றாலதனலெனக்கென்ன கட்டமே

**இலக்கணன்**

அபிமன்னுயிவ்விடம்நில்லாதே புவியரசன் மைந்தன்கோபம்பொல்லாதே
புவிமன்னர்காணயான் போக்குவேன் உன்னுயிர்
புகலெதிரொலியன்னக்கூறினன் கேட்டுப்புலிபோல பிமன்னன் சீறினன்

**பொது**

இருவர் நெற்றியிலுஞ்சொருகின கணை இருபுபத்திடைபட்டுருகின
மருமவகடடன்னிலும் வாசிகள்முன்னிலும்
வாளிகள் பட்டிடரொத்தமே கழுகு கூளிகள் போட்டிடுஞ்சத்தமே

**அபிமன்யு.**

கண்ணன்மருகனின் மூட்டியேபின் கால்வாங்கி நிற்கின்றகெட்டியே
அண்ணற்குருபதி வண்ணத்திருமகன்
அங்கத்தினமீதிலே பாய்ந்தன சோரிஅருவி நீரெனமண்ணிற்சாய்ந்தன

**இலக்கணன் வதம்.**

கால்களுமற்றது தொடையொடுமார்பின் கவசமுமற்றது இடையொடு
தோள்களுமற்றது தலைக்குபொன் மணிமுடி.
டால்களுமற்றதி லக்கணன் சூடுந்தன்முடியற்ற நிலக்கணே
மன்னன் மைந்தனுமடியவே முத்துவேற்சொன்னக் கவியுமுடியவே
இன்னிலந் தன்னிலோர் நன்னிலக் கோழியூர்
இறைவனு லந்துறையீசனே பாதமென்னாளும் போற்றிடுந்தாசனே 11

**துரியன் சோகம்.**

அந்தணரேஎனது மைந்தனிறந்ததுவுன் சின்னதனக்குச் சரியா -எனக்குச்
தீமையிதுவம் நெறியா [செய்த
உந்தன் கணையினாலே அந்த வபிமன்றனை
எந்தவிதமுங் கொல்லுவீர் அந்தச்செய்தியை எப்போவந்து நீர்சொல்லுவீர்
வலக்கணெத்திட்ட மைந்தனே மறலிக்கின்று நிலக்கண் பலியாய்த்தந்தனே
இலக்கணமைந்தன் மாண்டும் இப்புவிதன்னிலே நான்
என்னுயிர்வாழ்வும் வேண்டிலேன் செங்கோற்பிடித்து மன்னுயிர்காக்க
[ஆண்டிலேன்
வலக்கை பாணமெடுப்பவன் மாற்றலர்மேல் வாரிவாரி விடுப்பவன
சிலைக்கை வயம்பெற்றிடுந் தேசத்தரசர்களே
தினகரன்வீழு முன்னையேவதைப்பீர்த சிறுவனபிமன் றன்னையே
அரசரெல்லோரும் போற்றினர் துரியன்றுயரை அரைக்கணந்தன்னில்
வீரசுடன் நாங்கட்சென்று வீரபிமன்னையின்று [மாற்றினர்
விற்கைதயுடனேகொல்லுவோம் அவனைப்பெற்றதந்தை வந்தாலும் வெல்லுவோம்

என்றுகூறியே சென்றனர் சேனைவளைத்து ஈரிருதிசையும் நின்றனர்
அன்றொருவரொருவர் வென்றிடக் கோடிவாளி
அபிமன்னன் மீதுபெய்தனர் புயலோடுகாற்று அடித்ததன்னவே பெய்தனர்

அபிமன்யு

வளைந்தவீரரைக்கண்டனன் அவர்கண்மீது வஞ்சமிகவுங் கொண்டனன்
பிளந்திடவம்பினால் மெய்த்தளர்ந்திட ராசரெல்லாம்
பேசாமற் பின்னையோடினார் முத்துவேற்கவி கூசாமற்றன்னைப் பாடினார் 12

மூன்றுந்தடவை கன்னன்

கன்னனுமடங் கலபிமன்னுவுமுடன்று எதிர்தன்னையும்மறந்து யுத்தஞ்செய்தனர்
சண்டமாருதம் போற்கணை பெய்தனர் [யுகாந்தகால

அபிமன்யு.

பின்னையபிமன்னன்வந்த கன்னனின்ரதத்தை யொருவன்னவாளி கொண்
பாகனையும் பொன்னகப்நீ செல்லவென்று போக்கினான் [டதைத் தூளாக்கினான்

கன்னன்.

துற்சாதனளித்த பொற்சாதனத்தின்மீது உற்சாகத்துடன் வந்துமேவினான்
தன்னுடைய விற்சாயகங்கட் பலதூவினான்

அபிமன்யு.

நச்சாடரவனைய துற்சாதனன்ரதத்தை அச்சாணியுடன் பொடியாகவே
பாகும்வாசி வச்சாணடதுவும் வானிலேகவே

கன்னன்.

பின்னேசென்றகன்னனவன் மன்னவனளித்ததொருவன்னமரகதத்தேரிலேறினான்
அபிமன்னவனிடத்திற் கணைதூரினான்
விற்குனித்திரவி மைந்தன்விட்டிடுங் கணைகளாலே பற்குனன்மைந்தன்ரதமும்
உருள்நெறிந்து நிற்குநன்னிலைமை குன்றிவிட்டதே [பட்டதே
வெற்புயவபிமன்வில்லை பொற்புயக் கன்னனுமப்போ சொற்பொழுதில்
[ரெண்டுதுண்டாய்வெட்டினான்—
முத்துவேலின் நற்பதக்கவியை வாரிக்கொட்டினான் 13

அபிமன் கன்னனை நிந்தித்தல்.

கன்னனேஓடாதே நில்லு செஞ்சதிர்வாளுக்கோர் பதிற்சொல்லு
எண்ணமல் நீசற்றும் ஈனங்கள் செய்தாயே —சுருள்
இடருற்றிட படமுற்றிடுந் திடம்பெற்றதோர் விடம்பற்றிடுங் —கன்

மன்னுதிமன்னரை வனம்போகச் செய்தீரே
மாதாவைச் சூதாடிவத்திரங் கொய்தீரே
என்னவுண்மையைக் கன்னநான் சொல்வது —சுரு
எங்கும்புகழ் தங்கவினை பங்கமுறவே செய்குவேன் —கன்

பெற்றோர்பேருமறியாயே இங்குற்ற விடந்தெரியாயே
கற்றோர்முன் நின்மூடர் பெற்றபுகழ்போல —க
கன்னவினை மன்னுகைவமுன்னுகவே சொன்னேனென —பெ

கோழியூர் முத்துவேற்பாடுங்கவிக் கொண்டுனையிப்போது தண்டிக்கக்கூடும்
வாழியென்றவன்கவி மண்ணினுள்ளோர் சொல்ல
வாளாலுயிரே கொள்ளுவேன் மீளா நரகிற்றள்ளுவேன் —கோ 14

### அபிமன் வாள்யுத்தம்.

வாளையெடுத்தானு மபின்யு தோளைச் சிலிர்த்தானும்
வாளையெடுத்தண்ட கோளமுட்டும்படி
பாலன்றென்திசை பொல்லாகாலனைப் போலவே —வா

கத்தியெடுத்தானும் யானைபரி குத்திமடித்தானும்
அத்தியை கண்டரிபற்றிப் பாய்வதுபோல்
சுற்றிவந்துசாரி வெற்றி யெனக்கென்று —க

செங்கரும்பு துண்டுபோலவே கோடிசேனை வெட்டுண்டது சாலவே
ஐபங்கரன் எம்பியறு முகனைப்போல
அறுத்தறுத்துத் தலைதள்ளவே சிரம்உருத்தெழுந் தெதிர்நின்று துள்ளவே

ஆனையொருகோடி பாய்ந்தன குருதி ஆறுவெள்ளம்போல சாய்ந்தன
சேனை பத்துகோடி தேரொரு லெட்சமும்
வானகந்தன்னிலே சென்றன பலவாசிதலையற்றுப் பொன்றின

### துரோணனை அபிமன் பரிகசித்தல்.

அந்தணன் மும்முறை வந்தனன் அபிமன்னுவுக்கு முதுதர்தனன்
இந்தமுறைவரா வுக்தனுக்கு வெட்கம்
இல்லையோவென்று சிரித்தனன் தேர்எழு பரிதன்னைத் தரித்தனன்

முத்துவேற்கவி நிலைநாட்டினுல் வெற்றிபத்துத் திசையுறக்காட்டினுன்
அத்தியைச் சிம்மமடித்தது போலவே
அந்தணன் தேரைச்சிதைக்கவே மனம்வெந்திடத் தேகம்பதைக்கவே

### துரோணன் அபிமன் வலக்கைவதம்.

பின்னுமொரு தேறிலேறினுன் துரோணனபி மன்னுவினிடத்திற் சீறினுன்
இன்னுமிவனுக்காண்மை இருக்குதோவென்று சொல்லி —சு
இளம்பிறையொத்த வளம்பெறுவோனை களங்கொளுவேனென்றுளமகிழ்வாக-பி

### அபிமன்யு.

வேதியா என்னசொல்வது தனுர்வேதத்தின் நீதியோ என்னைவெல்வது
பாதிமதியணிந்த பாமனுந்தனுக்காக —சு
பாரினில்வரினும் போரினில்வெல்வேன் யாரினிநிகரோ வேறினிபகரோ —வே

### துரோணன்.

புருவம் நெத்தியிலேறவே எதிர்த்தபிமன் கருவம் மிகவுஞ்சோரவே
சருவசங்காரன்போல தனுவிற்பாணந் தொடுத்து —சு
தந்திரமாக மந்திரவாட்கை சிந்திடப்புவியில் நொந்திட வறுத்தான் —பு

### அபிமன்யு.

அய்யாயிது வென்னுபாயமே வாள்யுத்தமதில் அம்பெடுப்பதும் ஞாயமே
செய்யாத பாதகத்தை செய்தாயே பெரும்பாவி —சு
தேவரும்மூவர் யாவருமறிய கேவலநிலையிலுன் ஆவியும்போகும் –அ

வித்தைகற்றுக்கொடுத்தீரோஉன் சிடருக்கெல்லாம்இத்தைகற்றுக்கொடுத்தீரோ
சத்தவீரமுனகுத் தோன்றக்காரணமேது—சு
தலைவினிற்சாரிய மலையிலென்றாலும் உலையிடுமரிசிக் கோடுவாயெந்த—வி

வேதாகமங்கள்கற்றவர் ஈசனனுகிரகத்தால் விரும்புமோர் பிள்ளைபெற்றவர்
போதாதுந்தன் பிள்ளைபோல் பிள்ளையாமெனுன்றல்லவோ—சு
புத்தகமையா வித்தகமையா பித்தளைமாறுந் பிழைப்புனக்கேள் நீ—வே

மீளாநரகிற்றள்ளுவான் எமனக்கினி தேளாய்த்துடித்து துள்ளுவாய்
நாளாய்முத்துவேற்கவி கேளாவுந்தனின்செவி —சு
நாணமுநல்லவழி மானமுமேது பூணலுமார்பினில் எனுனக்கோது-மீ

### அபிமன் ஆழிப்பிரயோகம்

மணியாழிதன்னையெடுத்தான் மாதுலன்றந்த மந்திரஞ்சொல்லியேவிடுத்தான்
அணிஅணியாகநின்ற அரசர்கூட்டத்தையெல்லாம்—சு
அலைகடற்கடைந்த மலையெனவபிமன் சிலையெடுத்தவரின் றலைதனையுடைத்தான்
அபிமன்னனென்னும்பாலனே எதிர்த்து நின்று அம்பெடுத்தவர் காலனே

தேர்குத்துக்காலொடியவே அதன்மீதிருந்த தேசமன்னர் மடியவே
ஆர்வந்தெதிர்த்திட்டாலும் அவரவர் முன்னே நின்று—சு
அந்தரமாரியை சுந்தரதேவகி நந்தனன்றடுத்த விந்தையைப்போன்று
அம்புக்கூட்டத்தைத்தடுத்தான் பின்னுமவர்கள் ஆவியந்தாம் விடுத்தான்

வீரமானமுங்கெட்டனர் அரசர்தங்கள் விருதுமுழுதும் விட்டனர்
சூரத்தனத்தாலதி தீரத்துடனே சென்று—சு
தொல்புவியரசர் வில்களுமுறிய மல்புய நிருபர் மணிக்குடர்சரிய
துறத்தித்துறத்தியடித்தான் எதிர்நிற்காமல் விரட்டிவெற்றியைப்படித்தான்

கண்டசேனைநெளியவே அரவம்போல காட்டிற்சென்று ஒளியவே
அண்டர்முனிவர்தேவர் கண்டுமிகவியந்து—சு
ஆறிரெண்டொன்றினிற் சோரியின்வெள்ளம் பாரினிற்புரளநேரிடும் படிக்கி
அன்றுநாம்கண்டதில்லையே அபிமன்யுத்தம் இன்றுசொல்லநாவில்லையே

பாலன்சக்கரசண்டையே உடைந்ததப்போ பாதியரசர்மண்டையே
ஆலகாலம்போல்நின்ற அரவக்கொடியோன்கண்டு—சு
அம்போதே முத்துவேல் செப்பியக்கவியை ஒப்பிடச்சிந்து தப்பிதமின்றி
அரன்தண்டைக் கையிலெடுத்தான் துரியன்றுயரை அரைக்கணந்தன்னில்
[விடுத்தான்

### சிந்து அபிமன் தர்க்கம்

சயித்திரதனெனுமன்னனே சுத்தபயித்தியனென்றுனைச் சொன்னனே
தையித்தியர்பிறவிக்கோர் வைத்தியனாய் வந்த
தனஞ்சயன்பெற்றிட்ட பிள்ளையேஉன் தலைபலியிடுவேன்யான் கொள்ளையே

### சிந்துபதி

காண்டீபன்பெற்றிட்டசேயே நீகோண்போர்க்கெலா முள்ளிக்காயே
தாண்டிநீயெந்தனைத் தாழ்வாகப்பேசாதே
தலைபனங்குலைநிகர்த் தள்ளுவேன்இரை தாவும்புலிபோலத்துள்ளுவேன்

### அபிமன்யு

துள்ளும்மாடுபொதிசுமக்கா தெனுந்தெள்ளுமொழி யேற்பதுமக்கா
நள்ளிரவின்வெய்யோன் நாடுமோசொல்லுவாய்
காடினலல்லவோவெல்லுவாய் இன்றுநான்கேட்டதின் பதில்விள்ளுவாய்

### சிந்துபதி

நாட்டினிற்பாதியிழந்தீரே பெருங்காட்டினிற் சென்றுநுழைந்தீரே
ஆட்டுக்குட்டிப்போல மேட்டுப்புல் சயனத்தில்
அமர்ந்தைவரெல்லாம் படுத்தீரே இப்போதமருக்கு வந்திங்கடுத்தீரே

### அபிமன்யு

இந்திரனின் மைந்தனினண்டையே துரியன் எதிர்த்துவுடைந்தனன்மண்டையே
அந்தரந்தன்னிலே அவன்கொண்டுபோம்போது
அருச்சுனன் விடுவிக்கவில்லையா நீங்கள் அப்போதவ்விடத்திலில்லையா

சிந்துபதி

சூதாடு மண்டபந்தன்னிலே உங்கள் தோற்புங்கெலிப்பெங்கள் முன்னிலே
ஆதாரமில்லாமல் அஞ்யாத வாசத்தில்
அரண்மனை தொண்டு புரிந்தீரே நீங்கள் அங்கொரு ஆண்டு இருந்தீரே

அபிமன்யு

மாடுபிடிசண்டை தண்டிலே உங்கள் மண்டையுடைந்ததுங்கண்டிலே
ஆடனுமக்கொடி அருச்சுனனென்றந்தை
அடித்த அடியுமறந்தீரோ வேறாண்பிள்ளையாகப்பிறந்தீரோ

சிந்துபதி

துயிரிலுந்தசபைதன்னிலே கண்துளி வீழஐவரெம் முன்னிலே
வெயிலவனைக்கண்டு வெம்புமலர் போன்று
வெட்டவிழுமரம் போலவே ஐந்து கட்டழகர் நின்றார் சாலவே

அபிமன்யு

தக்தை ஐவரன்று காட்டிலே உன்றலைசிறைத்து மண்டையோட்டிலே
பந்தமுடன்றீபம் விந்தையுடன் வைத்து
பாரக்கழுதை தனிலேற்றினர் தொட்டோர் பற்றிக்கொள்ளவரஞ்சாற்றினர்

சிந்து

மான் விழித்துரௌபதைதன்னையே இருள் தேன்பொழிகூந்தலைமுன்னையே
ஏன்பிடித்திழுக்கிறாய் என்றங்கொருவரும்
எதிர்த்துப்போராடு வாரில்லையே என்னேடிகல் செய்வது மிகத்தொல்லையே

அபிமன்யு

குண்டுமணி குப்பைதன்னிலே அதைகண்டெடுத்தவர்களு முன்னிலே
பண்டுகண்டநிறம் பழுதாமோ சொல்லுவாய்
பார்புகழ் முத்துவேல் சொல்லையே என்னேர்புகல வலுவில்லையே

அபிமன்வதம்சிந்து

ஈசனளித்தத்தண்டையே என்கரத்தன்னில் எடுத்துடைப்பேனுன் மண்டையே
ஆசை பாசத்தையெல்லா மைவரிடங்கொடுத்து—சுருள்
அந்தரமாளு முந்தனின் பாட்டன் வந்தெதிர் கொள்ள முந்தியே செல்வாய்
அதுவொருக்காலுந்தப்பாது தப்புமென்றாலோ அரனையுலகமொப்பாது

அபிமன்யு

தண்டென்னிடத்திலில்லையா உந்தனைவெல்லத்தானு மெனக்கோர்மலையா
அண்டத்துத்தேவரெல்லாங்கண்டு வியப்படைய—சு
ஆனடிபணிந்த சிரமதுதனையே காகாவெனவே தறையுறச்செய்வேன்
அந்தகனூரிற்போக்குவேன் தவரிடாது எந்திரத்தாலே தாக்குவேன்

சிந்துபதி

சம்பமினிமேற்செல்லாது உந்தனுடைய தண்டுமென்னிடம் நில்லாது
உம்பர் முனிவர் காண பம்பரம் போலவுன்னை—சு
ஓட்டியே இன்றுவாட்டியே வதைத்து நாட்டுவேன்வெற்றி நாட்டகமாக
ஓம்நமசிவாய வென்றனன் கரத்திற்றண்டை ஓங்கியே எடுத்துச்சென்றனன்

பொது

பறவைகள் பந்தரிட்டன இருள் கவிந்து பகலுமிரவாகி விட்டன
இறைவனருளினாலே இதற்செயமுடியாமல்—சு
எப்படியுமிவன் தப்புவதரிதென பொற்புறுமுடிமேல் ஒப்பரி தண்டை
எடுத்துவோங்கியே அடித்தான் அபிமன்வலி கொடுத்துப்பூமியில் மடித்தான்

தேவர்கள்

அபிமனிறந்த பொழுதே அந்தரம் நின்ற அமரர் கண்ணீர்விட்டழுதே
புவிமன்னர்களை வரும் போரிற்பாலனை விட்டு—சு
பொன்றிடத்துணிந்தா ரென்றிமையோர்கள் சென்றிடகிரியில்நின்றிடக் சுதிரும்
புகலுமுத்து வேற்கவியே கேட்போமென்றாலும் போதாதாயிரஞ் செவியே

அர்ச்சுனன் சோகம்வஞ்சினம்.

அபிமன்னு என்னசெய்குவேன் உனைப்பிரிந்து அவனியில்லெவிதமுய்குவேன்
புவிமன்னரெல்லாம்போற்றும் போர்வீரா யென்னைவிட்டு—சருள்
புரந்தரனுலகை நிரந்தரமாள காந்தளையோவென இறந்தவன்போல
புழுப்போற்றுள்ளியே துடித்தான் தாழவிழுந்து பூமியிற்கரத்தைதயடித்தான்

வஞ்சினம்

உந்தனைக்கொன் றசிந்துவே நாளைப்பொழுதில் அந்தரம்போகவுந்துவேன்
எந்தன்வஞ்சினந்தப்பி இருந்துவிட்டானேயானால்—சு
எரியிடைவீழ்வேன் கரியதுவெனவே நெறிதவறாத புரிமறைவேதம்
என்றான்றனதுவாக்கியம் முன்னேயபிமன் இழைத்தத்தவத்தின்பாக்கியம்

தேயத்தரசர்முன்னையே அபிமனுயிர் மாயவதைத்தோன்றன்னையே
சாயப்பொழுதில் நாளை தாமறப்பேன் தவறில்—சு
தாயினர்பசிக்க தனபசிதீர்க்கும் நாயினர்வீழும் நாகுறுவேன்யான்
நாடுமிதுவேசத்தியம் முடியும்வரை ╥வீடும்நுழையேன்பத்தியம்

யாருமிலாமல்முன்னையே அபிமனுடல் வேறுசெய்வித்தோன்றன்னையே
கூறுங்கதிரோன் நாளை குடபாற்றிசைவிழுமுன் —சு
குனித்தவிலொன்றால் தனித்துயிர்கொள்வேன் இனித்தவறேன்யான் இல்லையே
கொண்டபெண்டிரிறக்கவே மருமகட்கையால் உண்டக்கநிசிறக்கவே [யானால்
வஞ்சனையில்லைமந்தன் றன்னையே சிரமதுவறுத்தோன் நெஞ்சமெரியுண்ணப்
துஞ்சும்பொழுதில்யாரும் அஞ்சும்படிக் கொல்லேனேல்—சு [பின்னையே
துணையெனவந்தோர்க் கணைவுறுகுற்றம் பிணைபடச்செய்தோர்க் கிணையெனவ
[வர்கள்
தொடருங்கதியிற் சேருவேன் முத்துவேற்கவி படரும்படிக்கே கூறுவேன் 20

கடோற்கசன் தூது

செல்லுவாய்மைந்தனே தூது துரியனிடம் நான் சொன்னேனென்று ஓது
அல்லுக்குள்அரனிடம் வில்லுக்துணி பெற்று
கொல்லுவான் அருச்சுனன்நாளையே சிந்துவைகூறிடுநீ சென்றிவ்வேளையே

கடோற்கசன்

சிந்துவைக்கொல்வதிற்பாவமா இந்தசேதி சொன்னால் பெருலாபமா
எந்தையே கின்னருள் நிந்தைமொழிப்பலன்
எரியிடை விசயனைச்சேர்க்கவோ துரியனெல்லாஞ் சந்தோழமாய் பார்க்கவோ

மாற்றலர்க்குத்தூதுசெல்லவா சொல்லுமார்க்க மனீதியுமல்லவா
கூற்றுவனின்நிகர் நூற்றுவர்மைத்துனன்
கொன்றானருமை என்தம்பியை நீர் நன்றாய்ச்சொன்னீரவனை நம்பியே

வேண்டாமிந்தமொழி விட்டிடும் விசயன் வெஞ்சினவஞ்சினங்கெட்டிடும்
நீண்டாதகற்புள செந்திரு வென்றுயை
தேசில்தூக்கவந்தான் காட்டிலே அவன் போரிலென்னத்தூது நாட்டிலே

╥ வீடுரென்பது: பாசறையெனப்பாடம்

தருமர்

வஞ்சகஞ்செய்வது கூடாது தக்கமன்னவர் செங்கோலின்றுடாது
நெஞ்சகந்தன்னிலே கொஞ்சமேனுஞ் சூது
நினைந்தாலது பெருந்தீது இதில் நிந்தைசொல்லுபவரேது

தனுவேதசரித்திரதருமமே அதைத்தழுவி நிற்ற லொருகருமமே
மனுவேதசாத்திர மருமத்தைச் சொன்னேன்
வார்த்தையை தட்டாதேசெல்லுவாய் எதிர்பார்த்தவனைக்கண்டு சொல்லுவாய்

தருமர்

வீரஞ்சுத்த வீரம்ரெண்டு தனுர் வேதத்திலோதினதுண்டு
வீரந்தனுக்குள்ள வெற்றியைப்பூண்பது
விளம்புஞ்சுத்தவீரந்தானே எதிரி விரும்பியபடி நடப்போனே

கடோற்கசன்

எந்தையே சூதறியாது நான் இயம்பியது பெருந்தீது
உந்தன் பொறுமையுரைக்க வென்னலாமோ
மைந்தன்யானுன் பாதஞ்சூடி என் வணக்கந்தந்தேனொரு கோடி

வீமன்மைந்தன் நிசிசென்றனன் வியாளக்கொடியோன் முனின்றனன்
பூமானுமென்றந்தை புகலவந்தேன் கேளும்
புவிபோற்றுமாமந்தக்கோளும் அவர் பொறையழியாதெந்நாளும்

துரியன்

வந்ததென்ன விங்குத்தூது அந்த வகையொளியாமலே ஓது
உந்தனின்மைத்துனன் சிந்தனைவை நாளையே
அந்தியாகுமுனங் கொல்லுவான் அன்றி அர்ச்சுனனக்கினி புல்லுவான்

கடோற்கசன்

பாசுபதந்தன்னை நாடியே எங்கள் பார்த்தனுங்கண்ணனுங் கூடியே
ஈசன்கயிலைக்கி ஏகினரென்பதை
எந்தையுந்தனிடஞ் சொல்லவே என்னை ஏவினாது பொய்யுமல்லவே

துரியன்

மைந்தனிறந்ததபோலவே விசயன்றந்தை யிந்திரனிடஞ்சாலவே
சிந்து வினம்பினலந்தாஞ் செல்லுவான்
செப்பினேனென்றிதை சொல்லு இதற்கப்புறம் நில்லாதே செல்லு

துரியன்

விசயனிலும் வில்வீரன் றண்டில் வீமனையும் வெல்லுஞ்சூரன்
புச பலமுனைவிட சசவலியொத்தவன்
போரிற் செயிப்பவர்யாரு நாளை பாரிற்சொல்வாரெனக்கூறு

கன்னன்

இந்துமான் டோர்பெரிதல்ல அதையெடுத்து நீ ஐவர்க்குச்சொல்ல
அங்கு மாண்டான்புகழ் தங்குமபிமன்னன்
ஆரினியிப்புவியாள்வா ரென்று ஐவருமொன்றாக மாள்வார்

கடோற்கசன்

நாளைப்பொழுது வீழ்முன்னே சிந்து நரபதிசிரம் விழுஞ்சொன்னேன்
வாளையொத்ததுள்ள காளைவிசயன் முன்
வானோர் வந்தாலுஞ்செல்லாது என்னால் மண்ணின்வெல்லுபவரேது

O-,194NMP1,M
N54



### துரியன்

அண்ணாயிது வென்னத்தீரம் இந்த அரக்கிமகன் சொன்னவீரம்
மன்னாதிமன்னவர் வாழ்வைதன்னிலே
வந்ததிவன் பெருமோசம் ஐவர் தந்தம் உயிருக்குநாசம்

### கடோற்கசன்

விசயன் வீமன் வரவேண்டுமா உம்மை வெல்லச்செல்லுமொருவாண்டுமா
புசபல மறியீர்கள் போர்செயு மென்வீரம்
புகழ்பெற்றவென்றந்தை வாக்கியம் அதைப்போற்றி நடப்பதென் பாக்கியம்

அரக்கரோர் வஞ்சகஞ்செய்யார் சொந்த அண்ணியின் வத்திரங்கொய்யார்
புரக்குஞ்சோதரர்களை இறக்கவென்றுவிடம்
பொய்சொல்லி சாப்பாடும்போடார் சபையில் பொருந்தப்பெருஞ்சூது மாடார்

குளத்திற்கூர்வசி தன்னைநாட்டார் அதிற்குதிக்கவென்று குறிகாட்டார்
இளைத்தவர்க்குத்தீங்கு எதுஞ்செய்யமாட்டார்கள்
இன்னமுஞ்சொல்லுவேன் கேளும் வசை இரியாதது வெந்நாளும்

வீட்டின்நெருப்பிடமாட்டார் மற்றும் வேறொருவர் தாரம் வேட்டார்
காட்டிற்சென்றோர்க்கிந்த நாட்டிற்பங்கிலையென
கழறிடமாட்டார்கள் கேளு இருகண்ணிலாதான் பெற்றத்தேளு

ஆரண்யந்தன்னிலே ஓட்டார் எழும் அமர்தனிலே முதுகாட்டார்
வீரமிலானே கேள் மேற்கூறியதெல்லாம்
வேந்தனேவுங்கட்கடுத்தது தாய்வீண்பாலுனக்குக்கொடுத்தது

முத்துவேலின் மொழிநம்பு நாளைக்கொத்து கொத்தாய் விழுமம்பு
எத்துவேனுன்றலை தத்திவிழும்படி
எந்தைக்கிக்கோபமுண்டாகுமே அது வில்லையேலுன்னுயிர் போகுமே

### கண்ணன் துதி

அலைகடற்கடைந்த நாடனிலெழுந்த அரவிட முனதிடமழுத்தி
நிலைபெருமந்தாகினிக்கொருசிரமாய் நிறையுறும் வரபயோத்தியில்
சிலையுடனம் புதனதிடங்கவர்ந்து செயவருச்சுனவரை சிந்தும்
உலைவில் கார்முகிலைத்தினந்தொழுமவரே உருவிலே அறிவுடையவரே!

### துரோணர் அருச்சுனன்

பாசுபதந்தாங்கி நின்றனன் கண்ணன்றேரோட்ட பதினான்காம்போரிற்
தூசிமுனையில்நின்ற துரோணன்றனைக்கடந்து—[சென்றனன்
துரத்தியேதேரை விரக்தியாய் செல்லுந்திறத்தினைப்பார்த்து தேசிகன் வேந்தி
செல்லாதே யிங்கேநில்லடா எந்தனைவிட்டு சென்றதென் பதில்சொல்லடா

ஐயாவுந்தனைவெல்லவே உச்சிப்பொழுது ஆதுமப்புறஞ்செல்லவே
மெய்யாக்கன்னனெதிர்த்தால் மீதிநேரமும் போகும்—ச
விந்தையமன்னசிந்துவின் றலையை பந்தெனவுருட்ட எந்தனுலாமோ
வீரமானமும்போகுமே பொழுதுபோனால் வெந்தணல் தேகம் வேகுமே

### துரோணன்

வஞ்சகஞ்செய்யலாகுமா கெஞ்சினதனல் அஞ்சிவிட்டிடப்போகுமா
நஞ்சுக்கொடியுடைய ராசனிதனைக்கண்டால்—சு
ராசர்கள்சபையில் ரோசமாய்ச்சொல்வான் மோசமாயமரும் நாசமாய்போகும்
காணம்விட்டிடலாகுமே உந்தனைவிட்டால் பிராணன்கெட்டிடப்போகுமே

103584

அருச்சுனன்

உந்தன்சபதந்தீரவே பாஞ்சாலன் றன்னை தந்திடுவென்று கூறவே
அந்தத்துருபதனை எந்தன்தேர்காலில் கட்டி—சு
அப்பொழுதுந்தன் சொற்படியவனை செப்பியபடி உன் அர்ப்பணஞ்செய்தேன்
அதுவுமறந்துவிட்டீரோ சேற்கையால் வந்த அஞ்ஞானத்தாலே கெட்டீரோ

இதுவுமது

ஆத்திற்காரபிடிக்கவே வுந்தன் பாதத்தை பார்த்து மனந்துடிக்கவே
சேர்த்து வில்வில்நாணியை கோர்த்துக் காதுவரையில்
செஞ்சடாழி குஞ்சரங்காத்த தஞ்சிடும்படியே துஞ்சிடச்செய்தேன்
சேதியின்னமென்சொல்லுவேன் எதிர்த்தீரானால் நீயிலுயிரைக்கொல்லுவேன்

துரோணர்

ஆனுவிப்போது செல்லடா உந்தன் பகையை அந்தமனத்துன் வெல்லடா
காணுதுபோலத்துரோணன் பேணுரிடமேசென்று—சு
கண்டவர் தன்னைத்துண்டமதாக அண்டருங்காண எண்டிசைதோறும்
கார்முகத்தைவளைத்தனன் கருதலாரை போர்முகத்திற்றளைத்தனன்

அருச்சுனன்

தேவைரநடத்திச்சென்றனன் எதிர்த்துநின்ற பேலாயனைத்தும் வென்றனன்
காரையொத்திடும் வண்ணன் கண்ணன்சொன்னப்படியே—சு
கார்முகவாளி போர்முகமதனில் நேர்முகமாக பார்முகம்உருவ
கலைவிட்டுச்சூரையாடவே முத்துவேற்கவிக் கிணையிலையென்று பாடவே

பலவரசர்கள்

மால்விடுதேரினை யோட்டினான் எதிர்மேல்வருசேனையை வாட்டினான்
நூல்வருஆரியன் கால்வருபுதல்வனும்
சேல்பொருதென்னவும் ஓடினார் தன்சிலைவளைத்துப்பாணஞ்சாடினார்

கிருபமாமுனிவந்து முட்டினார் தேரை கிருதவர்மன் வந்து கிட்டினான்
கிருபர்குழாங்களும் கிகரிலாச்சேனையும்
பருவமழையன்னசொல்லவே கோடிபாணவருழங்கள் செல்லவே

சகுனியுடன் விந்துபுரியே சமர் தந்தார் வலமீடசாரியே
மிகுதுன்மருடனும் விறல்விட சேனனும்
விரைவுடனே வந்துமேவினார் வாளி மின்னலொளி கீர்த்துவினார்

ஆரியன் முதுகிட்டு வோடினான் தன்வீரிய மிகவெட்டு வாடினான்
பேரியல்கிருபனும் நேர்கிருதவர்மனும்
பிணமலை தன்னிலொளிந்தனர் இவனுக்கிணையிலையென்று விளிந்தனர்

சகுனியுந்தன் வீரங்கெட்டனன் பூரிதன்னுடல் மானமும்விட்டனன்
மிகுதுன்மருடனும் விறல்விடசேனனும்
உகுஞ்சோரிபூமியிற் சிந்தவே சொல்லத்தகும் போரிலிருவரும் பிந்தவே

யானையறு கோடிபட்டன தோச்வமொருகோடி கெட்டன
சேனை லெட்சம்ரணச் சேற்றினில் வீழ்ந்கிட
தேர்பதினாயிரம் போயின் எதிர்த்த தெவ்வரதோகதியாயின

கானமேரியுற்ற தென்னவே கேரிற் போனபடை வானிற்றன்னவே
வானவில்லொத்துவளைத்துக்காண்டீபனும்
தானவர்போற் சூறையாடினான் முத்துவேற்கானமுற்ற கவிபாடினான்

கன்னன்

காண்டீபா ஓடாதேநில்லடா வருங்கன்னனுக்குப்பதில் சொல்லடா
ஆண்டியைப்போலவே ஆறிரெண்டாண்டு நீ
ஆரண்யந்தன்னிலே சென்ருயே இன்று அமருக்கென் முன்வந்து நின்ருயே

அருச்சுனன்

வந்தகாரியத்தைப்பாரடா வீண்வார்த்தை எதற்கு நீ கூறடா
பைந்தொடிதுரௌபதை மன்றவிலன்று நான்
பாரவில்வளைத்ததுங்கண்டையே வீழ்ந்துப்பாரிலுடைந்தது மண்டையே

கன்னன்

ஆகாயிப்போதுன்னைப்பார்க்குறேன் இன்று அரைக்கணத்திலுயிர் போக்குறேன்
சாகத்துணிந்தோர்க்கு சமுத்திரங் குளமன்ன
சமருக்குவந்தென் ஞாயமோ இதுசதுர்விதத்திலொருபாயமோ

அருச்சுனன்

நிரைமீட்க எல்லோரும் வந்தீரே அன்று நெடியவில்வளைத்துத்தம் தந்தீரே
அரைகொடிதன்னிலே ஆநிரையைவிட்டு
அத்திபுறங்காலால்சென்றீரே நீங்களாரொருவனையன்று வென்றீரே

கன்னன்

வெயிலவன் பாணத்தை எடுத்தான் சூல்புயலென விசயன்மேல் விடுத்தான்
கயிலையன்று சென்ற காண்டீபன்றேர்தன்னை
காலொடுமேலு மொடியவே நின்ற மாலொடுவாசி மடியவே

அருச்சுனன்

தந்தையத்தி ரமெடுத்தனன் திவ்யமந்திரதூபங் கொடுத்தனன்
விந்தையகிரியொத்து வந்தவன்றேரினை
வேரொடு பூமியில் வீயவே நாலு வேகப்புரவியுமாயவே

கன்னன்

கால்நடையாய்க்கன்னன் ஓடினன் தங்கள் காவலர் கூட்டத்தைநாடினன்
மேல்விடுதேரினை கோல்கொடுவெல்பவர்
மேதினியிலாருமில்லையே முத்துவேல் ஓதிய கவிக்கில்லையெல்லையே

சுதாயு

வருணன்பெற்றிட்டசுதாயுவாம் சமர்தருணம்பார்த்தால் சண்டவாயுவாம்
மாணமுனக்கென்ன மகபதிமைந்தனே
காணமிட்டொரு கணையெடுத்தான் எதிர்காண்டீபன் மீதனைவிடுத்தான்

அருச்சுனன்

வந்தபாணத்தை விலக்கினன் தன்சொந்த பாணத்தாற்கலக்கினன்
முந்தசெய்த வினை வந்ததுபோலவே
அந்தோதேர் பாகுமழிந்தது நான்குஅச்வமுமப்போதொழிந்தது

சுதாயு

வண்ணக்கணையொன்று யெடுத்தான் கமலக்கண்ணன் மேலதனையும் விடுத்தான்
அன்னவாகன னளித்ததோர் வாளியை
ஆத்திரத்தோடன்று ஏவினன் தடுபார்த்தனே நீயென்று கூவினன்

அருச்சுனன்

ஆனந்த அத்திரமெடுத்தான் தன்னுரந்தந்த விலில்பூட்டிவிடுத்தான்
பானந்த அத்திரம் விரைந்தெதிர் சென்றதும்
பாய்ந்தொன்ருென் ருேடிபட்டன வலிஓய்ந்தன்று கீழ் வீழ்ந்துவிட்டன

சுதாயு

தந்தையினுசகமெடுத்தான் தொடுத் திந்திரன் மைந்தன்மேல் விடுத்தான்
அந்தரமெங்கணும் வந்திருள் சூழ்ந்திட
அடிவானமன்ன இடித்தன சேனை யனைத்தும் வீணுகமடிந்தன

அருச்சுனன்

பெற்றவனத்திர மெடுத்தான் நேருற்றவன் மீததை விடுத்தான்
அற்றிடத்தன்கதி அருக்கனுந் திங்களும்
மற்றதை சென்றுவிழுங்கின அவமானப்பட்டது வுமழுங்கின

சுதாயு

வில்வில் வெல்லுபவர்யாரிலை எதிர் சொல்லவென்றுலிந்தப்பாரிலே
நல்லதிவன் றன்னைக் கொல்லவேண்டுமென்று
நாடித்தன் கதையையெடுத்தனன் எதிரோடியே மார்பில்விடுத்தனன்

கண்ணன்

கதையதிவேகமதாகவே விசய காண்டீபன் மீதன்று ஏகவே
இதைக்கண்ட கண்ணனுமெழுந்திருந்தப்போது
ஏற்றனன்றன் மார்புதன்னிலே உயிர்தோற்றனன் வீழ்ந்துயிர் மண்ணிலே

அருச்சுனன் சுதாயுவின் கதிவினவல்

ஐயாயிது வென்னமாயமே சொல் வீரரால் செய்திட்டவுபாயமே
மெய்யாசங்குசக்ர கையா நானுந்தனை
வேண்டினேனிப்போதே சொல்லுவீர் கணந்தாண்டியேயப்பாலே செல்லுவீர்

கண்ணன் பதில்

தந்தையிடம் வரம்பெற்றவன் எத்தாணியுமெதிரிலா துற்றவன்
அந்தப்பன்னவாதை சொந்தமாதா கண்டு
ஆயுதமில்லாதார் மாரிலே விட்டால் மாயுவாய் நீயந்தப்போரிலே

அன்னையின் சாபம்பலித்தது தந்தையளித்த வாமுமறித்தது
வன்னக்கதை யொன்று பின்னமின்றி சொன்னேன்
வந்திடு அப்பாலே செல்லுவோம் முத்துவேற் றந்திடுங்கவிபாடி வெல்லு
[வோம் 5

அடலாயிரவாகு

திடமாயிரஞ்சிம்மமொத்தவன் வாகு அடலாயிரந்தன்னைப் பெற்றவன்
படமாயிரங்கொண்ட பாம்பினைப்போலவே
பரிரதங்கரிகாலாள் சூழவே கண்ட பகைவரெல்லாம் முடிதாழவே

அருச்சுனன்

சகத்திராவாகுவைக்கண்டனன் அதைத்தாமோதரனிடம் விண்டனன்
அகத்தியரெழுகட லதுபானஞ்செய்தாப்போல்
ஆயிரம்புயத்தையுந் தள்ளுவேன் சிரமைந்நூறையு மிப்போகிள்ளுவேன்

அடலாயிரவாகு

என்றசேதியது காதிலே பேரிடியொத்தவன் கேட்டப்போதிலே
நின்றவன் கைகளிலொன்றிய விற்களை
நிலமலையென்ன வளைத்தனன் வாயிற் கலகலவென்று நகைத்தனன்

அருச்சுனன்

ஐந்நூறுவிற்களிற்றொடுத்தான் விசயன்றன்னொரு சாபத்தாற்றடுத்தான்
முன்னூறு வாளியை முடிமுதலடியீறாய்
மூர்க்கன்மேலப்போது எய்தனன் காளமுகிலின்நிகர் கணைமழை பெய்தனன்

**ஆயிரவாகு**

முன்னூறுபாணங்கள் போதவே தன் ஐந்நூறு வாய்களாலூதவே
தொண்ணூறுகாதம் போய் வெண்ணீறதாகவே
தூளாகி மண்ணிலுதிர்ந்தன சேடன்றலைகளாயிரமதிர்ந்தன

**அருச்சுனன்**

தன்பாணம் வியர்த்தமாய்ப் போகவே கண்ட தனஞ்சயனுங்கோபமாகவே
வன்பாரதப்போரின் வந்தெதிர் நிற்பவன்
வாய்திறந்தாரென்று சொல்லையா நின்று வாதாடுமவன்றன்னை வெல்லையா

**ஆயிரவாகு**

நினைத்திடும் போதொன்றதாகுமே வில்லிற் பிணைக்கும்போது நூறுபோகுமே
விடுக்கும்போதாயிரம் பறக்கும்போது லெட்சம்
அடுக்கடுக்காய் கோடிஎய்யுவே விசயன் ஆயன்றிருவடி வியயவே

**கண்ணன்**

வாணனையழித்திட்ட மந்திரஞ்செவியில் வாங்கிக்கொள்வாயொரு தந்திரம்
ஆணவங்கொடுநின்ற அடலாயிரவாகை
அறுத்திடுவாய் நொடிதன்னிலே நீ யதுவரைநில்லெந்தன் முன்னிலே

**அருச்சுனன்**

சிலீமுகந்தன்னை தொடுத்தனன் மந்திரவலியுறும்படியே விடுத்தனன்
வலியுடைக்கொடியுடை வானவர் கோன்மகன்
வாகுகளாயிரம் வெட்டினன் உடன்வானுலகமதைக்கிட்டினன்

**பொது**

மலைபோலாயிரந்தோளும் வீடவேவ்வந்த மகுடமன்னரெல்லாமோடவே
அலைகடற்போல் சத்தம் அமர்க்களந்தன்னிலே
அதுவோர்கணத்திலெழுந்தது மீன் அந்தரம்விட்டு விழுந்தது

விண்ணோடு தேவர்கலங்கவே கண்டவெய்யோன்ரதமுங் குலுங்கவே
மண்கலங்க கற்றோர் பண்கலங்கிடவும்
வாசுகிசேடன் மயங்கவே ஏனைமாசுண மெல்லாந்தியங்கவே

யானையாயிரம் பதினாயிரந்தேர் அடர்பரி நூறு நூறாயிரம்
சேனைபத்துலெட்சம் வானகந்தன்னிலே
சென்றதுகவந்தமொன்றாடிட மலைக்குன்றென விழும்பிணமேடிட

கவந்தம்பல்லாயிரமாடின காண்டீபக் கனகமணிசற்று பாடின
அவன்றன் சிலைமணி அனந்தநாழிகோம்
அடித்ததுவாரெட்டுப் போரிலேபார்த்தன் மடித்தது கணக்கிடுவாரிலை

இப்படியிவன் யுத்தஞ்செய்யவே முத்துவேற் செப்பியகவி மழைபெய்யவே
தப்பிதமின்றியே தாருகாவசுரனும்
ஒப்பறுமுகன் சமர்போலவே என்றுசெப்பினர் தேவர்கள்சாலவே 6

**கண்ணன் புரவிகள் விடாய்தீர விசயனிடங்கூறல்**

உச்சிப்பொழுதிப்போ ஆச்சுதேபுரவி ஓடிசளைத்திட்டுப்போச்சுதே
எச்சற்கூடநாவி லில்லையேஎன்செய்வேன்
எட்டிநடத்திடப்போகாது அதைத்தட்டி வோட்டவென்னாலாகாது

தண்ணீருந்தினால் ஓடும்தண்ணீ ரில்லாவிட்டாலே தள்ளாடும்
உண்ணீரும்வற்றின கண்ணீரும்பற்றின
தெண்ணீர் குளமுண்டுபண்ணுவாய் சீவகாருண்யமென்றெண்ணுவாய்

இருகட்சியுமிளைப் பாறுமேபுன லுண்டாலிப்போகளை தீருமே
பொருகட்சிஇரண்டையும் பொதுவாய் நினைந்திடு
பொருவற மெண்ணுங்கிலொன்றே இதைப்பொருந்தச் செய்திடுவாய் நன்றே

அருச்சுனன்

சொன்ன சொல்லுக்குரெண்டேது தாங்கட்சொன்னதெதுந்தவறாது
பின்னமிலாமலே வன்னநடமாடும்
வன்னக்குளமொன்றுண்டாக்குறேன் யாவர் வறளையுமிப்போதே போக்குறேன்
பான்றந்த வத்திரமெடுத்தான் புவி பாதலமுருவிட விடுத்தான்
திறந்திடநிலமன்று சிறந்திடக்குளமொன்று
தேவேந்திரன்மைந்தனுண்டாக்கினான்கண்ணன்றேர்விட்டுக்குதிரையைநீக்கினான்

குளம் பெருமை

ஆழியினும்பெரிதாழமே கடலேழினும் பெரிதுவிசாலமே
வாழியென்றருச்சுனன் வாழிவெஞ்சிலையுடன்
வந்தவர்கட்பானம்பண்ணினார் திவ்ய வானதீர்த்தமென்று எண்ணினார்

கண்ணன்

வறளைத்தீரத்தண்ணீர் காட்டினார் வெள்ளைவாசியையுங் குளிப்பாட்டினார்
தரளங்கொழிக்கின்ற தரங்கக்குளத்திலே
தானும்விழுந்துக் குளித்தனன் பூமானுங்கண்கண்டு களித்தனன்

குளச்சிறப்பு

சுத்திகந்தவனச்சோலையே நிரை சூழ்ந்துளது தென்னஞ்சாலையே
அத்திபலாக்கொய்யா தித்திக்கும் வாழையும்
மற்றுள்ளமர்வுடன் மாதுளம்தினஞ் சுற்றிப்பார்க்கச்சலியாதுளம்
மந்தாரமும்பாரிசாதமும் தங்கவந்தார்க்குதவும சோகமும்
செந்தாமரையுடன் நந்தியாவட்டமும்
சேர்ந்திடுஞ் செண்பகப்புன்னையும் அதைச்சார்ந்திடும் நல்லமைக்கொண்ணையும்
ஆஞ்சியாப்பிளன்னாசியே இந்தப்பாரெங்கு மெச்சிடுமாசியே
வேறெங்குமில்லா விளா வருநெல்லியும்
வீசுமதன்மணங்காதமே என்று பேசுமைந்தாவதுவேதமே
பச்சைமரகதநீலமே படி வைத்திழைத்தத்துறை நாலுமே
மெச்சும்பவளமும் அச்சமில்மேதமும்
சொச்சமிலாப்புட்பராகமே பார்த்துத் துதித்திடும் பேர்களனேகமே
வக்காகருநாரைகொக்குமே தொண்டை விக்கானின்ற மீனைக்கக்குமே
அக்காகுருவியுஞ் சக்கரவாளப்புள்
அன்றிலெனுஞ்சில பட்சியேஅதில் வென்றிகொளும் பலகட்சியே
மாடப்புறாவுடன் காடையும் கூடிவந்துவிளையாடுஞ் சாடையும்
நாடெங்குமோடினுந் தேடமுடியாத
நல்லபஞ்சவர்ணக்கிள்ளையும் ஓடுஞ்சொல்லவொண்ணாக் கீரிப்பிள்ளையும்
ஓலவராலுடன் கெண்டையுந்துள்ளி மேலெழுந்து செய்யுஞ்சண்டையும்
ஆளையடித்திடும் வாளைத்திமிங்கலம்
அன்பானராசியிற் பத்துமேகுளமுன்பாய் வலம்வந்து சுத்துமே
கின்னரப்பட்சியின்கீதமே காதிற்கேட்டவுடன் வரும்போதமே
துன்னியகருடனும் உன்னிதசெம்போத்தும்
தொங்கிடுந்தூக்கணாஞ்சிட்டுமே தான்தங்கிடவே கூடுகட்டுமே

குயில்முத்தவேலிசை பாடுமே ராகங்கொண்டுவண்டு சுதிகூடுமே
மயிலினமாடிட மண்டுகவரணம்
மத்தளதாளங்கள்போடுமே கேட்டாற்சித்தர்சிரங் கூடவாடுமே

துரியன்றுரோணனைச்சீறல்

எதிரிபடைகள் சென்றனர் விடாய்தவிர்த்து இளைப்பாறி அங்கேநின்றனர்
அதிரக்கணை தொடுக்க அருச்சுனன்மேல் விடுக்க—சுருள்
அவர்கணையதனை கவர்கணையாலே தவறிடச்செய்து உவரியைப்போன்ற
அரசர்கூட்டத்தைக்கொல்லவே மீண்டவரோடி ஆரவோனிடத்திற் சொல்லவே

என்னவென்றுநாம்சொல்வது காண்டீபன்றனை எப்படிநாமும் வெல்வது
சொன்னலதிலென்னலாபந் துரோணன்றனக்குக் கோபம்—சு
தாண்டியதேரின் தாண்டியபுரவி ஈண்டுறுமாயின் பூண்டறும்சிந்து
துஞ்சுமைத்துனன்றலையே பொழுதுபோமுன் அஞ்சும்படிநாம்கொலையே

துரியன்

இந்தமோசஞ்செய்யலாகுமா சிந்துவைக்கொல்ல வந்தவனுய்யப்போகுமா
அந்தத்தனஞ்சயனை முந்தநடுவில்விட்டால்—சு
அப்புறம்போனலெப்படியாமோ செப்பியபடியே தப்பறக்கொல்வான்
அவனைவிட்டதுமோசமே இன்றையயுத்தம் ஐயாவுன்னலே நாசமே

துரோணர்

துரியாநீகோபங்கொள்ளாதே பழிசுமத்தி எரிவாய் நரகிற்றள்ளாதே
சரியாயர்ச்சுனனேடு சமர்செய்துக்கொண்டிருந்தால்—சு
தருமருவீமன் சாத்தகியாழ்வான் அருமையினகுலன் அவன்றம்பிதேவன்
தடுத்திடயாருமில்லையே அவர்கள்வந்தால் தானுமிகவுந் தொல்லையே

கவசமளித்தல்

கவசமுந்தனுக்களித்தேன் மார்பிற்றரித்து காண்டீபன்றன்னைக்களித்தே
துவசவரவம்போலே தோன்றியவன் முன்னலே—சு
தொடுத்தொருபாணம் விடுத்தவன்மேலே அடுத்தனையானல் தடுத்திடலாகும் 8
துரியாஎதற்குமஞ்சாதே முத்துவேற்கவி சொன்னற் சிந்துவுந் துஞ்சாதே

துரியன்

துரியன் விரைவினிற்சென்றான் பார்த்தன்மேல்வாளி தொடுத்தெதிராகவே [கின்றான்
எரிவாயுரகம்போலே இவன்விட்டசரகோபி—சு
எங்கினும்புகையே தங்கிடப்பகலும் கங்குலைப்போல வங்கிருள்கப்ப
இடிபாணந்தன்னைத்தொடுத்தான் காண்டீபன்றேரை பொடியாகவென்று [விடுத்தான்

அருச்சுனன்

வருணனத்திரந்தொடுத்தான் அதைத்தடுக்க தருணமீதென்று விடுத்தான்
கருணையுடையக்கண்ணன் கரியமேகத்தின் வண்ணன்—சு
கண்டிடவதனைத்துண்டிடமாட்டா வெண்டிடவிசயன் மண்டியையெடுத்து
கார்முகம்வளையவில்லையே துரியன்செய்யும்போர்முகம் நின்றிடத்தொல்லையே

அருச்சுனன்

கண்டாற்காதமேஓடுவான் இன்றைக்கியென்னை திண்டாடப்பாணஞ் சாடுவான்
அண்டாதிதேவர்க்கெல்லா மமுதமளித்தயீசா—சு
அந்தகன்மகனும் வந்ததன்வழியை சந்தேகமின்றி எந்தையேகூறும்
அவனையெப்படிவெல்வது சயிந்தவனை அத்தமனத்துட்கொல்வது

பாணஞ்சிதறிவிழுதே இன்றைக்கியவ மானப்பட்டுன்னைத் தொழுதேன்
மானத்தைவிட்டுவுயிர் வாழ்வதிலென்னபலன்—சு
வன்னியைவளர்த்து இன்னிலம்விட்டு பொன்னிலமேக வுன்னிடுவேன்யான்
வாக்கொருக்காலுந்தப்பாது வீணனவழி போக்குஞ்சொல்லாதேயிப்போது

**வேல் ஈதல்**

நரகாசுரனைவென்றது அதும்போதாமல் நாலுதிசையுஞ்சென்றது
விரகாயளித்தேனிந்த வேலதனைவிடுத்தால்—சு
வீறிடுங்கவசம் பீரீடும்பொத்தம் கூறிடும்படியே போரிடுவாய்நீ
விசயாயெதற்குமஞ்சாதே செயம்பெறுவாய் வேண்டியெந்தனைக்கெஞ்சாதே

தந்திரவேற்றன்னையெடுத்தான் கிட்ணயவென்னுமந்திரஞ்சொல்லியேவிடுத்தான்
அந்தரகவசந்துளாய் சிந்திடச்சமர்ப்புவியில்—சு
அப்பொழுதவனுயிர் தப்பரிதெனவே குப்புறவீழுந்து பிற்படவெழுந்து
அரவக்கொடியோனோடினான் முத்துவேற்கவி பாவப்பற்குளன் பாடினான் 8

**பாஞ்சசன்னியம் பூரித்தல்**

கோடிசேனைகுவிந்தது அர்ச்சுனன்றேரை ஒடியெல்லாங்கவிந்தது
சாடிடவென்றாற்கதிர் காடுமேற்றிசையென்று—சு
சந்தனங்கடவ வந்தனம்வேண்டாம் எந்தையேதிருப்பும் வந்திடும்வழியே
சாயங்காலமுமாச்சுதே சொன்னசபதம்தவறி யிப்போதுபோச்சுதே

**கண்ணன்**

பாஞ்சன்னியத்தை ஊதவே அதனொலியும் பார்மன்னர்காதில்போதவே
சாஞ்சார்திடுக்கிட்டனோர் தாணியிடங்கொளாமல்—சு
தர்மரின்செவியில் தானதைவாங்கி கர்மமோபொல்லா காலமோவென்ன
சாத்தகிதன்னைக்கூவினார் பார்த்தன்கண்ணனை பார்த்துவாவென்று ஏவினார்

ஆழிசங்கமுங்கோதண்டம் வாளுங்கதைதேர் அடுத்ததுவுமேலண்டம்
தாழயிறங்கிடாமல் தன்காத்தால் தடுக்க—சு
தாருகன்சென்றான் போரிலேயென்று கூறினான்முத்துவேற்கவியன்று
தனஞ்சயன்தாண்டிசெல்லவே அந்தவியூகந்தானுங் கடந்துமெல்லவே 9

**சாத்தகி**

வாய்த்ததுயுத்தமென்றெண்ணினான் சென்றசாத்தகியுமதம்பண்ணினான்
எய்த்துத்துரோணனை சாய்த்தப்பாற்செல்லவே
எல்லவருமொன்றாய் கூடினார்வாளி இவன்மேலே வந்தன்றுசாடினார்

வல்லவிற்றன்னைவளைத்தனன் எதிர் வந்தமன்னரைத் துளைத்தனன்
கொல்லவன்றெதிர்வந்த நல்லச்வத்தாமனை
செல்லவேபின்புறந்தள்ளினான் மடைசேலன்ன பாய்ந்தங்குத்துள்ளினான்

துரியன்றம்பி பலர்செல்லவே அவரை யெரியம்புகொண்டங்கே வெல்லவே
கரியமேனியனின் அரியதம்பி அங்கன்
கன்னனைவில்லாற் செயித்தனன் பாயுங் கவனப்புரவியழித்தனன்

மீண்டுஞ்சேனைகளைத்தாண்டினான் கண்டவிடசேனன்றன் றேரைத்தாண்டினான்
தாண்டுமவன்றனைத் தாண்டியின்மீன்போல
தவித்திட அவனைட்பின்றள்ளினான் பின்னுஞ்சக்ரவாளம் போலத்துள்ளினான்

கன்னன்றனைப்பின்னுங் கண்டனன்வெல்ல கார்முகந்தனை கையிற்கொண்டனன்
வண்ணக்கணைபல முன்னும்பின்னுமாக
மார்மீதுந்தோள்மீதும் விட்ட ரன்முகமாறிடப் பின்சென்றுகெட்டனன்

ஆரியன்கிருபனும்ஓடினான் சோரிவீறிடப் பாணத்தாற்சாடினான்
வீரியமாய்நின்ற விறல்கிருதவர்மனும்
போரிடச்சாத்தகி தன்னையே வுடன் நேரிடவன்றோரு முன்னையே

ஒருகணையாற்பாகன் மாய்ந்தனன் மற்றொருகணையாற்றேருஞ் சாய்ந்தன
இருகணையால்வாசி மருவிடபூமியில்
பொருகணையாற்பாகன் வீடவேமுத்துவேற் குருவருளாற்கவிபாடவே 10

## சாத்தகியைத்தேடி வீமன் செல்லுதல்

நிழலொத்ததானைகள்சூழவே எதிர்நின்ற படைபூவிவீழவே
அழலொத்ததிவனம்பா லந்தணன்சேனைகள்
விழலொத்துசாம்பலாய் போனதேகண்ட வேதியனுங்கோபமானதே

## துரோணன்

செல்லாதே வீமாநீநில்லடா வுன்சிலைகொண்டெந்தனை யின்றுவெல்லடா
வல்லானைவில்லினால் வெல்லலரிதென்று
சொல்லாமற்றேர்தனைத்தூக்கினான் தேவரெல்லாம்பார்க்கவானிற் போக்கினான்

அந்தணனென்பு முறிந்ததுதே ராழிகுடங்கை நெரிந்தது
கந்தரந்தப்பின தந்தரமின்றென
கால்நடையாய்ப்பின்னால் ஓடினான் மதிகண்டதன்தாரென வாடினான்

## வீமன்

யூகம்பிளந்துள்ளே சென்றனன் வெறியுக்ர சிம்மம்போல நின்றனன்
நாகக்கொடியோனின் நற்றம்பிமார்பலர்
ஆகத்தின் வலியெல்லாங்காட்டினார் வீமனந்தகனூர் தனிலோட்டினான்

## கன்னன்.

மன்னன்றம்பிபலர்சாகவே கண்ட கன்னன்மனம் புண்ணாய்நோகவே
என்னம்புமுன் பீமா இப்போது நில்லடா
என்றொரு அத்திரமெய்யவே எதிர்நின்றவனுமதைக் கொய்யவே

## வீமன்

வில்லிலோர் வாளிதொடுத்தனன் நின்றவெய்யோன்மகன் மேல்விடுத்தனன்
சல்லியாசத்தேரை கெல்லியே அப்போது
சாரதியிவுளிமடித்தனன் கைத்தனுவும் ரெண்டாக வொடித்தனன்

## கன்னன்.

விடசேனனப்போது வந்தனன் தந்தைக்கு வேறொருதேரினைத்தந்தனன்
இடவலமாக யிருதேர் சுழலவும்
திடமான வீமன்வில்வெட்டினான் அவன் தேர்தனைத்தூளாகக்கொட்டினான்

மூட்டுத்தனமுள்ள மூர்க்கனே வுன் திருட்டுத்தனமின்று பார்க்கனே
விறட்டி நீ கொக்குப்பிடிக்காதே வீணாக
அரட்டைக்கல்வியெல்லாம் பேசுவாய் கையிலாகதவனைக்கண்டாலேசுவாய்

தண்டெங்கே யிப்போ தெடுத்திடு இல்லாவிட்டால் நீ சாகத்துணிந்திடு
கண்டவிடங்காட்டில் கந்தமூலந்தின்று
திண்டாடித்திரிந்தவன் நீயே என்னைசெயித்திட வகைசொல்லுவாயே

## வீமன்

கன்னனுக்குத்தப்பி யோடினான் சென்ற கண்ணன்றம்பியோடுகூடினான்
வண்ணமரகத அண்ணற்றேர் மீதுள்ள
வடிவழகனை வந்து கூடினார் முத்துவேற் கடிகமழ்கவிதனைப்பாடினார் 11

### விகன்னன் வதம்

ஏண்டாதம்பி விகன்னனே உன்தமயன்மார் மாண்டார் வெகுபேர் சொன்னனே
வேண்டாமடாவுன்வில்லைத்தீண்டாதடாயிப்போது
மூண்டாலென் கோபந்தப்பாது உந்தனைக்கொல்ல மூவுலகுமொப்பாது

### விகன்னன்

நாவிருபத்தைந்தை போரிலே கொல்லுவேனென்று மேலும் நீ சொன்னாயென்
கோவியுன் சிலைவளைத்து வாளிகட்பலவிடுத்து [நேரிலே
கூறிய சபத முடிப்பாய் எந்தனைநீயுங் கூசாமலிப்போ மடிப்பாய்

### வீமன்

என்னசொன்னாலுங்கேளனே உனைவதைக்க எந்தன் மனதுதாளனே
மன்னாதி மன்னர்முனம்வாடிய திரௌபதைக்கி
சொன்னாயெடுத்துஞாயமே அதற்குப்பதிலென்ன செய்வேன்சகாயமே

### விகன்னன்

ஞாயத்திற்கிது லெஞ்சமா வேண்டாமெனக்குமாயத்துணிந்தேன் வஞ்சமா
ஆயவமர்க்களத்தில் அம்பெடுத்திட்டபின்னும்
அண்ணன் றம்பியென்பதேது தனுர்வேதத்திலதுவுஞ்சொல்விடுதோலோது

### வீமன்

நான்விடுப்பதுலெஞ்சமா செய்தநன்றியை ஏன்விடுப்பதும் நெஞ்சமா
கான்விடுத்தவரைவேர் களைவனே யானல்லாது
ஊன்விடுத்திடும்வாளியே உந்தனின்மீதுதான் விடமாட்டேன் கேள்நீயே

### விகன்னன்

தமையன் பலபேர்மாளவே நானொருவனாக தரணிமுழுதுமாளவே
சமயம்பார்த்து தன்னுயிர்தப்பித்தா னென்றுசொல்வார்
சாகத்துணிந்தேன்கூடவே உந்தன்கையினால் சாயுச்சம்தன்னைநாடவே

### வீமன்

எந்தன்பாணமுங்கொல்லுமா சபதம்பொய்த்தாலும் என்னையுலகஞ்சொல்லுமா
உந்தனால்செய்தநன்றி ஊழிகாலம்வரையில்
சிந்தைமறக்கக்கூடுமா உனைவதைக்க சிலையிற்பாணமும்நாடுமா

### விகன்னன்

விகன்னன்சாரங்கமெடுத்தான் லெட்சியமாக வீமன்மீதிலே விடுத்தான்
ககனபூமிவரையிற் காளமுகிலைப்போல
கணைமழைதன்னைபெய்யவே வீமனுமதைக் கண்டுதன்னுள்ளம் நையவே

### வீமன்

தானுமோர்வில்லெடுத்தனன் விகன்னன்மீது தனுவளைத்து விடுத்தனன்
வானுமண்ணுங்கலங்க வந்தவீமன்வாளியை
கோனுந்தூளாகத்தட்டினான் வில்லுடன்வாசி நாலும்ரெண்டாக வெட்டினான்
கவசந்துவசம்போகவே தேர்சாரதியுங் கணையொன்றினாலேசாகவே
துவசம்வெட்டுண்டு ரெண்டுதுண்டாய்ப்பூமியில்வீழ
அஞ்சினான் மன்னன் றம்பியே முத்துவேற்கவிக் கஞ்சினான் வீமன்வெம்பியே

### சாத்தகிபூரிசிரவாயு

மூவரும்முச்சுடரென்னவே வாளி முடுகப்பளபளென மின்னவே
தாவருஞ்சாத்தகி தன்னுடன்பூரியும்
மேவரும்வில்லைவளைத்தனர் முகம்வேர்த்தங்கே தான்சற்றிளைத்தனர்

### பொது

இருவரின்வில்முறிபட்டன களத்தெண்ணிலாத சேனைகெட்டன
மருவறும்மல்யுத்தம் பொருவரும்படிசெய்ய
வாளொடுத்துப்பூரிதுள்ளிட தவள வண்ணனைப்பூமியிற்றள்ளிட

### பூரிசிரன்

சிரம்வெட்டகாந்தனையோங்கினன் கண்டதேவகி மைந்தனுமேங்கினன்
வரம்பெற்றவிசயனை வாங்கிடுசிரமென்ன
வாள்பிடித்தகாந்தள்ளினன் சாத்தகி தோள்பிடித்துசிரங்கிள்ளினன்

### துரியன்

பூரியிறந்ததைப்பார்த்தனன் கண்ணிற்சோரிவிழ முகம்வேர்த்தனன்
ஆரிப்படிசெய்வா ரனியாயமென்றிட
அப்போதுகண்ணனுங்கூறுவான் கேட்டஅரவக்கொடியோனுஞ்சீறுவான்

### கண்ணன் பதில்

வீடுமன்சுவேதனைவென்றதும் நீங்கள் கூடியபிமனைக்கொன்றதும்
பாடுந்தனுமறை பற்றியதோசொல்வாய்
பாதகாவென்னத்திகைத்தனன் கோபாலகிட்ணனும் நகைத்தனன்

### அருச்சுனன்

முத்துவேலின்மொழிபாடினர் ஒரு மித்துக்கும்பலாக கூடினர்
அத்தமிக்கும்வேளை யாச்சுதேஜயனே
அமருமினிசெய்ய வேண்டிலேன்எந்த னத்திரத்தை கையாற்றீண்டிலேன் 14

### அருச்சுனன்

பொழுதுபோயந்தியுமாச்சுதே யான் புகன்றவஞ்சினமும் போச்சுதே
எழுதியபடியல்லால் இனியொன்றுவாராது
இப்போதே எரிதன்னை மூட்டுவேன் தேகந்தப்பாமலதற்கிரையூட்டுவேன்

### கண்ணன்.

முந்திவழுவாதே பற்குன இதோ சிந்துவருவானேசர்ச்சன
உந்தியோரம்பினாற் பந்தெனவவன்சிரம்
அந்தரத்திற்போக வெய்குவாய் அவன்றந்தை கரம் விழச்செய்குவாய்

ஆழியாற்சூரியன்றன்னையே மேலாழியின் வீழ்ந்திடுமுன்னையே
தாழியின்வெண்ணெயென்றாழியுமுண்டவன்
தபனன்றன்னையுமொளித்தனன் கண்ட சர்ப்பக்கொடியோன் களித்தனன்

### துரியோதனாதிகள் ஆரவாரம்

துரியன் சௌபலன்கன்னனும் கொடிய துச்சாதனனிளமன்னனும்
எரியோடர்ச்சுனனின்று கரியாகுவானென்று
எல்லவருமொன்றாய் கூடினர் சிந்துவிருக்குமிடந்தேடி ஓடினர்.

யானைமேலம்பாரிவைத்தனர் கண்ட ஐவருங்கண்கள் புதைத்தனர்
வானவர்கோனென வந்திட்டசிந்துவை
சேணகமேறுவான் போலவே அவன்சிறந்திட்டான் கரிமீது சாலவே

வெற்றிமாலை தன்னைச்சூட்டினர் எங்கும் விருதுக்கொடிகளை நாட்டினர்
பற்றியவார்முரசு செற்றிடவப்போது
பகைவர்முடியெல்லாந்தாழ்ந்திட விடப்பாம்புக்கொடியோனைச்சூழ்ந்திட

பனிக்குடையிருபுறங்கவியவே எதிர்பார்த்தோர் கரங்கட்குவியவே
இனிச்சமர் நாளைக்கில்லை யென்றனைவரும்
தனிச்செயபேரிகை தட்டினர் எங்குந்தாளமத்தளமேங்கொட்டினர்

πகன்னியாலமெடுக்கவே வெத்திலைமடித்து காங்கொடுக்கவே
வன்னியினொளிநிகர் சென்னியின்மகுடமும்
அன்னியர் கண்டதும் நாணிட அரவக்கொடியோனஸைத்தானிட

அக்கினிக்குண்டமதன்னிலே வீரனருச்சுனன் வலம்வரமுன்னிலே
தக்கத்துரியனின் பக்கஞ்சிந்துபதி
தானிருவோரும் நகைக்கவே சுற்றுந்தனஞ்சயன் நின்றுநிகைக்கவே

வாழிசிந்துவுக்குகூறினார் முத்துவேல் வளமுறுங்கவி பரிமாறினார்
நாழியிற்கண்ணனும் பாழிடுஞ்சிந்துவை
நானுக்குத்தோன்றிடக்காட்டினான் வின்நாணிதனைக்கணம் பூட்டினான் 15

சிந்துவைக்கண்ணினாற்கண்டனன் ஆதிசிவன்றந்ததனுவைக்கைக்கொண்டனன்
உந்தியரனம்பா லந்தியாகு முனம்
கந்தரந்தனையப்போ கொய்தனன் அவன் றந்தைகரம் விழச்செய்தனன்

சிரந்தனைப்பூமியில் விட்டனன் றந்தை தாமுடைந்தவனுயிர் கெட்டனன்
கரந்தன கதிரென்று கன்னசௌபலரெல்லாம்
திறந்தங்கேவாய் விட்டலறவே மறைந்த தினகரன் பனைத்தெனபுலரவே

பாண்டவர் குதூகுலம்

கண்ணன்றிருவடி சூடினார் முத்துவேற் கவிக்கிணையிலையெனப்பாடினார்
அண்ணலே யருச்சுனனெண்ணம் பலித்தது
ஐவர்கடையுங்கெலித்தது தீய அரவக்கொடியோன் சலித்தது 16

துரோணரிடந்துரியன்வினா

மேகத்தாலிந்திரன் மடித்ததோ கருநாகத்தாற் கிரகணம் பிடித்ததோ
ஆகமெரியுண்ணுமருச்சுனனுக்கென்று
ஆழியாற்கண்ணனொளித்ததோ திகைத்த ஐவர்கள்தானுங்களித்ததோ

துரோணர் விடை

அமாவாசையின்று வல்லையே அதுவாதலாற் கிரகணமில்லையே
விம்மாதேமேகம் வெயின்மறைத்ததென்றால்
விண்ணின் கீழ்பாகஞ்சிவக்குமா காகம் வீறிட்டுகத்தத்துவக்குமா

கண்ணனாழியென்றாய் முன்னையே விபரமண்ணலே கேளது தன்னையே
விண்ணிலெறிந்தாலே மண்ணிலொருகோடி
வெயிலவனுதயம்போலாகுமே இருள்வெருவி நில்லாமலதேகுமே

அறியாமையாலே நீபேசாதே வேறுயாரையுங்கோபத்தாலேசாதே
தெரியாயோபெரியோர்கட்டிருவுளம் பேதித்தால்
செப்புமுத்வேற்கவிதன்னையே அன்றிஎப்பொருளும் மாறுமுன்னையே 17

இரவு கடோற்கசன் யுத்தம்

எண்ணான்கு கோடியின்றீபமே ஐவர்மண்ணாண்ட துரியனின் கோபமே
ஒன்னார்தனையெதிர்த்தின்னாள் வெல்வெனென்று
உண்ணுமற்செய்தார்கள் யுத்தமே யதில் விண்ணுறுபோலோடுமிரத்தமே

வீமன்மகன் செய்தசண்டையே சோரிவீறிட்டு ஓடி டுமண்டையே
எமன்வந்தான் சமர் பூமியென்று சொல்ல
இடிமழையொரு பக்கம்பேய்ந்தன எரிமறுபக்கமுழுமையுந்தீய்ந்தன

πகன்னியரென்றது விறலியர் பாடினி மதங்கியர்

மலைகளொரு பக்கம்வீய்ந்தன பெரியமாமடியாற்சேனை சாய்ந்தன
அலைபோலிறையுமலாயுதன் றன்னையே
அடித்தொருபக்க மடித்தனன் வந்த ஆரியன்கைத்தனு வொடித்தனன்
அச்வத்தாமன் வந்தெதிர்க்கவே கசன் அவன்றேரைத்துளாயுதிர்க்கவே
அடுத்துச்சல்லியன்றேர் விடுத்துச்சமர்செய்ய
அவன்வெறுங்கையோடு ஓடினன் பார்த்த அங்காரயன் வந்துசாடினன்
சாடியகன்னனைநாடியே கண்மூடுமுன் வாளியோர்கோடியே
பாடிதுளைபட்டு வாடிவருந்திட
பாதஞ்சிவந்திட ஓடினன் சிங்காநதஞ்செய்து பின்னுந்தேடினன்
கிருதவர்மன் றேரை யோட்டினன் இவனைக்கிட்டிவில்லின் ஞணி பூட்டினன்
கிருதர்பலரோடு நின்றகடோற்கசன்
நெட்டிப்பின்னல் விழத்தள்ளினன் கால்மட்டிப்போட்டு வீழ்ந்துதுள்ளினன்
மாமுனிகிருபனும் வந்தனன் வீமன் மைந்தனேடு யுத்தந்தந்தனன்
சாமநேமிகல் தான் செய்துமுடியாமல்
எமனிவனென்று வோடினன் பார்க்கயியலாது வென்று கண்மூடினன்

துரியன் கன்னனுக்குக்கூறல்

அரிதந்தவேற்றன்னையெய்யுவாய் கொடு மாக்கிமைந்தன் சிரங்கொய்யுவாய்
எரிவிடக்கொடியோனியம்பிடக் கன்னனும்
இந்திரன்மைந்தனைக்கொலலவே வேண்டுமிதை விடுவதநலமல்லவே

கன்னன்

மாயச்சமரிதுசொல்லுவேன் நாளைவாளியொன்றினலே கொல்லுவேன்
ஞாயம்நீசொன்னது நானேதுநீயேது
ரவிவுதயத்தின்முன்கொல்லுவான் ஐவர்நாட்டையளித்துப்பின்செல்லுவான்

கடோற்கசன்

இந்திரன்றந்தவேல்நேரிலே எடுத்தெறிந்தான் கடோற்கசன்மாரிலே
விந்தையுடன்வீமன் மைந்தனுரந்தனில்
வென்னுருவிச்செல்லமாண்டனன் முத்துவேல்மின்னுறுங்கவிமாலைபூண்டனன் 18

## பதினைந்தாம் போர்ச்சருக்கம்

கண்ணன் துதி

அறிவுயீசன் சிவனென்று அறையுரெண்டோடொருவித
அறியவத்து யிறுதிபார்த்த உறுநன்வேத வந்தணன்
செறிதளர்ந்த பொழில்களுற்ற சிறுவியாண்டாள் சிந்தையின்
வறியுமுத்தி தலைவனன்றி வானநாட்டின் முதன்மையார் 1

வீமனுடன் நாண்நகுலனும் கொடிய எமன்மைந்தன் சகாதேவனும்
சாமளமேனியன் சாத்தகிதுருபதன்
பூமவிபாண்டியன்கூடியே வெற்றி போர்க்களம் வந்தார்கள்நாடியே
வாலவீமனெனுந்தீரனே ஆலகாலம்போற் சீறிடும்வீரனே
சூலபாணிதனைப் போல்சோமதத்தனும்
காலனூர்தன்னிலே மேவினர்விசய காண்டீபன்முன் விடுமேவினல்
எதிர்த்தெதிர்த்தவீரர் முன்னையேநின்று விடுத்தெறிந்தான் வாளிதன்னையே
மதித்திடாதவர்களை சதித்தொருகணையினல்
வானுலகந்தனிலோட்டினன் எதிர்தானிலாத வெற்றிநாட்டினன்

துரோணர்

சதுர்முகம்வந்திட்டசேனையே தன்னெதிர்முகம் நில்லாமல்வானையே
பிதிர்பட்டுஎதிர்பட்டோர் பின்புறம்ஓடிட
கதிர்பட்ட புல்லெனவாடினார் வில்லுதிர்பட்ட வாளியாற்சாடினார்

குந்திபோசனமாடவே களம் அந்திவானமென்னநாடவே
மந்தாத்தேர்துரோணன் உந்திடவாளியை
மாளவர்சாத்தகிகூடியே வாளி வாரிவிட்டாரொருகோடியே

தாமன்றனஞ்சயன் கூடினார் துணை எமனெனவமாடினார்
வீமனுங்கன்னனுந் தாமமெழும்பிட்ட
சோமனுஞ்சூரியன்போலவே தென்னன் றுடர்ந்திடச்சகுனியுஞ்சாலவே

தேயுவுடன்வாயுவாளியே விடச் சேனைவிழுந்ததோ ரோளியே
தாயுந்தந்தைதரமான தர்மன்சேனை
ஆயும்நூன்முனிக்குடைந்தோடின முத்துவேற் காயுங்கிரகணக்கவிபாடின் 2

கண்ணன் தருமருக்கு கூறல்

தருமாவிதனைச்சொல்லுவாய் அச்வத்தாமனையீன்ற தந்தையிடமே செல்லுவாய்
மருமமுடனுன்மைந்தன் மாண்டான் களத்திலென்று—சு
மறையவனிடமே உரைசெயவிதனை அரைநொடிதனிலுன் குறையதுதீரும்-த

தருமர்

பொய்சொல்லிமண்ணைஆள்வது புவியுள்ளவரையிற் புகட்சியிகட்சிநீள்வது
மெய்சொல்லிக்களந்தனில் வீழ்வதுநலமன்றோ—சுருள்
வித்தகாயிதனை உத்தமனிடமே சித்தமாய்ச்சொல்லி சத்தியந்தவறேன்—பொ

கண்ணன்

பெருமழற்கீரமில்லையே பன்முறையிதுதனையே பேசவதென்றாலுந்தொல்லையே
அருமைமைத்துனன் நேற்றுஆரியனுக்குமுன்னே—சு
ஆறெட்டுபோரில் கூறிட்டசபதம் நேரிட்டுஅவனை பாரெட்டுமறியும்—பெ

தருமர்

என்னாசொன்னாலுங்கேளனே இப்பெரும்பழியேற்க எந்தன்மனதுதாளனே
மன்னாதிமன்னரெல்லாஞ் சொன்னானிவன்பொய்யென்று—ச
வந்திடும்பழியே தந்திடும்வழியே அந்தணனுழியே சென்றுயிரழியேன்—எ

துரோணனிடம் தருமர்கூறல்

ஐயாயெந்தனின்குருவே சொல்லுவேன்கேளும் அமார்போற்றிடுந்திருவே
மெய்யா அச்சுவத்தாமா ஐயாயானையைவீமன்—சு
விந்தையாய்கொன்ற தந்திரமதனா லந்தாஞ்சென்ற மந்திரஞ்சொன்னேன்—ஐ

துரோணர்பிரமை

சேனாபதியுங்கேட்டனன் வில்லுடனம்புந் தேரின்மீதிலேபோட்டனன்
நானாதிபதியான ஞானாதிபதிமீதில்—சு
நாட்டியவில்லில் பூட்டியவம்பை கோட்டியமுத்துவேல்பாட்டினின்மதுரம்-சே3

அருச்சுனன்றாய்மனைத்தடுத்தல்

வேண்டாமடாநிறுத்திடு காத்திலம்பை தீண்டாதடாபொறுத்திடு
பூண்டாய்குருத்துரோகம் நீண்டகாலம்வரைக்கும்—சு
போற்றுவரெல்லாந் தூற்றுவருன்னை ஆற்றிடமுடியா தவர்மகன்வந்தால்—வே

வித்தைகற்றுக்கொடுத்தவர் சத்துருவென்ற வெப்பமிலாதடுத்தவர்
சுத்தவீரனீயானால் மெத்தவயர்ந்தபோது—சு
தொடுத்கிடலாமோ அடுத்தவர்மீது விடுத்திடுவில்லை கெடுத்திடும்பாவம்—வி

மைந்தனுகியத்தாமனே ரெணக்களத்தின் வந்தெதிர்த்தாலோரேமனே
அந்தவச்சுவத்தாமா சிந்தைகனன்ருனுல்—சு
ஆரவனுக்கெதிர்பாரினிலுண்டு போரினில்வரிலுன் றேருடற்றுண்டு—மை

**கண்ணன்**

தூய்மாநீவில்லெடுத்திடு தொடுத்தபாணந்து துரோணன்மீதுவிடுத்திடு
எமாந்தாயாகிற்றந்தை யிட்டவஞ்சினம்பொய்க்கும்
இன்னிலம்விட்டுபொன்னிலமேகபின்னீடாவாளிமுன்னிடின்நாளின்-தூ

**தூய்மன்**

சிலையைஎடுத்துத்துள்ளினுன் ஆரியன்றன் றலையையறுத்துத்தள்ளினுன்
மலைபோலநின்றதுரோணன் மைந்தனதனைக்கண்டு—சு
வாரணங்காத்த நாரணன்வாளி பூரணமாகத் தாரணைசெய்தான்—சி

**அச்வத்தாமன்**

அண்டமிகக்குலுங்கவே மாதவன்வாளி எண்டிசையும்நலுக்கவே
கண்டகண்ணன்யாரையும் விண்டுவெறுங்கையாக்கி—சு
காத்திரவாளி தோத்திரஞ்செய்ய பாத்திரமென்று தோத்திடமேலே—அ

வேதங்கடன்னைஎசினுன் வாளிகள்தந்த விண்ணவர்தன்னைப்பேசினுன்
பாதகஞ்செய்திட்டாரம் பாத்திலுள்ளவரென்று—சு
பார்புகழ்முந்துவேற்கவிதன்னை போர்முனைதன்னில் நேர்படச்சொல்வேன்

**கண்ணன் துதி.**

தாயுடன் பிறந்த சண்டனுங் கம்சன் தாவிடு பூதகி யவளை
சேயெனத்தழுவி பாலுடன்சோரி சிந்திடத்தசையெலும்பனைத்தும்
வாயிடையிழுத்து ஆயிடைத்தள்ளி வதைத்திடுங் கார்முகில்வடிவே
நாயினுங் கடையேன் ஆதிமத்யந்தரகிதனு முனையலாகவிலேன்

அட்டத்திக்கும்போற்றும் பூமனே ஐவர்கிட்டமான திட்டத்தூய்மனே
சட்டப்படிசந்திர வட்டக்குடையோடு
தருமன்முதல் மற்ருேர்கூடியே வெல்ல சமர்க்களம்வந்தார் கணுடியே

கன்னன்சேனுபதியாகவே களங்கௌரவருடனன்றுவகவே
மன்னர்பலபடைத் தன்னைச்சூழ்ந்துவர
மகாவியூகம்வகுத்தனன் தூரியன் பகரவேசேனைத்தொகுத்தனன்

பூமியளந்திட்டபாதனுங் நாமம்போடும்பனிரெண்டு வேதனும்
சாமியவர்சொல்ல நேமிவியூகத்தை
தான்வகுத்தான்றிட்டத்தூய்மனே தனுவாரியனைக்கொன்றவமனே

**வீமன்**

யானைமேல் வீமனுமேறினுன் வீரஆண்சிம்மம்போலவேசீறினுன்
வானவில்லாக வளைத்திடுங்கேமனும்
வாரணமாரோகணித்தனன் அதை காரணன்கண்டுகளித்தனன்

**ஆனைச்சிறப்பு**

தன்நிழற்கண்டதுசீறுமாம் முட்டித்தாக்கமலைகளும் பெயருமாம்
பொன்நிறக்கொம்பினுல் எண்ணிலாச்சேனையை
போரினிற்சென்றது வெல்லுமாங் காலால்நேரில்வந்தோர்களைக்கொல்லுமாம்

ஆல்வட்டச்செவிமாருதம் வீசியடித்திட வீழ்ந்திடுமாதம்
காலைத்தூக்கிவைத்தா லாலைக்கரும்பென்ன
கசக்கும்ரொத்தஞ்சார்வடியவே கொன்றுநசுக்குமனைத்துமடியவே

மேருவையொப்பிடுந்தேகமே வானில் காருஞ்செல்லாதந்தவேகமே
தேரும்புரவியும் சேனைகடன்னையும்
சிதறவடித்திடும்வாலினு லாவி பதறமடித்திடுங்காலினல்

கேமனும் வீமனும்போரிலே ஒரு சாமம் யுத்தம்செய்தார் நேரிலே
பூமலிதாருள கேமனின்யானையை
போர்வீமன்றனும்அடித்தனன் தள்ளிப்பூமியில் வீழமடித்தனன்

கேமனுந்தோமரந்தூக்கினன் ஓங்கி வீமனின்யானையைத்தாக்கினன்
தாமதமின்றியே மாமதவேழமும்
தந்தந்துளாகவொடிந்தது தலைகீழாய் விழுந்துமடிந்தது

கத்திகேடயத்தைத் தாங்கினர் சாரிசுத்திவந்துமேலே ஓங்கினர்
வெற்றிவீமன் வீரகத்தியாற்கேமனை
தத்திசிரம்பூமிதள்ளவே புகழ்மூத்துவேற்கவிபாடித்துள்ளவே 2

கன்னன் நகுலன்

பரிதனில் நகுலனுமேறினன் யுத்த வெறிகொண்டு கன்னனை சீறினன்
கரிகிகர்நகுலன் மேலரிகிகர்கன்னனும்
எரியம்புதன்னை விடுத்தனன் விசயன் இளையோனதனைத்தடுத்தனன்

நகுலன்

அச்சமின்றிப்பாணமெய்யவே கன்னன் கச்சைக்கொடிதனைக் கொய்யவே
சொச்சம்நின்றவாசி மெச்சவோட்டும்பாகன்
தொடுத்தொருவாளியற்சாடவே தேர் கெடுத்திடப்பாகனுமோடவே

கன்னன்.

சாரதிதந்திடுந்தேரிலே கன்னனேறினன்நகுலனின்நேரிலே
வாரிதி கப்பலிப்பாரில்வந்தென்ன
சாரிவந்ததேரைத்தட்டினன் வாசிதன்னொடு பாகனைவெட்டினன்

நகுலன்பரிதன்னை வெட்டினன் எட்டிநடந்து வில்லுடனெதிர்கிட்டினன்
புகலவென்னலாமோ போர்வீரரின்வலி
போற்றினன்றாய்வரந்தன்னையே கரையேற்றினனகுலனைப்பின்னையே

அருச்சுனன்

தம்பித்தோற்றனென வோடினன் எரியம்புபலகொண்டு சாடினன்
வெம்பியேகன்னனுந் தம்பியின்னமர்தனில்
வீரமிலாமலேஓடினன் மூத்துவேற்சோரமிலாக்கவிபாடினன் 3

கன்னன் நிராயுதம்

கன்னநீரோளைவாவென்றனன் வெறுங்கையோடமர்க்களம் நின்றனன்
மன்னுதிமன்னனும் சின்னபின்னமாகி
பின்னலே சென்றனவ்வேளையே பெரும் பேர்பெற்றநிகரிலாக்களையே

சல்லியனுமெதிரோடினன் பார்த்த சாத்தகியும் வாளிசாடினன்
சொல்லினற்சூரனின் மைந்தனுஞ்சோனும்
வில்லினல்வழுதியுஞ் சகுனியே செயித்துக்கொள்ளுவோமென்றரிய் வனியே

வீமனுந்தாமனுங்கூடினர் தன்விற்கொண்டு வாளிகள்சாடினர்
பூமனின்றேர்க்கொடி பூமியில்வீழ்ந்திட
சேமத்தேரொன்றினையோட்டினன் தாமன்றேர்புரவிதன்னை வாட்டினன்

கையனுஞ்சுருதி கீர்த்தியே யிவர் கார்முகம் வளைத்தமர்பூர்த்தியே
சைகையுடன்கிருத வர்மன்சிகண்டியை
தான்விடுத்தான் பின்னால்செல்லவே கிருபாசாரியனுமங்கேபுல்லவே
திட்டத்துய்மன் முன்னால் நின்றனன் தேர்கெட்டுப்பின்னாலோடி சென்றனன்
எட்டுத்திக்கானை வீறிட்டுக்கதறிட
விட்டிடுமத்திரம்வானமே சென்று பட்டிடுமாமதன்கானமே
இவர்செய்தசமர் தனைச்சொல்லவே இப்புவிதனில் யாவருமல்லவே
தவறிலாவானவர் தானவர்செய்திட்ட
சண்டையென்ன சேனைமாண்டதே முத்துவேல் வண்டமிழ்கவியை கையாண்ட [தே

துரியோதனன்.

அறகோணத்தேரின் மீதேறினான் நல்லறத்தின் மைந்தன்மீது சீறினான்
உறுமேறுவாளியை உதிட்டிரன்றன்மீது
இருகூறுசெய்திடவெண்ணியே பெருமிகல் புரிந்திடமனம்நண்ணியே

தருமர்

தன்வில்லினில் நாணியேற்றினார் வாளிசர்ப்பக்கொடியோன் மேல்தூற்றினார்
பொன்விடுதேரும் புரவியுடன்றனு
வின்முகத்தின் ரெண்டுபட்டதே துரியன் வீரமடியோடு கெட்டதே

துரியன்

தோமரந்தன்னையெடுத்தனன் தருமர்தோளின் மேலோங்கிவிடுத்தனன்
தாமதமின்றியே தருமனார்வேலினால்
தூமமதாய் பறந்தோடவே வீரதுரியன் மனநொந்துவாடவே

தருமர்

வஞ்சகமான சூதல்லவே வுன் மாமன்றனைக்கொண்டு வெல்லவே
அஞ்சரீகமிது நெஞ்சைப்பிளந்திடும்
அனுசன சபதம்பொய்யாகுமே அன்றி அரைநொடிதனிலுயிர்போகுமே
உன்னுரமென்னிடம் நில்லாது இந்தவுதிட்டிரன் கைவாளி பொல்லாது
என்னிடபெருமையை யான்சொல்வதென்பயன்
இன்றுபோய்நாளைக்கிவந்திடு எண்ணிரு போரதன்னிலேபிந்திடு
முத்துவேலின்பாக்கள் சொல்லுவேன் சிரந்தத்தி வீழ்ந்திடப்புவிகொல்லுவேன்
பத்துகாதவழி எத்திமறைந்தாலும்
வெற்றிமாலைதன்னை சூடுவேன் புவனமெத்திசையஞ் சூறையாடுவேன்

## பதினேழாம் போர்ச்சருக்கம்.

கண்ணன் துதி

அந்தணர் பிறப்பி லணுவருவாகி அயனரன் றேவர்கள் புகழ
உந்தனைக் கண்டோர் எழிலியோர்வடிவ முடைத்தென மாபலி காத்தால்
தந்தனீ ரங்கை தனில்விழுமுனமே சாகர வாடையைத் தரித்த
இந்தமாப் புவியையளந்திடுமுளரி இணையடி துணையது வெனக்கே

பாட்டு

ஒற்றைவெண்சங்கமுழங்கின பறையோதம்வான் கடலுந்தியங்கின
கற்றைவெண்கவரியு மற்றவெண்சாமரை
அற்றைவெஞ்சமரின் வென்தந்தனர் கூடியனைவருமொன்றாகவந்தனர்
எண்ணிருதினமதின்மாண்டதே படைபின்னொருதினமதின் மீண்டதே
நண்ணுமதைப்போல விண்ணுமதர்ந்திட
கண்ணுபிமையவர்மூடவே நிருபர்களந்தனிலொன்றாகக்கூடவே

பஞ்சவர்சேனை கிளம்பவே இப் பார்வளைவேலை தளம்பவே
வஞ்சமிலாதநன் னெஞ்சுடைதருமனும்
அஞ்சாதவீமன் விசயனும் போரி னெஞ்சாத நகுலசாதேவனும்

பார்த்தன்றேர் கண்ணனுமோட்டவே பரிதிமைந்தனுக்கு சொரூபங்காட்டவே
தோத்திரஞ்செய்தைவர் காத்திருபுறம்நிற்க
தொல்புவியரசர்கள்கூடினர் சமர்வெல்வதெப்படியென நாடினர்

கண்ணனைத்தருமர் வணங்கிட யின்று காட்சிசொல்லென்று சுணங்கிட
எண்ணப்படிகன்னன் விண்ணுலகிற்செல்வான்
வண்ணத்துரியனைநாளையே கொல்வான் வாயுமைந்தன்றுள்ளுநாளையே

ஐம்பத்தாறுதேசமுன்னதே நீங்கள் ஆளுங்கடனெல்லாமென்னதே
தும்பைத்தார்பூண்டிடுந் துரைநீங்களை வரும்
பம்பைமேளதாளங்கொட்டவே யிந்தப்பாராளுவீர்கலிமுட்டவே

தருமருந்தன் சோகமாறினர் போரில் தாங்கட்செயமென கூறினர்
பிரமனன்றுளினிற் பேதியாமல்வைத்த
கர்மத்தையாம்வெல்லக்கூடுமா முத்துவேற் கவிக்கிணையாரெதிற் பாடுமா

**கன்னன் றுரியனைப்புகழ்தல்**

சின்னவயதின்வந்தேன் றம்பி நீயுமெனைவளர்த்தாய்மிககம்பி
உன்னையெதிர்த்தஐவர் தன்னையிப்போதேவென்று
பொன்னின்மகுடமுந்தன் சென்னிதனிலணிவேன்—சின்ன

பாலும்பழஞ்சர்க்கரைசோறு எந்தநாளுமுண்டேனே தினந்தோறு
ஆலுமூங்கிலும் போலின்னுளுங்கூடியிருந்தோம்
மேலும்நான்செய்வதென்னு ஆளும்அத்தியின் மன்னு—பா

தேகமுனக்குச்சொந்தந்தானே தினந்தோறுமுனக்குச்சொல்லுவானே
ஆகவந்தன்னில் வந்த சோகந்தனைத்தவிர்ப்பேன்
அரியவீரமுடைய துரியனேகேள் நீயெந்தன்—தே

பாகனொருவனின்றவேணும் கரிய மேகவண்ணனுக்கிணைதானும்
வேகப்புரவியோட்டும் வீரம்யாருக்குமில்லை
ஆகச்சல்லியனென்றே அமர்ந்தால்மிகவும் நன்றே—பா

அவனின்றலருச்சுனனைக்கொல்வேன் நேரே சிவன்வந்தாலுமவனை வெல்வேன்
பவனன்சேய்முதல் மற்றோர் பகழிமுனைக்கியாற்றார்
பாலன்முத்துவேற்கவி ஓவமிட்டிடுந்தேரில். அவ 3

**கன்னனைத்துரியன் வேண்டல்**

பாரதமுடிப்பதெல்லாமண்ணு வுந்தன் பாரமென்றே பெரியோர்சொன்னர்
காரணமானவுன்னை கைவிடுவேனோ அண்ணே
வாரணந்தன்னைக்காத்த நாரணன்போலே காப்பாய்- பா

**கன்னன்,**

அல்லாமவன்செயலல்லாது உலகில் யாதுநடந்திடப்போகாது
எல்லாம்வல்லவனான இறைவனிருக்கும்போது
எதுக்குவுன்மனது வாதிக்குதிப்பொழுது- அ

**துரியன்**

ஆசையென்றக்கடலின் வெள்ளம் என்னைஅலையப்படுத்துதெந்தனுள்ளம்
பாசமுடனேயென்னைப் பாதுகாத்திடவேணும்
பரிதிபெற்றக்கன்னனே அறிதியிப்போசொன்னேனே

கன்னன்.

நீர்மேற்குமிழியிந்தகாயம் நினைத்து பார்க்காவிட்டால் வருமபாயம்
பார்மீது ஆண்டமன்னர் பற்பலகோடாகோடி
ஆரிருந்தாற்புவியில் அரவக்கொடியா யார்க்கும்- நீர்

துரியன்

ஐவர்பங்குப்புவியையாள்வேனோ அன்றி அவர்கையினாலுயிர்மாள்வேனோ
மைவருங்கடலினால் வளைந்தபூவுலகெல்லாம்
மதித்தவாசுசெய்ய உதித்த ஒருவன்யானே-ஐவர்

கன்னன்

செயமொருவர் பக்கஞ்சொல்லலாகுமா அவரைசெயிப்போமென்றுதான்சொல்ல [ப்போகுமா
நயமுடனுந்தனுக்கு நல்லநீதியைச்சொன்னேன்
நானிருக்கும்வரைக்குன் னனிருக்குமஞ்சாதே-செ

துரியன்

முத்துவேலின் மொழியைநம்பு ஐவர் நொத்துடனேவிழவெய்யம்பு
சத்துசித்தின்பமான தாமோதரன்றனையே
அத்துவிழச்சிரசே கொத்தநகத்தினாசே —மு 4

கன்னன் தற்புகழ்ச்சி

வில்லிலெனக்கிணையாரு அதைச்சல்லியாநீயிப்போ கூறு
நல்லதவ்விசயனை நாட்டினிற்சொல்வார்கள்
அல்லவனுக்கிணையானே ஓரம்பினாலேகொல்லுவேனே

இந்திரத்தனுவையும் பெற்றேன் வேறு எதிரியிலாதவலியுற்றேன்
அந்தரத்தோர்மெச்சுந் தந்திரச்சாரதி
ஆகவும்பெற்றேனானுன்னையே இனி யாரெதிர்ப்பார்கள் சொலென்னையே

சல்லியன்

இருவருமிணையிலாவீரர் கொடிய எமனுக்குநிகரான சூரர்
ஒருவரோடொருவர்நீர் யுத்தஞ்செய்தபோது
மருவரும்விசயனால்நீயே பின்னால் மான்வேகமாகச்சென்றாயே

கன்னன்

தோற்றதுளப்போனான்சொல்லு அதைச் சொல்லித்தேரோட்டியேசெல்லு
காற்றுடன்றீயுங் கலந்ததைப்போலவே
காண்பாய்நீயென்னாண்மைதன்னையே சொன்ன காண்டீபனுக்குநேர்முன்னையே

சல்லியன்.

மான்விழித்திரௌபதைக்காகவே நீவல்வில் வளைத்திடவேகவே
தான்வில்லடிபட்டு தரைதனில்வீழ்ந்து நீ
தனஞ்சயன் வளைத்ததும் பார்த்தாயே பெரிய சபைதனிலன்று நீதோத்தாயே

கன்னன்.

விசயனையெதிரென்று சொல்லுறாய் இதுவசதியம் நீவாயைமெல்லுறாய்
புசபலமறியாத புல்லறிவாளன் நீ
பூட்டியக்குதிரையை யோட்டுவாய் உன் பொல்லாங்கெலாமங்கே காட்டுவாய்

சல்லியன்

உண்மைசொன்னால் வருங்கோபம் பொய்யுரைப்பதினாலென்னலாபம்
வண்மைவில்விசயனை இம்மையில்வென்றிட
வானிலுண்டோதெரியாது இந்த மண்ணிலுண்டென்பதுந்நீது

**கன்னன்.**

பரசுராமன்வில்லுண்டு எதிரி பாணம்வந்தால் ரெண்டுதுண்டு
விரசாகவிசயனைப் பெரிசாகப்பேசாதே
அரசாளுமுனக்கிந்தஞாயம் சொல்வதல்லாம் பெருவனியாயம்

**சல்லியன்**

காண்டாவனத்தை யெரித்தவன் றேவர் கைவில்லையெல்லாமுறித்தவன்
பூண்டான்றந்தைமுடி பொன்னுலகந்தனில்
வேண்டாமுனக்கிந்தவீரம் வில்விசயனைக்கொல்வதபாரம்

**கன்னன்**

முத்துவேலின்மொழிபாடுவேன் சிரமற்று விழப்பாணஞ்சாடுவேன்
கத்துக்கொண்டபல எத்துகள்பேசுறாய்
கொத்துகொத்தாய்ப்பாணஞ்செல்லுமே கோபாலகிட்டணையும் வெல்லுமே

**சல்லியன்**

சொல்லிலுனக்கிணையாரு உன்போல்நெல்லிற்பதரெவர் கூறு
வில்லெடுத்தாலொரு சொல்லளவாகினும்
விசயன்முன்னிற்கவுமாட்டிலை நீ வேறொருவர்சொல்லுங்கேட்டிலை
காணுவிடத்தாண்மைபேசுவாய் அவனைக் கண்டாலம் பெடுக்கக்கூசுவாய்
பேணார்வலிமையை பேசலாமெப்போதும்
தாளுண்மைக்கூறிடல் வீரமா இதுதனூர் வேதத்திற் சொலுஞ்சாரமா
அறுபதினாயிரமூன்றுகோடி நிரவசுரரைக்கொன்றானக்கிரீடி
கிருபர்குழாங்களில் நிகராரோசொல்லுவாய்
நீண்டவிண்ணுலகத்தையாண்டவன் வேறு நிகரிலாக்கிரீடத்தைப் பூண்டவன்
திசைநான்கினுஞ்செயம் பெற்றவன் ஆதிசிவனோடும் பெரும்போருபெற்றவன்
வசையேதருச்சுனன் மிசையோதுசொல்விட
திசைபுலருமுனங்கொல்லுவான் வின் னிசைவலான் யாரையுங்கொல்லுவான்

**கன்னன்.**

போதுமுன்சம்பம் நிறுத்தடா இங்குபோர்செய்யவில்லையிறுத்தடா
எதுவுனுண்மையை இப்போதேகாட்டுவாய்
என்றிருபேருங்கொதித்தனர் வாள் கொண்டுமண்மேலே குதித்தனர்

**துரியன்**

துரியன்மத்தியிலே நின்றனன் பதில் சொல்லுவீரெந்தனுக்கென்றனன்
எரிபோலவேபொங்கி எதிர்த்திருபேர்நின்றால்
எப்படிஎதிரியை வெல்வது முத்துவேல் செப்பியபாவினைச்சொல்வது

**தருமர் கன்னன்**

அங்கதேசமாளுஞ்சிங்கமே இன்று அருச்சுனனுனைச்செய்வான்பங்கமே
தங்கனுனசெய தங்கமயினை
எங்கண்முன்னே நொன்றீரபோரிலே எதிர்ப்பாரினியாருனைப்டாரிலே

**கன்னன்.**

தருமனேயீதென்னவர்மமா இதவுந் தனுவேதசாத்திரத்தர்மமா
மருமகன்மகனென்றும் மாதாபிதாவென்றும்
வைத்துப்பார்ப்பதுண்டோபோரிலே சற்று உற்றுப்பார்ப்பாயெந்தன் நேரிலே

**தருமர்.**

ரதமுடைத்தாய்பாவிகன்னனே வலது கரமறுத்தான் சேனைமன்னனே
சிரமறுத்தான் பின்பு சிந்துபதியவன்
சித்திரவதை செய்வதெப்படி உங்கள் துரியோதனநீதிகள்சொற்படி

கன்னன்.

பூரிசிரவாயுதன்னையே காம் போர்க்கலையோ விசயன்முன்னையே
பாரினிற்சாத்திரம் பற்பலவிதமுண்டோ
பட்சபாதகஞ்செய்வதெப்படி கோபாலகிட்ணனவன் சொற்படி

தருமர்.

கொடையாளியென்று பேரெடுத்தாய் எங்கட்குலமெலாமடியோடுகெடுத்தாய்
அடையாளமுனக்கிதோ வன்னமுண்டதற்கு
ஆத்திரமறியாதுகன்னனே வுன்கோத்திரந்தெரியாது சொன்னனே

கன்னன்.

மீசைபடபடென துடிக்கவே மகமேருவோட்டண்டம் வெடிக்கவே
தாசன்றர்மன் வீராவேசங்கொள்ளும்படி
தாக்கினான்முக்கணைதேரிலே தர்மபாக்கியவான் பதினேழாம்போரிலே

தருமன்.

தருமருந்தன் வில்லைவளைத்தார் கன்னன் மருமம்வழிபடத்துளைத்தார்
அருமந்தவில்லையும் பொரும்வாசிதேரையும்
திறந்தந்தபாகையுமழித்தார் அவன்றேர்விட்டு கீழ்விழவொழித்தார்

கன்னன்.

கன்னனும்வேறு தேரேறினான் எழுவகார்க்கோடகம் போலசீறினான்
மன்னவன் றருமனை சின்னபின்னமாக
மாவொடுதேருஞ்சிதைத்தனன் பின்னுமேவு விற்பாகும்வதைத்தனன்

தருமர்

தருமருந்தன்மனம் வாடினார் உயிர்தப்பிப்பின்றல் போககாடினார்
கர்மவிதிப்படி காலம் வந்ததென்ன
கன்னன் றருமனையேசினான் முத்துவேல் வன்னக்கவிசொல்லக்கூசினான் 7

வீமன்

பேசியதமர்தட்போதிலே தென்றல் வீசியதுவீமன்காதிலே
ஊசிநுழையாத தூசிதனிற்சென்று
ஒருகையிற்றண்டைசுழட்டினான் நின்றவிருதர்கள் மண்டைகழட்டினான்
சிங்கங்கண்டயானைபோலவே கோடி சேனைபுடைந்ததுசாலவே
பங்கப்பட்டுதரும ரங்கம்பதைத்திட
பாதத்தில்வீழ்ந்துபணிந்தனன் கன்னன் காதத்தில் நிற்கத்துணிந்தனன்

சல்லியன் கன்னனுக்குகூறல்

கன்னாநீயிவ்விடந் நில்லாதே துள்ளுநாளைவீமன்கோபம் பொல்லாதே
என்னவென்றுநீயு மிவன்றன்னைவெல்வது
என்றலும்வந்ததுகோபமே நீ யெந்தனுக்கோபரிதாபமே

கன்னன்

வீமனையுமிப்போவெல்லுவேன் தம்பி விசயனைத்தப்பாமற்கொல்லுவேன்
எமனைப்போல யெடுப்பனென்வாளியை
என்றவுடன்வீமன்கேட்டனன் றேரில் ஏழைந்துபாணத்தைப்போட்டனன்

வீமன்

பன்னிருவாளியெடுத்தனன் எதிரி கண்ணீர்வரவேவிடுத்தனன்
உண்ணீருசிந்திட கண்ணிமைகொட்டுமுன்
எண்ணிருபாணத்தை விட்டனன் றேரிலிரவிமைந்தன் வீழ்ந்துகெட்டனன்

வீழ்ந்தோனைச்சல்லியன்றூக்கினான் கன்னன் வெந்துயரமதைப்போக்கினான்
எழ்ந்தறுபாணத்தாற் சூழ்ந்திடும்வீரரை
தாழ்ந்தவர்பின்பற்றியோடிட தர்மன்றம்பியரெல்லோருங்கூடிட

விசயன்

சேனையுவீமனுமோடவே கண்டசெந்திருமாற்றேரும்நாடவே
ஆனைமீதுசிம்மம் தானேசென்றதென்ன
வானவன்மைந்தனும் நாடினான் வில்வளைத்தறுவாளியாற்சாடினான்

கன்னனின்றேருந் தூளாச்சுது செல்லுங்கவனப்புரவியும்போச்சுது
வன்னவிற்சல்லியன் முன்னேமுறிந்தது
என்னநான்செய்வதென்றோடினான் முத்துவேற் கர்ணாமிர்தக்கவிபாடினான் 8

துச்சாதனன் வீமன் கதையுத்தம்.

மண்டியிட்டுத்தண்டையெடுத்தார் சமர் வணக்கமெலாமன்று கொடுத்தார்
ஒண்டியிலேநின்று சண்டியின்கன்றுபோல்
கொண்டுயிருவருந் துள்ளினார் எம்பிக்குதித்துக்காலால் மண்ணை அள்ளினார்

காலதண்டாயுதம்போலவே ஓங்கிமேலேசுழட்டினார் சாலவே
வேலையினேறைதயிக் காலையென்றுசொல்ல
ஓலமிட்டாரிருபேருமே கண்ட வுடனடுங்கினார்கள்யாருமே

இடியொத்திருவருங்கத்தினார் தண்டைஇடவலமாகவேசுற்றினார்
அடிவைத்திடுஞ்சத்தம் படியும்நடுங்கிட
ஆதிசேடனும்நெளியவே மேலண்டத்துத்தேவரொளியவே

தண்டிலனற்பொறிகக்கின பார்த்த தரணிமன்னர்மனம்வெட்கின
வண்டிவட்டம்போல வந்திருபேர்களும்
வானமட்டுஞ்சென்றுதாவுவார் மீண்டும் மண்மீதிறங்கியேகூவுவார்

சற்றிருபேருங்களைத்திலர் பொருஞ்சமரினிலன்று இளைத்திலர்
கற்றசாரியெல்லாஞ் சுற்றிசுற்றிவந்து
கதைகட்பிளந்தொடிபட்டன இருகரங்கள் ரெத்தமாகிவிட்டன

வீமன்

முட்டிவிசைபடதட்டினான் அவன் மூளைமண்மீதிலே கொட்டினான்
கட்டிக்குரங்கினாற் றட்டிப்பிடரியில்
நெட்டிப்பூமிவிழத்தள்ளினான் ஒருருகுட்டிப்புலிபோலத்துள்ளினான்

பக்களலும்பையொடித்தனன் கடைப்பல்விழவாயிலடித்தனன்
தக்கப்படியவன் றரையினில்வீழ்ந்திட
தள்ளியேகாலாலுதைத்தனன் உகிராற்கிள்ளியே மார்பைச்சிதைத்தனன்

முதுகெலும்பெல்லாமுறியவே உடல் முன்னும்பின்னொன்றாய்த்தெரியவே
இதுவதிசயமென்று துதிசெயவனைவோரும்
இரணியநாசிம்மமென்னவே கண்டோரிருக்கமுடியாமற் பின்னவே

முகத்தைப்பின்பக்கஞ்சுழட்டினான் சிரமுடிதனைக்காலாற்கழட்டினான்
நகத்தினாலவன்றனை ரத்தமயமாக்கி
காலைவைத்திருகிச்சிரித்தனன் அவன்நரம்புவிசிய நெரித்தனன்

பட்டுரிந்தவிரற்பத்துமே யதுவெட்டுப்பூமிவிழயித்துமே
தொட்டிழுக்கத்தூர மெட்டிநடந்தக்கால்
கெட்டிடத்தானுமுறித்தனன் முத்துவேற் கட்டிடும்பாமா தரித்தனன் 9

### துரியவிரக்கம்

அய்யோநானென்ன செய்வேனண்ணா எந்தனுவிபதறுதையோயின்னாள்
செய்யாதபெரும்பாவம் செய்தேனோ வையகத்தில்
சிதறுதென்றம்பியாவியே மிகப்பதைத்து தெய்வலோகத்தின்மேவியே

காவொருமுழங்தொங்குதே விழிபிதுங்கி நல்லரெத்தமும்பொங்குதே
காவலலொருகோடி காத்திருந்தென்னபயன்
காளையென்றம்பிமூளையே தென்னையினுள்ள பாளைபோற்சிந்துதிவ்வேளையே

சொல்விச்சொல்லியடிக்குறான் கறநறெனபல்லை மிகக்கடிக்கிறான்
வல்லவர்யாரினிமேற் கொல்லவீமன்றனையே
அல்லதென்னுயிர்போகுமே இனிமேலிந்தஅரசுமெப்படியாகுமே

துயிலுரிந்கிட்டசிங்கமே வீமனுவின்றுதோற்றனென்செய்வேன் பங்கமே
அயிற்காத்திற்றுங்கியே வறுமுகனுக்கொப்பான
ஆசைக்கிசைந்தத்தம்பியே சண்டாளனாலே அடிபட்டுநொந்தான் வெம்பியே

### வீமனாவேசம்

இருபாதியாகவாக்கினான் அவனுடலை ஒருபாதிதன்னைத்தூக்கினான்
மறுபாதிதன்னில்நின்ற மன்னன்கன்னனைக்கூவி
வந்துவிடுத்துக்கொள்ளடா இல்லையேல் வில்லைத்தந்துஅப்பாலேசெல்லடா

### கண்ணன்

கண்ணன்கண்ணாலே கண்டனன் வீமனிடத்திற்கடுகியப்போது சென்றனன்
உண்ணுமற்சோரிதன்னை நண்ணாகக்கொப்பளித்து
மண்மேலதனைத்துப்படா முத்துவேற்சொன்ன மதாக்கவியைச்செப்படா 10

### கன்னன் அருச்சுனன் தேர்ப்பரிசிறப்பு

இடம்புரிந்தால்வலம்புரியும் தேர் வலம்புரிந்தாவிடந்திரியும்
நடம்புரிகுறையிவ் விடம்புரிந்தென்னவே
நாலிருபாலுஞ்சுழன்றன உருள்காடும்வேகத்திற்சுழன்றன

புறையற்றபுரவிகள் போரிலே மேருவரையொத்தயிருவரின் தேரிலே
கரையெத்திவிழுங்கடல் நிரையொத்தவலையென்ன
குறையற்றயிருவருமூர்ந்தவே வீரங்கொண்டொருவர்க்கொருவருந்தவே

கண்ணன்சல்லியனென்று சொல்லவே மேல்ககனத்துத்தேவருமல்லவே
வண்ணப்பரிஎட்டும் வெண்ணிறமொத்து
வலியதினுஞ்சமமாகவே சேடன் நலியக்கதியுடனேகவே

சுழியிருதேர்களின்பரியே சூற்றஞ் சொல்லிடவில்லையோர்வழியே
பழியிலாதுயரமும் பருமனும்நீளமும்
அழிவிலாதிவையெல்லாமொன்றே புவியில் அயன்புடைத்ததுமிகநன்றே

மலையிரண்டுவளைந்தன்னவே இருவர் சிலையிரண்டினும்வாளிமின்னவே
நிலைதளாரமல்விற் கலைபுராளாமலே
நிகரிலாதயுத்தஞ்செய்தனர் வாளிநிமைமூடுமுன்கோடியெய்தனர்

தத்திமித்தோமெனப்புரவியே மேளம் நத்தியதாடும்விரவியே
எத்திசையும்புகழ் சுத்தவீரான்ற
× வெத்திவாகைதன்னைச்சூடவே பகைவென்றிடவன்றமாடவே

× எதுகையைநாடி வெற்றி வெத்தியாயிற்று

அருச்சுனன் கண்ணனை ஐயுறல்

கண்ணாகன்னனெந்தனண்ணனே போன்று காணுதகாயாம்பூவண்ணனே
பொன்னாற்மேனியுள்ள பூபதிதருமனை
என்னாவென்றுநானுங்கொல்வது நீயுமெப்படித்தேரோட்டிச்செல்வது

கண்ணன்

பாசறைபார்த்தனைக்கூட்டினார் தனதுபக்தன்றருமன்றனைக்காட்டினார்
தாசன்றருமன்கன்னன் நாசமானானேசொல்
தனுவல்லபுல்லென்றுசொல்லவே அவர்தாமறுக்கவிசயன்செல்லவே

இருபேனையுங்கோபமாற்றினார் கணமிகல்விசயனைத்தேரிலேற்றினார்
பொருவறகன்னனுஞ்செருசெய்கிறானின்று
தறுகணன்னவீமன்சண்டையேகாணசகிக்கவில்லை கன்னனண்டையே

கன்னன்.

கன்னன்பாராபாமூதினான்மணி கலகலவெனத்தேரைமோதினான்
விண்ணும்நடுங்கிட விசயனுமப்போது
விம்மிடுந்தன்தேவதத்தமே முத்துவேல்தம்மொழிபோன்றிடுஞ்சத்தமே 11

சரக்கூடமறுத்த கன்னன் வீமனைவிட்டு விசயனிடம் யுத்தம்

அருச்சுனன்

அங்காரயனொடுசீறினான் திவ்யஅங்கிக்கணைகொண்டு மாறினான்
பொங்கரவம்போன்று சிங்காநாதம்செய்து
புரவிகளுனுமடியவே விற்பிளந்துதூளாகவொடியவே

கன்னனின்றேருமொடிந்தது குத்துக்கார்குடங்கையும் தடிந்தது
பின்னையும்வேறுதேர் கன்னனுமேறியே
வன்னவிற்றன்னைவளைத்தனன் மன்னர்வாடிட வம்பார்த்துளைத்தனன்

கன்னன்

வாருணாத்திரத்தைத்தொடுத்தனன் அடிவானத்திடிபோல்விடுத்தனன்
கர்ணமிர்தமாகக் கானம்பாடிக்கொண்டு
காண்டீபனம்பையவித்தன சிரம் வேண்டியதூளிக்குவித்தன

அருச்சுனன்

வாயுவினத்திரமெடுத்தான் கதிர்சேயுமின் பேரிலேவிடுத்தான்
சாயுமாஞ்செடி தாணியும்விண்ணோடு
சண்டமாருதங்கள்வீசவே பார்த்தத் தானவர்கண்களுங்கூசவே

கன்னன்

அரவக்கொடியோனம்பெடுத்தனன் வந்தஅனிலன்வாளிமேல்விடுத்தனன்
பாவியவிருவாளி பற்றியொன்றோடொன்று
பார்த்தனினம்பைவிழுங்கின வீரந் தோற்றந்தவாளிமழுங்கின

அருச்சுனன்.

இருளம்புதன்னையெடுத்தனன் இதற்கெதிரிலையென்று விடுத்தனன்
மருளையெவர்களும் மண்ணோடுவானுளோர்
வழிதெரியாமன்மயங்கினார் பெரும்பழிவந்ததென்றுத்தியங்கினார்

கன்னன்

சந்திரஅத்திரமெடுத்தான் விசயனந்தாயிருளின்மேல்விடுத்தான்
தந்திரமாய்ச்சந்திரன் வந்துதித்தாப்போல
தானீரெட்டுக்கலைநாடவே இருள் வானமட்டில்லாமல் ஓடவே

அருச்சுனன்.

இந்திரன்றன்வாளிதொடுத்தான் மிகத்தந்திரமாகவேவிடுத்தான்
அந்தரபாதல சந்திரசூரியர்
யாருந்திசைதப்பிப்போகவே எட்டுயானையும் வீறிட்டுஏகவே

கன்னன்.

தந்தையின்கணை தனைத்தொடுத்தான் வெகுவிந்தையதாகவேவிடுத்தான்
தந்திரவாளிகளுந்தியே விண்ணினில்
தாழாதுயாரதுசண்டையே செய்துத்தானுடைந்தமுனைமண்டையே

பிரமன்வாளியைத்தொடுத்தனன் விசயன்பேரிற்தப்பாது விடுத்தனன்
பரமன்கணைவிடப்பார்த்தனுமப்போது
பங்கயன்கணையதுபங்கமே ஆனபடுசூரணஞ்சொல்வதங்கமே

பொது

வரம்பெற்றவத்திரமாயின வேறு வகைக்கணையில்லாமற்போயின
திறம்பெற்றயிருவோருஞ் சிலைவளைக்காமலே
உரம்பெற்றயோசனைநாடவே முத்துவேல்சுரம்பெற்ற கவிமாலைசூடவே 12

கன்னன் நாகாத்திரப்பிரயோகம்

ஆகாயர்ச்சுனவுன்மேல் நாகாஅத்திரந்தன்னை வேகமுடன்றொடுப்பேன் பாரடா
பதில்—விசயாஎனக்கிப்போது கூறடா
ஓகோவுன்னுயிர்போனால் உன்றமையன்றம்பிமார்
உடனிறப்பார்களதுதிண்ணமே இனிமேலொன்றும்பலியாதுந்தனெண்ணமே

அருச்சுனன்

வாய்ப்பந்தர்போடுகின்ற கன்னனே வீண்வார்த்தைவேண்டாம் பதில்யான்
காப்பதுகடனென கண்ணனிருக்கும்போது [சொன்னனே
எய்ப்படுதென்றாலுன்னாலேயாகுமே எங்களுயிர் எமனுக்கிப்போதுயிரையாகுமா

கன்னன்

அச்சுவச்சேனனெனும்பாம்பே உந்தன்மீதுஆதிரான்முதலாகவீம்பே
நச்சுப்பையையுடைய நாகக்கணையைவிட்டால்
நாரணனுக்குத்தான்றேரோடுமாயுத்தம் நாடிச்செயித்திடக்கை கூடுமா

அருச்சுனன்.

பாம்பணைமீதுபள்ளிகொண்டவன் இந்தப்பாரெடுத்தேயமுதாயுண்டவன்
தாம்புந்தோண்டியும்போலத் தாங்கியிருக்கும்போது
வீம்புபேசுவதென்னமர்மமா அன்றி வின்வேதசாத்திரத்தின் றர்மமா

கன்னன்

பரிமளசந்தனதூபங்கொடுத்தான் கொடிய பாம்புக்கணையைக்கையிலெடுத்தான்
சரியாய்கண்டத்தின்நேரே குறியாய்வில்லைப்பிடித்து
தெறியாயிதுவென்றிடச்சல்லியன் மார்பிற்கு லெட்சியம்நீவையென்றான்
வில்லியன்

சல்லியன்சொன்னவார்த்தைத்தன்னையே அடியோடு கெல்லியெறிந்தானவன்
வில்லியனென்றுனிந்த வீரகுறைத்திடலாமோ [முன்னையே
வேகப்புரவியோட்டுந்தன்மையே யதுவன்றி ஆகவந்தனிலொன்றுமின்மையே

கன்னன்

தொடுத்தநாகாத்திரத்தை வீசவே பார்த்த துவாரகைமன்னன்கண்ணுங்கூசவே
விடுத்தத்தேராழியைக் கால்விரலினாலேயழுத்த
விரைந்தாறிரெண்டங்குலந்தாழவேபூமிதன்னில்விசயன்முடிப்பாம்பினால்வீழவே

**அருச்சுனன்**

ஆதியில்விட்டகணைத்தன்னையே பின்னிழுத்து அருச்சுனன்றானுவிடப்பின்னையே
பாதியுடற்பிளந்து பார்த்தன்கணை திரும்ப
பரிதிமைந்தன்கணையுஞ்சென்றது மறுமுறை உறுதியாய்விடுவெனநின்றது

**கன்னன்**

தாய்க்களித்தவரம்பொய்யாகுமே அதைமீறிதவறிநடந்தால்பிராணன்போகுமே
போவுனக்கேதாகினும் பிழைப்பிருந்தாற்பாரென்ன
பொன்னுலகத்திற்குடிபோச்சுது வீரமுள்ளபுயங்கமறலிக்கிரையாச்சுது

**கண்ணன்**

முடியெடுத்துச்சென்னியிற்சூட்டினார் மூவுலகும் முத்துவேற்புகழவெற்றி
படிதனிற்பார்த்தனுக்கு பார்வைபின்னுலுண்டென்று [நாட்டினார்
பார்த்தத்தேவர்வியந்து ஆற்தனர் கற்பகப்பூபறித்துப்பூமிநிறையதூத்தனர் 13

**சல்லியன்றேர்விட்டிழிதல்.**

தேரினிநானோட்டமாட்டேன் உளவு கோலுந்தன்னேரினிற்போட்டேன்
மாரினிலட்சியம் வையென்றசொல்லவும்
மறுத்துச்சொன்னதென்ன வீம்பு உடலறுத்து வீழ்ந்ததுந்தன்பாம்பு

மறுகணைவிடுவென்று சொல்லவிட வருநனல்லவன்றாய்மெல்ல
வெறுமனேநீவெல்ல விசயனைமுடியாது
வேறுதேரிப்போதேஏறுவேன் சூதன்வேடங்களைந்திப்போமாறுவேன்

சொன்னசொற்கேளாதமன்னன் சுயபுத்தியுமில்லாத கன்னன்
என்னமோவீமனை எதிர்க்காதேயென்றிட
எழுந்தாயவனொடுபோரிலே தேரில் விழுந்தாய்நீயெந்தனின்னேரிலே

குல்லாத்தலையிற்கழட்டினான் அதை யெல்லாரறியச்சுழற்றினான்
பொல்லாதவனென்று சொல்லாதவண்ணமே
போட்டானெரிந்ததைப்பாரிலே பெருங்காட்டாளிப்போலொருதேரிலே

எறித்தன்வில்லையெடுத்தனன் சரமாரியதாக விடுத்தனன்
காருறுமேதென்ன பாருருவிச்செல்ல
காலனைப்போலமராடினான் கிட்ணன் பாலன்முத்துவேற்கவிபாடினான் 14

**கன்னன் சோகம்**

சல்லியன்வேறுதேரிலேறவே கண்ட தபனன்மைந்தனுமனஞ்சோரவே
மெல்லியயிறகிழந்து மெலிந்தப்பறவைபோல
வல்லியம்போன்றகன்னன்வாடவே மழுப்படையோன் வாக்கிட்டசாபம்வந்து

தோழிபூமியிற்புதைந்தன கன்னன் தெறித்தவாளிகளும் சிதைந்தன [நாடவே
ஓராழித்தேரோனுச்சந்தாண்டி ரெண்டுவிற்கடை
ஓடிடும்போதுகண்ணன்வாளியே தந்தபோது நாடிப்பெற்றான்விசயமீளியே

கொடுத்தக்கணையைக்கண்ணன்முன்னிலே கரந்தனி லெடுத்தக்காண்டீபமது
தொடுக்கவொன்றுபத்துநூற் விடுக்கவாயிரலெட்சம் [தன்னிலே
அடுக்கடுக்காககோடிசாடினான் கன்னனையும் அம்புமாரியாற்றேகமூடினான்

மயிற்குரெண்டுகணைகள்பாயவே மார்பின்சோரிவெயிற்காம்போலுகுத்துசாயவே
செயிப்பாரின்றியக்கன்னன்றேர் தட்டின்மீதுசாய
சிறந்தகணைகளோயவில்லையே காமிரண்டும் செய்யும்யுத்தத்திற்கில்லைஎல்லையே

தருமதேவதைவந்தடுத்தன காண்டீபன் றனுவின்பாணமெலாந்தடுத்தன
கருமத்தின்பலனென்றுங் காக்குந்தலையையென்று
காண்டீபனையுத்தம்நிறுத்தினார் கன்னனையும் வேண்டியேதர்மம்வற்புறுத்தினார்

**கன்னன்**

ஆவியென்னுடற்றனிலில்லையே நானிப்போது அறஞ்செய்வதென்றால்மிகத்
பாவியான்வேண்டுவோர்க்குப் பரிசளித்திடும்போது [தொல்லையே
நீவிர்வராதுபரிதாபமே முன்னமேநான் நீண்டநாளாகச்செய்தபாவமே

இருப்பதைக்கேட்டாலுமக்களிப்பேன் என்றவுடன் ஈந்தாற்புண்ணியமெனக்குக்
விருப்பமுடனே தர்த்தம் விரைவிற்றருவாயென்ன [களிப்பேன்
வீரனுதிரங்கையிலூற்றினான் அம்புமுனை சேரவைத்துக்கொடுத்து மாற்றினான்

**கண்ணன்**

மைத்துனனைமெய்த்தலந்தழுவியே கண்ணின்வருமுத்தமக்கல்கைகயினாற்கழுவியே
எத்தனைப்பிறவியிலும் ஈகைசெல்வமுமெய்தி
முத்தியும்பெறுதியெனச்சென்றனன் விசயன்றேரில் முத்துவேற்கவிசாட்சியாய்

கொஞ்சப்பொழுதாச்சே அருச்சுனா உன்வஞ்சமுடிப்பாயேசர்ச்சனா[கின்றனன் 15
அஞ்சரீகந்தன்னை நெஞ்சுக்குநேராக
அச்சமொன்றின்றியேயெய்குவாய் தேரிலங்கனை வீழ்ந்திடச்செய்குவாய்

**அருச்சுனன்**

ஆசுகந்தன்னைத்தொடுத்தனன் வில்லி லனுசந்தித்தப்போவிடுத்தனன்
வீசுமந்தவாளி வாசுகிபோலவே
வெயிலவன்மைந்தனின்மார்பிலே கால னயிலெனநுழைந்ததோர்சார்பிலே

**துரியன்**

முடிசாய்ந்துகன்னனும்வீயவே துரியனடி சாய்ந்தப்பனைபோலசாயவே
படியோடுயெனைவிட்டுப் பரலோகஞ்சென்றாயோ
பாவியிருப்பேனோபூவியே வுடன்றாவிவந்திடுமெந்தனாவியே

பிழைக்கும்வழியெனக்கில்லையா இந்தப்பெரும் பழிசெய்ததென்சொல்லையா
தழைக்குமுத்துவேற் சொல்தாரணிதன்னிலே
தாளாதென்துக்கம்பொறுப்பெனோ நான்மாளேனென்றுசொல்மறப்பேனோ

**குந்திதேவிக்கசரீரி உரைத்தல்**

கண்ணனசரீரியாகவே மயிலன்னக்குந்திமனைக்கேகவே
பொன்னின்முடிகன்னன் மண்ணில்வீழ்ந்தானின்று
பொழுதுபோனாலுயிர்போகுமே நீயும் போகவெகுநேமாகுமே

என்னவும்வாயிலடித்தனள் வுடனெழுந்திருந்தோட்டம் பிடித்தனள்
நன்னயமாகவே கன்னனையன்னோரம்
நாடியேவாரியெடுத்தனள் முத்தமாடியே பாலுங்கொடுத்தனள்

தாய்மடியிலுயிர்விட்டனன் தந்தை தபனனுமேற்றிசைப்பட்டனன்
வாயிலடித்தவள் மண்மேற்புரண்டன்று
மாரடித்தசுத்திவந்தனள் தன் மனமும்புண்ணாகியேநொந்தனள்

கன்னியாமாடத்திற்பெற்றண்டா உன்னைக் கனத்தபகீரதி விட்டண்டா
அந்நியருந்தனை அன்பாய்வளர்க்கவும்
அருளிலாப்பாவியானாகினேன் விட்டு அரண்மனைதன்னில்நானேகினேன்

தம்பிமார் நூற்றைந்துபேர்களே உன் சரணத்தின்கீழ்கடப்பார்களே
அன்பிலிந்தப்புவிஜந்தையும் ஆண்டிடும்
அரசுங்கண்ணனாலேபோச்சுது மேனி யழகுமலங்கோலமாச்சுது

மைந்தனைக்கொன்றிட்டப்பாவியே இதோ வந்தேனுன்னோடெந்தனாவியே
எந்தன்மைந்தர்வந்து வுந்தன்சேதிகேட்கின்
எப்படியான்பதிற்சொல்வது முத்துவேற்செப்பியப்படி நீயுஞ்செல்வது 16

### தருமர் தாயை வினவுதல்

ஆயுளெல்லாம்பழியெய்தவன் குலமடியோடு பாழாகச்செய்தவன்
வாயும்பிறழுதே மாதாவுந்தன்வார்த்தை
வந்ததென்னத்துக்கமோது பெற்ற மைந்தரால்வந்ததோநீது

### தாய்மறுமொழி

வாய்திறந்தெப்படிசொல்லுவேன் இப்போ வானுலகம்நானும்செல்லுவேன்
ஆயுவின்வம்சத்தில் அன்பாயுதித்தவன்
தாயுநானிவன்றலைப்பிள்ளையே இன்று சமரிற்றந்தேன் பெருங்கொள்ளையே

### தருமர்

அறைவாய்நீவரலாருதன்னையே ஒன்றுங்குறையாது சொல்லெந்தன்முன்னையே
புரையாதுவந்தது பிள்ளையைவிட்டிட
திரையாதும்வையாதுசொல்லுவாய் எந்தன் தீராத்துயர்தனைக்கெல்லுவாய்

### குந்தி

மந்திரமைந்தெனக்குண்டு ஆறுமைந்தர் பெற்றேனதைக்கொண்டு
வந்திடும்பழியென்று தந்திரமாகவே
உந்திடுமலையாற்றினநேரே கொண்டு விடத்துணிந்தேனொருவாறே

### காரணப்பதில்

மன்றலேறுவதன்முன்னையே சூரன் வந்தாளித்தனிவன்றன்னையே
என்றும்பிதாவிற்கு ஏதம்வருமென்று
கொன்றூற்பாவமென்றுநதியிலே யான் கொண்டுவிட்டேநடுநிசியிலே

இருதலைக்கொள்ளியின்மேலே சிற்றெறும்பகப்பட்டதுபோலே
வரும்வழிபோம்வழி வகையொன்றுமறியாமல்
மாயன்விரகிதுவென்றே என் மனதிலுணர்ந்திட்டேனன்றே

### தருமர்கோபம்

தாயல்லநீசெல்லுவாயே பெற்றதனயனைக் கொன்றிட்டப்பேயே
நீயென்ன அவனிடம்நேசம் வைப்பதற்கு
வாயென்னவுனக்கென்று ஏசினார்முத்துவேல் ஞாயக்கவிசொல்லக்கூசினார் 17

### தருமர் கண்ணன்சூட்சியை வினவல்

அரக்கனிரண்யன்முன்சென்றாய் மைந்தனவனைக் கொண்டவனையுங்கொன்றாய்
சிறக்கும்வீடணன்றன்னால் புரக்கும்லெங்கேசனை
தாக்கமெய்திடச் செய்யவில்லையா உன்சூதைக்காண்பாராரு சொல்லையா

### வீமன்

எங்களுக்குத்தூதுசென்றாய் துரியனிளையவர் தங்களைக்கொன்றாய்
பொங்கரவக்கணை பங்கப்படும்படி
பூமியிலாழிபுதைத்தனை கன்னன் புயங்கமொழியச்சிதைத்தனை

### அருச்சுனன்

தமையனென்றுயானுஞ்சொல்ல நீயும் தருமருடன்கூட்டிச்செல்ல
சமயத்திலெங்களை அமையவோர் வழியின்றி
தான்பிரித்துவேறாய் செய்தனை அவன்றாத்தையென்சாத்தினால் கொய்தனை

### நகுலசகாதேவர்

தூதுக்குசென்றபோதென்னையே சமர்தோன்றுவழி கேட்கவுன்னையே
வாதுவருமென்றப்போது காணுந்தனை
மணிக்கயற்றாலுனைக்கட்டவே முத்துவேல் பணிக்கவிபூவின்றேன் சொட்டவே

தாயைவிட்டுவரங்கேட்டாய் கல்லைத்தபனன்மைந்தன்மீது போட்டாய்
மாயவாரீயந்த வாசவனைக்கூவி
வாங்கினாய்நீ கவசகுண்டலம் உன்மகிமையறியாப் பூமண்டலம் 18

கன்னபருவம் பதினேழாம்போர்ச்சருக்கம் முற்றிற்று.

# சல்லியபருவம்

## பதினெட்டாம் போர்ச்சருக்கம்

### கண்ணன் துதி

மச்சநாவரி கூர்மவராகமொடு வாமனவலாயுத பலராமனாய்
இச்சையுடன் பௌத்தனாய் ராமனாய் கிட்ணனாய் இக்கலிக்கவதாரமாய்
சச்சிதானந்தமாய் தரணிமான் சுமையதைத்தவிர்க்க மனந்தானிரங்கியே
அச்சமிலிப்புவி அவதரித்தருளிய அச்சுதா நந்த நமவே

### பாட்டு

சல்லியன்றளபதியாகினான் பெருஞ்சமர்க்களந் தன்னிலே ஏகினான் 1
வல்லியம்போற் பொரும் வில்லச்வத்தாமனும்
வந்தனனுங்கிருபாசாரியே கொடுஞ்செந்தணற் போலவன்சீறியே

சகுனியுடன் கிருதவர்மனும் என்றுஞ்சமர்க்களந்தன்னில தர்மனும்
மிகுகிருபர் கூடி வேந்தன்றனை நாடி
தகும்பல்லியங்கள் முழங்கவே நல்லதம்பட்டை பேரிவழங்கவே

பஞ்சவர்சேனைகள் வந்தது அபாரயுத்தமெதிர் தந்தது
தஞ்சமென்றைவருங் கஞ்சமலர்க் கண்ணன்
தாளிணை வீழ்ந்துப்பணிந்தனர் கடுஞ்சமர்செய்யவன்று துணிந்தனர்

### கண்ணன் திட்டம்

அருச்சுனா நீயின்றுசெல்லுவாய் தனுவாரியன் மைந்தனை வெல்லுவாய்
சற்சனசாதேவன் சகுனியைக் கொல்லுவான்
நற்குணநகுலனேசென்றிடு கதிர் நன்மைந்தன் மைந்தரைக் கொன்றிடு

தருமாநீவீமனைக் கூட்டிடு உன்றனுவளைத்து நாணிபூட்டிடு
வருமமாய் மத்திரன் வருவானுன்னேரிலே
சருமத்திற்கோர்பாணம் விட்டிடு அவன்றாம் பூமியினில்விழவெட்டிடு

சொல்லியபேரெல்லாமாளுவார் சென்றுசுரருலகந்தன்னையாளுவரர்
அல்லியந்தெரியலான் அரவக்கொடியோனை
அனிலன்மைந்தனந்திக் கொல்லுவான் முத்துவேல்நளினந்தந்தக்கவி சொல்லு
[வான் 2

### நகுலன் சித்திரசேனன்

மானகுலன்றேரிலேறினான் கதிர்மைந்தன் மைந்தரோடுசீறினான்
தேனொழுகுந்தாரான் சித்திரசேனன்மேல்
தானொருவம்பினையெய்தனன் சிரம் மாநிலந்தனின்விழக்கொய்தனன்

### சித்திரவாகு

மற்றவன்றன்றிருத்தம்பியே தமயன் மாண்டானெனமனம்வெம்பியே
புற்றிலிருந்துபுறப்படும் நாகம்போல்
கற்றவித்தையெல்லாங்காட்டினான் நகுலன்காலனுக்கு இரையூட்டினான்

### சித்ரகீர்த்தி

பழிக்குப்பழிசெய்வேன்பூர்த்தியே இதோபாரென்றவன் சித்திரகீர்த்தியே
விழித்திமைக்குமுனம் விரைந்தறுவாளியை
அழுத்தினான்நகுலனின்மீதிலே மீண்டுமவனுமரைக்கணப்போதிலே

சித்திரவில்லிற்றொடுத்தனன் ஒரத்திரந்தன்னை விடுத்தனன்
முத்தலையொத்த மூவருமொன்றாக
பெத்தவன்சென்றழிநாடினார் முத்துவேற்சித்திரக்கவி தனைப்பாடினார் 3

சல்லியன் தருமர்

சல்லியனுந்தேரிலேறினான் கரந்தனிலே வில்லிலம்புகொண்டுசீறினான்
கல்வியலுமுந்தனாம் சல்லிசல்லியாக்குறேன்பார்
வில்லெடுத்தென்முன்னேநில்லடா உனக்குவீரமில்லையென்றால்பின்னைசெல்லடா

தருமர்

மாமாநீசொன்னசொல்லது இப்பொழுது மாத்திரமோஎன்னைவெல்வது
ஏமாற்றிடவோவெகு சாமார்த்தியம்பேசுகிறாய்
எங்கேயுன்வில்லையெடுப்பாய் வாளிதனையெந்தன்மீதிலேவிடுப்பாய்

சல்லியன்

சொற்படியே வில்லையெடுத்தான் மருகன்மீது அற்புதப்பாணங்கள்விடுத்தான்
பொற்படிகதேருமது கற்பொடியதாயுதிர
கற்புரவிநான்குஞ்சிதைத்தான் சூதனையுமப்புறம்போகாமல் வதைத்தான்

வீமன்

கண்டவீமசேனனோடினான் சல்லியன்றேரைத் தண்டினையெடுத்துசாடினான்
அண்டமுகடுமதிர எண்டிசையுமபோயுதிர
சண்டன்சல்லியனுங்கோபமே தன்கரத்திற்கொண்டனன் றண்டினைப்பாவமே

சல்லியன்

வீமனும்பயர்துகின்றனன் சல்லியனும்எமனைப்போலவேவென்றனன்
தாமதமில்லாமற்சேனை வீமனுடனோடிடவும்
தருமருந்தன்மனம் வாடினார் செய்வதொன்று தானுமறியாமல்காடினார்

அச்வத்தாமன்

ஆரியன்மைந்தனுஞ்செல்லவே மதகரியை அம்பெடுத்துத்தானும்வெல்லவே
வீரியம்விடாமனின்ற வீமனையோரத்திரத்தால்
சரீடசெத்தம்வடியவே காம்பற்றியத்தனுவொண்டாயொடியவே

அருச்சுனன்

காண்டீபனதனைக்கண்டனன் கண்ணன்றேரைத்தாண்டிட மனம்வெருண்டனன்
தாண்டியுத்தஞ்செய்யுஅச்வத்தாமனையோரத்திரத்தால்
ஆண்டியைப்போலவேயாக்கினான் பதாதியாகமீண்டிடப்பின்னாலே போக்கினான்

கிருபன்

மாதுலன்றன்வில்லையெடுத்தான் விசயன்றேரை மோதியேவம்பினைவிடுத்தான்
எதிவனைவெல்வதற்கு மாதுமைபாகன்வரினும்
எப்படியிவனைவெல்வது நாமுமுயிர் தப்பியேஅப்பாலேசெல்வது

நகுலசாதேவன்

மாத்திரிமைந்தருமோடினார் துருபதனும் சாத்தகியுமங்குகூடினார்
ஆத்திரத்துடனேசென்று அருச்சுனனுடனேநின்று
யாவருமங்குத்தஞ்செய்தனர் எதிர்த்துநின்று மேவலர்சிரத்தைக்கொய்தனர்

துரியன்

காவலன்கண்டுபதைத்தனன் சல்லியனைக் கேவலஞ்செய்தேநகைத்தனன்
தாவருமுத்துவேற்கவி மேவருமுந்தனின்செவி
நீனுமின்றுகேட்கவில்லையா தருமன்றனை வாணுமனுப்பிடத்தொல்லையா 4

**சல்லியன் கோபம்**

ஒருகணையாலேஓடினான் தேவாகுலன் மருகணையாலேவாடினான்
பொருகணைமூன்றர்ச்சுனன் புயமுமார்பினிலெய்ய
அருங்கணைநாலையேவினான் வீமன்றர்மன்மேல் பெருமழையென்னத்தூவினான்

**தருமர்**

வாய்த்ததம்பிமார்கடன்னையே துருபதனுஞ் சாத்தகியுஞ்சேர்த்துப்பின்னையே
காத்திடுங்களென்றுசொல்லி கோத்தருமனப்பொழுது
ஆத்திரத்தின்வில்லையெடுத்தார் சல்லியன்மேல் சாத்திரப்படியே விடுத்தார்

**சல்லியன்**

சல்லியன்கவசங்கட்டினான் சாரதியை வில்லினம்பினாலேவெட்டினான்
வல்லவன்வில்லையொடித்து வாசிநான்கினைமடித்து
சல்லியாகத்தேருதன்னையே வுடைத்தெறிந்தான் தருமருங்கண்டிடமுன்னையே

**தருமர்**

உக்ரவீரசத்தியெடுத்தார் கண்ணன்கரத்தின் சக்கரம்போலவேவிடுத்தார்
வக்ரதந்தனுக்குநிகர் தக்கசல்லியன்முடியை
வட்டமாயறுத்துத்தள்ளவே மூத்தவேற்கவி சட்டமாய்ப்படித்துமெள்ளவே 5

**சகுனிவதம் சகாதேவன்**

குருகுலந்தன்னில்வந்த இருநிலத்தெங்களுக்கேகோடானகோடிசெய்தாய்தீம்பே
நூற்றுவரைக் கொல்லவந்தக் கோடாலிக்காம்பே
மருவறவுன்வலியைசரிவரயென்னிடத்தில் குறிபெற வில்லிலம்பைப்பூட்டுவாய்
இந்தக்குவலயமறிய வெற்றிநாட்டுவாய்

**சகுனி**

எல்லாந்தெரிந்தசகாதேவனே என்னை எளனஞ்செய்யாதேபிரச்தாபனே
பொல்லாதகாலம்வந்தால் நில்லாதொருவர்வாழ்வு
அல்லாமல்நான்செய்ததென்னது அதைச்சொல்லொதே வருமிகவுந்தீது

**சகன்**

எதுக்குநீயாடினாய்சூது மண்டபத்தில் யாருஞ்செய்திடவேதகாது
பாதிநாட்டைப்பறித்து பரதேசியாயெங்களை
பாரவனமோட்டினபாவி இந்த நோங்கொல்லுவேனுந்தனை

**சகுனி**

புலியினைத்தாற்பூனைக்கியஞ்சுமா சமர்தன்னில் போரேனென்றதுபல்லைக்
எலிபூனையையெதிர்த்தாலென்னசெய்யமுடியும் [கெஞ்சுமா
வலியுறுத்தியேவுன்னை வெல்லுவேன்எந்தன் மாயமந்திரவாளாற்கொல்லுவேன்

**சகாதேவன்**

இருக்கற்றுகைபனிரெண்டல்லவே நாங்கள்ஏமாந்தோமென்றுபதில்சொல்லவே
திருக்கானவுந்தனுண்மை ஒருக்காலுமென்னிடத்தில்
குறுக்காடப்போமோவதுகில்லாது எனக்குப்பெருங்கோபம் வந்தாலுயிர்போம்
[பொல்லாது

**சகுனி**

மருமகனை சகாதேவனே இந்த மண்டலம்புகழும் பிரச்தாபனே
குருநிலந்தனிற்பாதி வரும்விதியாலே ஆதி
கொடுத்தப்பரதேசியாகவில்லையா இல்லையென்றுற்றநுத்துப் பதிலென்னிடஞ்
[சொல்லையா

சகாதேவன்

பதுங்கும்புலிபாய்ச்சலுக்கிடமே இந்த பாரதயுத்தம் பெருஞ்சங்கடமே
ஒதுங்கிப்போனாலும் விழிபிதுங்க வினைப்பிடித்து
ஒருவனுமே நானுன்னைக்கொல்லுவேன் குட்டிச்சாத்தானுன்னை விட்டோ
[டிடவே சொல்லுவேன்

சகுனி

பட்டுத்துயிலுரிந்தோம் நாங்களே வெட்கமின்றித்தட்டுகெட்டுநின்றீர்கள் நீங்களே
எட்டுத்திக்கினுமுங்களேழ் மைத்தனந்தெரியும்
இப்போதெப்படிப் பெலம்வந்ததுஉங்களுக்கு எனக்குச்சொல்லுவாயெவர் தந்தது

பொது

இருவருந்தன்கைவில்லையெடுத்தார் வாளி எட்டுத்திக்குமறைய விடுத்தார்
ஒருவர்க்கொருவர் மீறி உருவுருமென்று சீறி
ஒவொருகோடிபாணமெய்தனர் அப்பொழுதுகாந்தக்கால மழைபோல்பெய்தனர்

சகுனி

சகுனி வாளிமிஞ்சியேசென்றது சகாதேவன் சாரதியுவுளிகளைக் கொன்றது
இகல்வெல்லக்கையில் வேலையெம்பெருமானளிக்க
எடுத்தெறிந்தான் சகுனிமீதிலே ஆவி விடுத்துமண் வீழ்ந்தானந்தப்போதிலே

பொது

பட்டதுஞ்சகுனியுடற்பருந்தக் கழுகினத்திற் கிட்டனக்குள்ளநரிகள் விருந்து
கொட்டிய மேளதாளத்தைத் திட்டமாய்க்கழுத்திற்கட்டி
வட்டமாய்க்கவந்தபூதமாடுமே முத்துவேற்றன்னிட்டமாங்கவிபுகழ்ந்துபாடுமே 6

துரியன் அனுதாபம்

மாமனுனென்ன செய்குவேன் உனைப்பிரிந்து மண்மீதெப்படி உய்குவேன்
ஏமாத்திவந்த வுந்தன சாமார்த்தியங்களெல்லாம்
எங்கே தவறிப்போச்சுது நான்றனியாக இங்கே தவிக்கலாச்சுது

கன்னன்வீடுமன்றுரோணனே என்னிமித்தமாய் விண்ணிற்சென்றூர்கள்காரணனே
என்னைத்தனியாய்விட்டு தொண்ணூற்றென்பதுபேரும்
ஏகினூர்வானகத்திலே இனிமேலுயிர் வாழ்வனோநான் செகத்திலே

மன்னுதிமன்னர் போற்றவே என்பாதமதில் மணிமுடிதன்னைச் சாற்றவே
ஒன்னூர்தனையெதிர்த்து யின்னளாசுசெய்தேன்
என்னுசெய்வதென்றறியேன் வீமன்கையினுல் எதுவாகுமோகுறியேன்

சிம்மாதனத்திலிருந்தேன் எனக்குப்பகை எம்மாவந்தாலும் வருந்தேன்
பெண்மானொருத்திபாலே என்மானம் போச்சுதையோ
பிழைக்கவொருதந்திரமே இறந்தவரை அழைக்கவொரு மந்திரமே

அயனிடைவியாழன்பெற்றனன் அவனிடத்துக் கயமுனியதனைக்கற்றனன்
பயமென்னயெனக்கந்த கயனளித்த மந்திரத்தால்
பஞ்சவரையும்வெல்லுவேன் முத்துவேலருஞ் செஞ்சொற்கவிபைச்சொல்லு
[வேன் 7

துரியன் றடாகம்மூழ்கல்

ஆழ்ந்தமடுவிற்சென்றனன் முன்பின்னதாக அடிவைத்துமூழ்கிநின்றனன்
சூழ்ந்தசமர் செய்திட்டத் துரியன் வளியோகத்தால்
துரியவிளக்கை ஏற்றினுன் எவர்களுக்கு மரியமந்திரம் போற்றினுன்

மச்சமெலாமொடுங்கவே கொக்குநாரையு மிச்சைப்பட்டுநடுங்கவே
அச்சப்பட்டலையின்றி நிச்சலமாயிருக்க
அச்சுவத்தாமனாரியன் கிருதனோடு மெச்சுமெவர்க்கும்வீரியன்

துரியன்றன்னையேகூவினார் பேசாமைமக்கண்டு அரியநிழலின்மேவினார்
கரியமேனியன்றுள்ள காளைவீமனைக்கண்டு
களந்தனிற்சென்றுபார்க்கவே இறந்தவரின் கால்காலொன்றாகசேர்க்கவே

கண்டுவீமன்பயந்தனன் கிட்ணனிடந்தொண்டு செய்நேயந்தனன்
பண்டுமறைத் துதிக்கும் வண்டுழாயணிமார்பா
பாரும்வினோதந்தன்னையே இதன்விபரங் கூறுமெந்தனின்முன்னையே

வலனாரவ்விடஞ்செல்லவே துரியன்மடுவில் மறைந்தவிபரஞ்சொல்லவே
குலையக்கைகால்களெல்லா மலையஅவ்விடம்விட்டு
குளத்தின்கரையைநோக்கினான் அடியைப்பார்த்து கூக்குரற்றானுண்டாக்கினான்

சுத்திவந்தங்கேபார்த்தனன் ஒன்றுந்தோணாமல் சுநங்கிமுகமும்வேர்த்தனன்
பத்தியுடன்முத்துவேல் தெத்துங்கவிமாலையை
பவன்மைந்தனுஞ்சூடினான் குளத்தினுள்ளே கவனமுடனோடினான் 8

வீமன் கூச்சல்.

தலைமயா வெளியே புறப்படடா இல்லையாகிற் றாணியைவிட்டுவிடடா
சமையம்பார்த்துயிந்த தந்திரஞ்செய்தாயே
சண்டாளனாகியப்பேயே என்னைத்திண்டாடச்செய்துவிட்டாயே

பார்முழுதுமுனைத்தேடினேன் மலைப்பாரவனமெலாமோடினேன்
ஆருமறியாமல் நீரிலொளிந்தாயே
அண்ணாயிதுவென்னநாயமே யார் சொன்னாருனக்கிதுபாயமே

சூதாடிவஞ்சித்தப்பாதகா பட்டுத்துயிலுரிந்தப்பொல்லாகாதகா
எதாலேபாதிநா டெங்களுக்கில்லையா
என்தந்திடமனம்வல்லையா இங்கெழுந்திருந்தென்முனஞ்சொல்லையா

காட்டுக்கொடிதன்னைவெட்டினாய் கால்காலையிறுகவேகட்டினாய்
நாட்டிலிருந்தாலே போட்டிவருமென்று
நாகலோகந்தனிற்றள்ளினாய் அங்கு நானிறந்தேனென்றுத்துள்ளினாய்

தென்கடல்ராகவனாலே முனந்தீபட்டுத்தீய்ந்ததைப்போலே
உனகடற்புகையாமுன் னோடிவாராவிட்டால்
எனபடுவாயிப்போபாரடா முத்துவேலெழுதிவைத்தக்கவிகூறடா 9

வீமனைக்கண்ட துரியன் பீதி

மதகரியானதொருவீமன் மேருமலைபோலநிற்குரானேஎமன்
அதம்பண்ணிக்கதையாலே அடிப்பானேபடுபாவி
அதைநினைக்தாற்போகுமென்னாவி என்றுமவனைக்கண்டாலேபச்சைநாவி

தம்பியனைவரையுமடித்தான் அவர்கள்தலையுடைபக்கதையாலடித்தான்
அம்பினுங்கொடியவன் யாரினும்நெடியவன்
அவனைவெல்லயாரினிவண்டுநேரே சிவன்வந்தாலுஞ் செய்வானேதொண்டு

நால்வகைச்சேனைபுடைசூழதேச ராசமன்னர்கள்முடிதாழ
கோல்கொண்டிப்புவியெல்லாங் குறைவறவாண்டேனய்யோ
கால்கொண்டுயானடக்கக்காலம்இது கண்ணன்செய்திட்டவலங்கோலம்

கோடிமாகதத்தூணாட்டி மேலே கோமேதகம்வைரம்ஒட்டி
தேடினுங்கிடையாத சிவப்புவெண்முத்துகளால்
சிம்மாதனப்படியிழைத்தேன் எந்தன்றெவ்வருக்கென்றேயானுழைத்தேன்

துரியனாண்டபுவிதன்னை காட்டின் நரியோஆள்வது எந்தன்முன்னே
எரியோடு அருச்சுனன்றானிறப்பானென்றெண்ணினேனே
இடையனால்வந்ததிந்தமோசம் கன்றுமேய்த்தமடையனால்வந்ததுவினாசம்

யானையம்பரியின்மேல்யானே நகரனைத்தும்பவனிவருவேனே
பூனைபோலெந்தன்பாதம் பூமியிலேவெந்திட
சேனையிழந்துதனியானேன் பெரியோர்செப்பியவார்த்தைகேட்காமற்போனேன்

வீமன்றனையுமிப்போவெல்வேன் அவனையின்றால் விண்ணுலகத்திலன்றி
பூமருதேன்பாகொத்து புகல்முத்துவேற்கவியை [செல்வேன்
தாமருந்தவென்செவிகேட்கும் உயிர்சண்டன்வரவையெதிர்பார்க்கும் 10

துரியன் வீமன் கதையுத்தம்

துரியனுந்தண்டினையெடுத்தான் வீமன்றோளின்மேலோரடிகொடுத்தான்
சரியா வீமனுங் குறியாயதைக்கட்டி
தாவித்தரத்திலடிக்கவே பட்டு சர்ப்பக்கொடியோன்றுடிக்கவே

துரியன்

அடித்தவடியைவிலக்கினான் நின்றஅனிலன்மைந்தனைக்கலக்கினான்
நொடித்தநொடிக்குள்ளே இடித்தயிடியென்ன
வடித்திடரெத்தமடித்தனன் நின்றவாயுமைந்தனுந்துடித்தனன்

வீமன்

ரெத்தம்வழித்துயெறியவே பெரும்ரெத்தியில்வேர்வைசொரியவே
சித்தமிகநொந்து பித்தனைப்போலவே
துரியனையோடியடிக்கவே ரெத்தந்துள்ளிக்கபாலம்வெடிக்கவே

துரியன்

கண்களின்தீப்பொறிசிந்தின இருகாதுகளிற்றாமம்முந்தின
எண்கொண்டவீமனைத் திண்கொண்டத்துரியனும்
எட்டிக்கதையாற்சிதைக்கவே வீமன்மட்டியிட்டப்போவுதைக்கவே

பொது

கோவிக்கதைக்கரம்பற்றுவார் குலாலன்றிகிரிபோல்சுற்றுவார்
நாவிருதிக்கினும் வாலிசுக்ரீபன்போல்
நாடுவர்வாடிப்பின்கூடுவார் பக்கமோடுவார் கதையினாற்சாடுவார்
தேயுவும்வாயுவுமென்னவே வீரதுரியனும்வீமனுந்துன்னவே
ஆயுங்காலிருபேரும் பாயும்புலிபோல்
அடிவைக்கசேடனடுங்குமே படமாயிரஞ்சேரவொடுங்குமே
ஆற்றுவர்சற்றினைப்பாறியே ஒங்கியடித்திடுவர்கோபமீறியே
கூற்றொடுகூற்றென்ன குருகுலத்திருபேரும்
கொண்டுகதையினாற்சாடவே சிரம்விண்டுரெத்தவெள்ளமோடவே
மூளைகலங்கிடமொட்டுவார் துள்ளுகாளையெனவெதிர்முட்டுவார்
காளையுத்தமிந்த வேளையில்லையென்று
காவளைத்துப்பல்லால்மெல்லுவார் தோற்றோர்நமனுக்கிரையென்றுசொல்லுவார்
இப்படியிவர்செய்தயுத்தமே கண்டதில்லையென்றார்தேவர்நித்தமே
ஒப்பியேயிருவோரு முயிர்நிலையைச்சொல்லி
செப்பருங்கதையினாற்சாடுவோம் முத்துவேலொப்பறுங்கவிதனைப்பாடுவோம் 11

துரியன்வுயிர் நிலைகேட்டல்

வீமாவுன்னுயிர்நிலைசொல்லு சுத்தவீரத்துடனெனைவெல்லு
பூமானோடுயுத்தம் நீமானமில்லாமல்
போர்செய்வதுமென்னவீரமே உனக்கார்கொடுத்தாரிந்தத்திரமே

துரியன்

என்னுயிர்கிரமதிலென்றனன் துரியன் றன்னுடன்சொல்லியேநின்றனன்
பொன்னொளிக்கதையினை மின்னொளியென்னவே
புடைத்தனனவன்சிரந்தன்னிலே மண்டையுடைத்ததும்வீழ்ந்தான்மண்ணிலே

துரியாவுன்னுயிர்நிலைசொல்லு யாருமறியநீயெந்தனைவெல்லு
பரிகாசமில்லைநீ பகருவாயிப்போது
பாராளுமன்னர்க்கின்னுயம் நன்றாயாராயந்துசொன்னதுபாயம்

துரியன்

புருவமிரண்டிற்குமத்தியே உயிர்பொருந்தியிருப்பதும்நெத்தியே
ஒருவருமறியாத உண்மையையிப்போது
ஓதினேன்மேதினிதன்னிலே வேறுயாதினிசொல்வாயென்முன்னிலே

வீமன்

பற்றினான்றண்டைக்கரத்திலே ஓடிஎற்றினான் துரியன்சிரத்திலே
முத்துவைரமுமொத்துயிழைத்திட்ட
முடிதனைத்தூளாய்சிதைக்கவே துரியன்படிதனில்வீழ்ந்துப்பதைக்கவே

அருச்சுனன்

துரியனுடனண்ணன்றோர்த்த நேரேகரியமேகவண்ணன்பார்த்ததே
சரியவனைக்கொல்ல தந்திரமேதேனும்
தானுண்டோசொல்லுவீரய்யனே இன்னமேனுண்டு தாமதமெய்யனே

கண்ணன்

சொன்னலதுபெரும்பாவமே வருந்துரியனுக்குப்பொல்லாகோபமே
மன்னரெல்லாங்கூடி வசையாகச்சொல்வார்கள்
வலதுதுடைதனிலாவியே என்றுமுளதுநிலைபெற்றமேவியே

அருச்சுனன்

தனஞ்சயனவீமனைக்கிட்டினான் நல்லசமரென்றுவலத்துடைத்தட்டினான்
சினங்கொண்டவீமனும் மனங்கொண்டமோனத்தால்
கனங்கொண்டகதையினால்மாறவே காத்தில்தனங்கொண்டானறடிபோவே*

துரியன்

எழுந்துதுரியனடிக்கவே வீமனிருதோளுமார்புமொடிக்கவே
கொழுந்துதணலென கோபித்துவீமனும்
விழுந்திடத்துடையிலடித்தன் அவன்வெள்ளெலும்பெல்லாமுறித்தனன்

வீமன்

வலதுதுடையுமுறியவே கன்னம் வாயுடன்மூக்குநெரியவே
சலங்கொண்டுவீமனும் பெலங்கொண்டுகாத்தினல்
தாழ்த்தினனவன்வீரந்தன்னையே புவியில் வீழ்த்தினன்மன்னர்க்குமன்னனையே

பொது

தேவர்கள்மலர்மாரிகொட்டவே முத்துவேல்செப்பியகவி மதுசொட்டவே
தாவருந்துரியனுஞ் சமர்க்களமண்ணிலே
தான்குற்றுயிராய்க்கிடந்தனன் அச்வத்தாமனுமங்கேதுடர்ந்தனன் 12

துரியன் கண்ணனை நிந்தித்தல்

மாடுமேய்த்திட்டமடையனே என்மர்மம்சொன்னாய்நீயிடையனே
கூடுவிட்டாவியின்றேடும் படிக்கிநீ
கூறினாய்உயிர்நிலைதன்னையே வீமன் குறிப்பறிந்திடவென்தன்முன்னையே

*போவே=பெயரவே

இருவர்யுத்தஞ்செய்யும்போது இடையில்யாரொன்றும்சொல்லத்தகாது
மருவறும்யுத்தம் மலைந்திட்டநாள்தோறும்
பெரும்பழிசெய்திட்டாய்நீயே கெட்டபேருனக்கேன்சொல்லுசீயே

ஆடுமிடைத்துயிற்றன்னை பெண்கள்தேடிடக்கொண்டாய்நீமுன்னே
காடுமலைவனந் தேடிக்குழலூதி
கூடிஆயரோடுசென்றாய் நீகுறிப்பிட்டப்படியெனைக்கொன்றாய்

வஞ்சமனப்படுபாவி என் வலதுதுடைதனிலாவி
கொஞ்சமேனும் முந்தனெஞ்சிலீரமின்றி
கூறினாய்மாறுபாடாக ரெத்தம்வீறிடநான்வீழ்ந்துசாக

வீமன்

வீமனுங்கோபமதாகினான் அதிவேகமுடன்கிட்டியேகினான்
பூமலிதாருளான் தாமணிமுடிதன்னை
எமனைப்போலவுதைக்கவே ராமனேங்கிமனதுபதைக்கவே

பலராமன்

அலாயுதந்தன்னையெடுக்கவே பார்த்தஅனந்தகோபாலன்றடுக்கவே
பலாயனனப்போது பாதத்தில்வீழ்ந்திட
பலராமனுங்கோபமாறினார் முத்துவேற்பாடியக்கவிதன்னைக்கூறினார் 13

## சௌப்திக பருவம்

### அச்வத்தாமன் சேனாபதிபட்டம்

ஆதியிலெந்தனைநீக்கினாய் உன்னமரெலாமிக்கெதியாக்கினாய்
பாதியிரவினுள் பஞ்சவரைக்கொன்று
பாருனக்குமுடிசூட்டுவேன் வெற்றிபரணிபாடச்சுதிகூட்டுவேன்

துரியன்

துரியன்சேனாபதிபட்டமே ஈந்துதுலைத்தேனென்றான்மனக்கட்டமே
அரியயிருள்தனில் ஆரியன்மைந்தனும்
அருந்திறலாதவகிருதனும் வெற்றிபெரும் விறல்மாகிருபவிருதனும்

பாசறையின்முனஞ்செல்லவே பூதம் பாய்ந்தவர்தங்களைவெல்லவே
ஈசனையன்றரும் பூசனைசெய்திட
ஈந்தனன்பாண்டெளவியவாளையே உன்னையெதிர்த்தோர்களைக்கொல்லிவ்
வேளையே

ஆரியன்யாதவன்றன்னையே வீரஐவர்கட்பாசறைமுன்னையே
சாரிவரச்செய்து பேரியல்பூதத்தை
சங்கரன்வாளினால் கொன்றனன் உள்ளேபொங்கரவமெனச்சென்றனன்

மற்றவர்கள் வதம்,

அட்டகாசமிகச்செய்தனன் றூங்குந்திட்டத்துய்மன்சிரங்கொய்தனன்
எட்டியேபாஞ்சாலர் கிட்டியேவந்திட
வெட்டியவர்சிரந்தள்ளினான் காட்டுவேங்கையன்னப்பாய்ந்துதுள்ளினான்

உத்தமோசாவுடன்பானுவே போரில்ஒருவரும்நிகரிலாச்சூனுவே
தத்தம்படையேந்தி சமரிலெதிர்த்திட
தலைபனங்குலையன்ன உருளவே தூங்குந் தளமோரக்ரோணியும்வெருளவே

சேனையெலாஞ்சூறையாடினான் ஐந்துகோனையெங்கேயென்றுத்தேடினான்
வானத்திங்மீனொளிர் வளரிளம்பாண்டவர்
எனதுசத்தமென்றெட்டவே யிவுளித் தாமனுமவர்சிரம்வெட்டவே

பாசறைநாசமதாக்கினான் இளம்பஞ்சவர்கட்சிரந்துக்கினான்
கேசரியிற்செல்லுங் கருடனைப்போலவே
கிட்டிடத்துரியனின்முன்னையே ரெத்தஞ்சொட்டிடஇவர்சிரந்தன்னையே

துரியன்

வஞ்சகத்தாலின்றுமோசமேசெய்தாய் வந்ததுனக்குவிநாசமே
நெஞ்சந்துணிந்திளம் பஞ்சவரைக்கொன்றாய்
செஞ்சமரமின்றுபூர்த்தியா இவர்கட்சிரமதைநீஉற்றுப்பார்த்தையா

முத்துவேலின்மொழிதப்பினாய் கெட்டமூர்க்கனேயிதுசெய்யஒப்பினாய்
கத்துக்கடற்சூழ்ந்த பத்துத்திசையினும்
சுற்றுமூன்றுவருங்கீர்த்தியே யாருஞ்சொல்லுவார்களுந்தன்னேர்த்தியே 14

குழந்தைகளுக்குத்துரியனிரங்கல்

குழந்தைகள்பிரமகத்தியே உனைவிடாதுகொண்டுநின்றிடும்பற்றியே
எழுந்திருதவம்செய்ய இனிவருஞ்சென்மமுய்ய—சு
ஈசனையறிந்து பூசனைபுரிந்து தாசனானென்றே நாசமேசெய்த-கு

திதிதர்ப்பணங்கள்செய்யுமே இருதாத்தோர்சென்மமெல்லோர்க்குமுய்யுமே
மதியிலாமல்நீயிந்த மைந்தர்கடன்னைக்கொன்றாய்—சு
மாதவனேயிதுபாதகமெனவே போதனைசெய்தேன் நீதவஞ்செய்ய—தி

சஞ்சையரிடம் தாய்தந்தையருக்குபுத்திசொல்லச்சொல்லல்

சஞ்சையரேநீர்வாருமே அரண்மனைதனிற்சென்று தாய்தந்தைத்துயர்தீருமே
பஞ்சவரைக்கொண்டுந்தன பாலகரிவரொன்று—சு
பாரினையாளுஞ்சீரினையவர்க்கு நேரினிற்சொல்வீர்கூறினேனென்று-ச

மைந்தரைக்கொன்றபாவியே புவிமேலின்னும் வாழ்வனோயெந்தனாவியே
அந்தோவுங்கட்பின்னாலே வந்தேனிதோநானென்று—சு
அடுத்தவர்தம்மை கெடுத்தனோதர்மந்தடுத்தனோவென்று விடுத்தனனாவி—மை

அந்தரத்துந்தமியார்ப்பவே முத்துவேற்சொன்னசெந்தமிழ்கவிக்கேற்பவே
வந்தவிமானமீதில் விந்தையுடன்றுரியன்—சு
வானவர்முனிவர்தானெதிர்கொள்ள சேணகங்கண்ணிற் றோணவுஞ்சென்றான்

இளம்பஞ்சவர்கள் வதங்கண்ணன்கூறல் [-அ 15

பஞ்சவரேயிங்குவாருங்கள் வந்துபாசறையைச்சென்று பாருங்கள்
கொஞ்சநேரமாகக் கூக்குரல்கேட்குது
துஞ்சினர்யாரோவறிகிலேன் வேறுதோற்றமொன்றேனுந்தெரிகிலேன்

அருச்சுனன்

என்னிடமென்னநீர்சொல்வது நிசிதன்னிலேயார்வந்துகொல்வது
உன்னிடமறியாது உலகினிலொன்றுண்டோ
ஓதுவீர்பாதகமின்றியே யன்றிஎதுசெய்வீரெங்கணன்றியே

பாஞ்சாலியின்குரல்கேட்டது பார்த்தன் காதிற்பவனனும்போட்டது
தீஞ்சாலிநறுநெய்போல் தேர்விசயன்வீமன்
○தெண்டையும்வில்லையெடுக்கவே அப்போதண்டகடாகம்நடுக்கவே

கண்ணனைவீமனருச்சுனன்கேட்கப்பதில்

குழந்தையைக்கொன்றவனாரையா கோவிந்தனேயிப்போதேகூறையா
எழுந்தவன்சிரமதை யிப்பேதேவாங்குவேன்
என்றிருபேர்களுந்துள்ளவே எம்பொருமான்றடுத்தாண்டுக்கொள்ளவே

○தண்டெனப்பாடங்கொள்ளவும்

கண்ணன்

வஞ்சமனத்தச்வத்தாமனே இளம்பஞ்சவரைக்கொன்றான்பூமனே
செஞ்சடையோன்றரும் வெஞ்சினவாளினால்
அஞ்சிடத்தாய்மனைக்கொன்றனன் அரவக்கொடியோனிடஞ்சென்றனன்

திரௌபதை

ஆரியன்சேயைமடித்திடும் முடியளித்தென்குழலைமுடித்திடும்
நாரியவட்சொல காரியம்வேறது
நங்காயவனதுஆவியே இந்தநாடழியினுஞ்சிரஞ்சீவியே

கண்ணன்

அவனைக்கொல்லநம்மாலாகாது நேரிற்சிவனேவந்தால் வெல்லப்போகாது
தவமுனிபொன்முடி தந்திடுவேனிப்போ
தங்கையேநீயுங்களித்திடு வுன்றூர்குழற்றன்னைமுடித்திடு

கண்ணன்

பதினெட்டுநாள்வரைத்தூக்கமேயில்லை பாரதத்தால்வந்த எக்கமே
இதன்மட்டுமுத்தவே வியம்பியகவிக்கினை
இல்லையென்றேனிந்தப்பாரிலே விசயா வெல்லச்வத்தாமனைப்போரிலே

அருச்சுனன்

காண்டீபமேந்திநடந்தனன் யுத்தகளந்தேடித்தாமனைத்தொடர்ந்தனன்
தூண்டியதேர்பரி துரகதத்தாமனும்
தாண்டியத்தனஞ்சயன்முன்னையே செல்லத் தானடந்தானவன்பின்னையே

அசுவத்தாமன்யுத்தம்

பிரமசிரக்கணை தொடுத்தான் பார்த்தன் மர்மத்தின்நேராக விடுத்தான்
தருமன்றம்பிவீமன் றம்பித்தனஞ்சயன்
சங்கரன்சிரக்கணைதொடுத்தா னந்தசதுர்மறையோன் மீதுவிடுத்தான்

கணையொன்றினோடொன்று பாயவேதேவ கற்பகவைந்தருதீயவே
இணையிலாதவீர ரிருவர்செய்யுத்தத்தில்
இபமெட்டுநின்றுநடுங்கவே முனிவர்தவங்கெட்டு குகையினொடுங்கவே

மண்ணொடுவிண்ணுமதிர்ந்தன மீன் வான்விட்டுத்தாழவுதிர்ந்தன
எண்ணிருகோணமுந் தெண்ணீர்க்கடல்களும்
எங்குமதோகதியாயின கதிரிந்துங் கதிதப்பிப் போயின

திக்குப்பாலகர்கதறவே சிசுமக்கள்வயற்றில் பதறவே
கக்கிடரெத்தமுங் கார்க்கோடகமுதல்
கட்செவியாவுமயங்கின பெருங் காட்டின்மிருகங்கள் தயங்கின

ஆரியன்மைந்தனைத்தேடியே காண வமரரெல்லாம் வந்துகூடியே
வீரியமெண்ணாதே விசயனும்நீயுமே
பாரின்மனுக்களைக்காத்திடு பழி பாதகம்வந்தாலும்மேற்றிடு

லெட்சியமுத்தரைகெர்ப்பமே தா கிட்சயம்வந்திடுமற்பமே
கட்சிசெய்வதினால் காரியம்வேறில்லை
காண்டிபன்வாளிக்கியென்முடி தன்னை கணமளித்தேன் கண்ணன்சொற்படி

உத்தரைகெர்ப்பமழிந்தது கொடிய யுத்தமுமப்போதொழிந்தது
இத்தரைதன்னிலே உத்தமரைப்பணி
முத்துவேற்பாமாலைசூடினர் தேவர் முனிவர்கள்மங்களம்பாடினர்

பார்த்தன்பூமியிலிழியவே தீபற்றிசந்தனமழியவே
காத்திடஜவரின் பாத்திரனாய்வந்த
கண்ணனுமைவரைக்கூட்டினார் சென்று காந்தாரியன்னையைக்காட்டினார்

வலம்வந்துஜவர்பணியவே கண்ணிற் சலம்வந்துதாயுங்கனியவே
குலங்கெட்டதுன் றம்பி கூற்றுவன்சகுனியால்
சலங்கொண்டுஅழுகாதெனன்னையே பிரமன் றலையின் விதித்ததுமுன்னையே

தந்தையின்பாதத்திற்கும்பிட வாயு தனையனெங்கேயென்றுவெம்பிட
அந்தநாளிற்செய்த தந்திரப்பொம்மையை
இந்தாவென்றுமுன்னாற்காட்டவே கண மெடுத்துத்தூளாய்காற்றிலோட்டவே

**கண்ணன்.**

பார்த்தீரோயிவனாண்மை தன்னையே பதினாயிரங்கசவலியுண்மையே
நேத்திரமில்லாதா னாத்திரம்வந்ததும்
சூத்திரப்பொம்மைத்தூளாக்கினான் துரிய னாதிநூற்றுவரைப்போக்கினான்

**கண்ணன் இறந்தவர்கட்கு பிரதிக்கடன் செய்யும்படி**
**பாண்டவர்க்குச்சொல்லுதல்**

மாண்டவர்க்குச்செயுங்கருமமே உலகாண்டவர்கட்செயுந்தருமமே
நீண்டநாளிப்புவி யாண்டிடுவீரென்ன
நின்றஜவரிடஞ்செப்பினார் மிக நன்றெனயாவருமொப்பினார்

அத்தினாபுரிநகராண்டனர் நல் லெறிதவறாமற்பாண்டவர்
சுற்றிஜம்பத்தாறு துரைமன்னர்புடைசூழ
எத்திசையோர்கப்பங்கட்டவே தரும ரிணையடிதனிற்கொண்டு கொட்டவே

கண்ணன்வேணுகானன்முன்னையே பாவண்ணன்சாத்தகியும்பின்னையே
அண்ணன்பலராமன் கண்ணியமாகவே
யாவருந்துவாரகைசென்றனர் முத்துவேற்பாவரும்பதக்கவியென்றனர் 18

வீடுமன் பத்து நாளும் விற்குரு வைந்து நாளும்
பீடுடை கன்னன்ரெண்டு நாளொன்று சல்லியன்றான்
சாடிய சமர்மூவாறின் தனிப்பெருங்கவியின் சாரம்
பாடினேன் பாக்கள்மூலம் பரவுபகாரமாக 19

**வாழி**

அறத்தின் மாமைந்தன் வாழி அவர்தம்பி வீமன் வாழி
வரத்தினிற் சாபம் பெற்ற வடிவுடை விசயன் வாழி
கரத்தினில் வடிவாளேந்துங் கனைபரி நகுலன் வாழி 1
தாம்புவி விழ நாள்வைத்த சகாதேவன் வாழிவாழி

பாண்டவர் தேவி வாழி பரனயன் மாலும் வாழி
ஆண்டகை வில்லி யாதி அரும்பெருங்கவிஞர் வாழி
வேண்டிடப்படித்தோர் கேட்டோர் மேதினியுள்ளோர் வாழி
பூண்டிடப் பாவலங்கல் புனைந்தவர்சுற்றம் வாழி 2

எத்தரிய பாரதத்தி லாழ்வார்செய் யிகற்கவியின் இன்னிசைப்பா
சோத்தரிய சமரின்மணி மாலையென பெயர் புனைந்தேன் குவலயத்தில்
பார்த்தரிய பிழைபொறுத்து பயிர்புரக்கு மேகமதன் பயனையொத்த
சாற்றரிய கவிகொடுத்து மாத்தரிய புகட்சிதனைத்தருவீரன்றே 3

நேமமான ராசசூய யாகமது சேமமாகவு முடிந்தபின்
ஏமராசன்மைந்தன் வீமனர்ச்சுனனின் இளையநகுலசகாதேவர்கள்
பூமணக்கமழுந் தேமருவுங்குழற் பூவைமாடிதனில் நின்றெதிர்
மாமனுரையொரு சாமநேரவரை மருவிநின்றன ளணங்கனள்

பத்தியானகரி யொத்ததேர்புரவி பாந்தளக்கொடி பறக்குமோ
ரத்தினபுரியை ஆளுங்கோன் பளிங்கடுத்த வாயிற்படிதன்னிலே
னெத்திவேகமுடன்மொத்தி மாமகுட நித்திலங்கடரைசிந்தவே
சித்திரம்மதனை யொத்ததிரௌபதையுங் கைக்தலம்பட நகைத்தனள்

தாதையிந்தா மெனவறிந்திடில்யான் றக்கசேவகரை யொக்கவே
பேதையானனுப்பி விடுவனுந்தனொடு பேசுதர்க்கரிய பெற்றியோய்
ஓதமைக்கடன் வளைந்தயிப்புவியிலொருவராயினுமுமக்கிணை
ஏதமுற்றவரை காதிற்கேட்டதில்லை பார்த்ததில்லை யிருகண்களால் 3

பட்டபகலிற்பசு மாடுவேறுவதை பார்த்தறிய முடியாதநீர்
நட்டநிசியின்விடு பட்டகாரெருமை கட்டப்பார்ப்பதும் நீரென்கொலே
வட்டமானஅத்தி பட்டினத்திற்றினம் வணங்குஞ்சிற்றரசர்கப்பணங்
கொட்டநின்னரசு கெட்டதாகுமென குவலயத்தவர்களென்சொலார் 4

கோடிசந்திரனுதித்து மேற்றிசைக்குன்றின்சென்று மறைந்தென்னவே
ஆடிமண்டபத்தை நாடிசேடியரோடறிவைதிரௌபதை யகன்றபின்
வாடிநின்றதுரியோதனுந்தம்பியரை வருகவென்றோரரை நொடியிலே
தேடியத்திநகர் கூடிமாமன்றனை தேற்றவெட்கிமனஞ்சென்றனன் 5

சென்றவன்றிருதராட்டிரன்றனொடும் தினகரன்சுதன் சகுனியும்
குன்றவில்லியொக்குஞ் சாதனன்றனொடும் கூறினன் மனவேதையே
நின்றுவாயிற்படி சென்றுமோதிமனங் குன்றியப்போது திகைத்ததும்
அன்றலங்கமதில் நின்றதிரௌபதையு மரசாவையினில் நகைத்ததும் 6

அண்ணவதுவோர் பெரிதல்ல சாணமது அவள்கறைத்ததோர்தாழியை
வண்ணமானயிளய கன்னிதிரௌபதையும் வந்துவைத்தனளென்சென்னியில்
கண்ணைமூடவழியின்றிகங்குன் வரைகால்கடுக்கவுங் காந்துளேன்
வெண்ணெவன்னிபது தன்னைகண்டதென வெம்பியென் மனந்ததும்பினேன் 7

## காமதேனுவனச்சருக்கம்

மன்னவன்றுரியன் மாதுலன்சகுனி மறைவலான்குரு துரோணனும்
சென்னியின்மகுட மின்னுங்கன்னனொடு திகழ்பிதாமகனுஞ் சிந்துவும்
வன்னவில்விவுளித் தாமன்சாதனனு மற்றுமுள்ளதம்பிமார்களும்
கன்னவின்னமுத மென்னுமென்மொழியின் கன்னியர்கள்புடைசூழவே 1

அந்தணர்கள்சில ராசிகூறிடவும் அரம்பையன்ன பலமங்கையர்
தந்தனத்ததிமி தானதத்தமென தாளமத்தள முழங்கவும்
அந்தரத்துமினல் வந்துதித்ததென அரங்கின்மீது நடமாடவும்
வந்தனன்றுரியன் றந்தைவைத்தொளிறு மாசிலாதவரியாசனம் 2

எண்ணுதற்கரிய மண்ணின்மக்களொடு இத்தலத்தினை புரக்குமோர்
கண்ணனுக்கினிமை காப்பதொக்கும்சில காவன்மன்னவரே காட்டினில்
வண்ணவில்விசயன் மற்றநால்வரொடு மங்கைதிரௌபதையு மிங்குற
எண்ணமாகுமுன மன்னவர்களுட னிகல்புரிந்திடவு மெண்ணினோன் 3

காட்டினிற் சென்ற ஐவர் காந்துரை வதற்குமுன்னம்
கூட்டி நம் படைகளோடு கொடுஞ்சமர் விளைத்தன்னோரை
வாட்டிநேம் வலிமையாலே வானுல கனுப்பிவிட்டால்
நாட்டினிற் பாதியில்லை நமக்கொரு பகையுமில்லை 4

அன்னவன் சொன்ன வார்த்தை அன்புடன் கேட்டுஅங்க
மன்னவனெழுந்து சொல்வான் மதிகுலத்தரசே நீயும்
சொன்னது சரிதானிப்போ துலைவிலா தெந்தநாளும்
இன்னல்செய் ஐவர் தன்னை டிகல்செய யெழுமினென்றான் 5

பாதகமெல்லாமொன்றாய் பரிந்தவதரித்திட்டதுச்
சாதனனெழுந்து பின்னுந் தமையனை வணங்கிச்சொல்வான்
வேதனையடை.ந்து காட்டின் மெலிந்துறு மைவர் தம்மை
ஏதமில் கணையொன்றாலே எமபுரஞ் சேர்ப்பே னென்றான் 6

மூவருஞ் சொன்ன வார்த்தை முடிவுற கேட்டுச்சூதின்
றாவருஞ் சகுனி சொல்வான் சதுரங்க சேனையோடு
மேவரு மைவர் தம்மை விண்ணுல கனுப்பி னல்லால்
யாவரு மவர்கட்கையா லந்தகனுலக மாள்வோம் 7

மன்னவன் றுரியன் கன்னன் பாமன் சாதனனு மொன்றாய்
சொன்னவையெல்லாங்கேட்டுத்தொண் ணூற்றென்பது பேருக்கும்
பின்னவன் மனந்தாளாமற் பிதாமகன் கிருபன் றுரோணன்
அன்னவர் யாருங்கேட்க அறமல்ல வரசர்க்கென்றான் 8

வேதியர் குரவர் பெண்பால் விருத்தர்கள் சிசுக்கள்வேத
மோதிய வடியா ரேழை உறவினர் பிணி யுற்றோர்கள்
நாதியர் நிதியுந்தேச நல்லா சிழந்தோர் தூத
ராதியோ ரிவரைக் கோறல் அறநெறியல்ல வென்றான் 9

காண்டவ மெரித்த வீரன் காலரும் புதல்வன் றருமன்
ஆண்டகை நகுலன் றேவன் அணங்கு திரௌபதையோடுற்ற
பாண்டவர் மீதுநீங்கட் படையெடுத் தேகுவீரேல்
தாண்டவ மாடிவுங்கள் தலைநிலம் வீழுமந்தோ 10

கட்டழகுடைய ஐவர் கன்னியை யவையிலன்று
பட்டதை யுரிந்தபோதும் பகர்ந்ததை நீர்கேளாமல்
தொட்.டிழுத் திட்டபாணி தோளுரா மெலிந்து மெய்யுங்
கெட்டது மறந்தீரையோ கனவது கண்டீர்போலும் 11

சகுனியுங் கன்னன்கேட்டுத்தார்வலம்புரியா னெம்பி
விகன்னனை வெகுண்டு நோக்கி விளம்பிய வேதமெல்லாந்
தகவிதை யறிந்தோரிந்த சபைதனி லில்லையென்றோ
மிகமிக வெடுத்துக்கூறும் விரகுணக்களித்த தார்சொல் 12

வீடுமன் துரோணன் கிருபன் வில்வலா னசுவத்தாமன்
பீடுடை துரியன் சிந்து பேர்பெறு தம்பிமாரும்
நாடுமச் சகுனி கன்னன் நால்வகைச்சேனை யோடுங்
காடுறை ஐவர்மீது கனமுற சடித்துச்சென்றார் 13

சிங்கமும் புலியும் யானைசிறுத்தையுங் காடி சென்றாய்
தங்கிடு மலையுங்குன்றும் சாரலுங் கடந்துசெல்ல
பொங்கிடுங் கானற்றன்றால் பூபதிதுரியன் வேட்கை
அங்குற நீரைத்தேடி அலைந்தனர் தூதரெல்லாம் 14

நதிகுளங் கூவங்கால்வாய் நண்ணிய விடங்க டோறும்
கதியுடன் சுற்றிப் பார்த்து காட்டினில் நீர் இலாமல்
விதி யுலகத்தை மோதும் விருட்சத்தின் மீதிலேறி
குதிரொளுமாவுந் தெண்ணீர் குளமெழிற் சோலைகண்டார் 15

அண்டர்கோனேவு மேய்க்கு மாயருக் குளத்திற் றண்ணீர்
உண்டவர் சோகமாறி உறங்கிடும் வேளை தன்னில்
தண்டு நால்வனகயுந்தத்தந் தாகநீ ரருந்தச்செல்ல
கண்டனர் கயம்நீர் சேறாய் கலங்கிட வாயர் தன்னால் 16

பார்முழு தாண்ட மன்னன் பசுக்கண் மேய்த்திடு மவ்விந்திரன்
சீர்பெறு மாயர் தம்மை சேறுநீர் செய்த தென்கொல்
ஊர்பணி முடிமேற் றாங்கு முலகு காவலனுங் கேட்க
தார்முடி தாளின் மோதுந் தறுகணான் றனக்குச் சொல்வார் 17

நண்ணிய குளத்தி லாவும் நாங்களும் நீ ரருந்த
விண்ணினை யாளு மெங்கள் வேந்தனா லமைத்த தன்று
எண்ணிய கருமம் யாவு மியற்றிடும் வேந்தே யிந்த
மண்ணி லுள்ளோர்கள் கேட்க வழக்கிலை யென்று நக்கார் 18

எந்தனல் லாணை தப்பி யிருப்பதோ ருலகமுண்டோ
சிந்தையி லச்ச மின்றி செப்பினீ ரிந்த வார்த்தை
மந்தையைக் காக்கு மாயர் மண்டையிற் குருதி சிந்த
அந்தகன் போல வாட்டி ஆநிரை கவர்ந்தான் வேந்து 19

ஆயர்கட்டுரியன் சேனை யடித்திட வெம்பித் தங்கட்
காயமும் புலனு மந்தக் கரணமும் வேற தாகி
ஞாயிறுச்சத்தை நீங்கி நாடிடு முன்னம் சென்று
தூயவைந் தருக்கீழ்வைகுந் தோன்றலைக் கண்டபோது 20

புரந்தர னடியின் வீழ்ந்து புலம்பியே பசு மேய்த்தோர்கள்
சுரந்திடு மடியுங் கன்று சூல்பசு நிரையை யின்று
கரந்திட வடித்தா னெம்மை கட்செவிக் கொடியோனென்று
நிரந்தர மாகப் பின்னும் நிகழ்ந்தவை யாவுஞ் சொன்னார் 21

கண்களா யிரமுங் கொவ்வை கனியன்ன பொறித்தீ சிந்த
பெண்களா யிரத்தோ ராழின் பேரிசை கேட்கும் வீரன்
எண்கொளா யிரத்தின் கோக்க ளிரியவோ துரியன் றன்னால்
புண்களா யிரமே செய்யப்போர்த்தொழிற் புரிவே னென்றான் 22

இத்திற முரைத்தி யிந்திரன் இடியிடித் தென்ன சீறி
புத்திரன் றன்னை நோக்கி போர்புரிந் தரவோன் றன்னை
இத்தநிக் கொணர்வா யென்ன இந்திரத்தனுக்கையேந்தி
சித்திரசேன னாயர் செப்பிடும் வழியே சென்றான் 23

வானவன் மைந்தன் சென்று வரிசிலை வளைத்து சூழ்ந்த
யானைதேர் பரி காலாட்க ளடங்கலுஞ் சூறையாடி
கானகந் தன்னில் வந்த கன்னனுஞ்சகுனி கிருபன்
ஆன காங்கேயன் றுரோணன் அச்சுவத் தாமன்மீதும் 24

வாளையுமகரந் துள்ளும் வாரிதி நீரை யள்ளிக்
காளமாமுகிற் சூல் கொண்டு கனமழை பொழியுமாப்போல்
பூளைமா வனத்தின் வீசும் பொற்புறு வளியா மென்னக்
காளையாங் கன்னன் மற்றோர் கடுங்கணைக் கிலக்க தானார் 25

கன்னன்வின் முறிந்த தந்த காந்தான் சகுனி சிந்து
மின்னெடு வாளி துரோணன் வீடுமன் வெந்தந்தார்கள்
கின்னரர் பாடுஞ் சீரான் கிருபனா மசுவத் தாமன்
தன்னுர மெலிந்து காற்றின் சருகெனச்சென்றா ரந்தோ 26

துரியனும் வரிவில் வாங்கித் தூணியி னம்பு கோத்து
கரிமுகி லிடித்து மின்னி கால்விழுந் தாரையன்ன
எரிகணை யாவு மெய்தா னிந்திரன் மகன் றன்னோடு
சொரிபல வாளிமோதல் சோனைமா முகிலை யொத்த 27

இந்திரன் மைந்தன் விட்ட இடிகணை யொன்றி னாலே
சந்திர மௌலி யொப்ப சாரதி புரவி தேரும்
வெந்திட வில்லு மற்று வெறுங்கையாமளவிற் றானும்
செந்திரு காத்தாற் றாக்கித் தேரினிற் பிணித்துச்சென்றான் 28

பற்றிய வாசரெல்லாம் பாகுடன் றேரும் வில்லும்
அற்றிடத் துவச மெல்லாம் அம்புரந் தன்னிற் பாய
சுற்றினுஞ் சோரிக் காலைச் சுடரென சுழன்று வோட
வெற்றியின் சங்கமூத விண் ணடுங்கினதுமாதோ 29

சித்திரசேனன் சங்கத்திகழ் தொனி கேட்ட மாற்றம்
வெத்திகொள் வேந்தன் சேனை விறட்டிய பசுக்களெல்லாம்
கொத்துகொத்தாகச் சூழ்ந்து குதித்துவால் குழைத்து மேலும்
பத்திகொட்டாளை மீது பாய்ந்தன மிகவுஞ்சீறி 30

வாலினா லடித்துப் பின்னும் வானெழுந்துள்ளி நான்கு
காலினால் மிதித்து வேலைக் கலக்கு மந்திர வெற்பொப்ப
சூலினா லயர்ந்து நின்ற சுரபிக ணீங்கலாக
பாலினால் வளர்ந்த கன்றும் பாய்ந்தனத்தாய்பின் பற்றி 31

தசையுடன் குருதி யென்புந் தனித்தனித் தாணி சிந்த
விசையுடன் மோதிக்கொம்பால் விண்ணுல கேற்றும்போது
புசபல துரியன் கன்னன் போர்வலிச் சிந்து தாமன்
இசைகணை துரோணன் வீடு மனுமிது வியப் பென்றார்கள் 32

முட்டியுங் கொம்பி னாலே முன்னங்கால் தன்னாற் சேடு
வெட்டியுங் குளம்பினாலே விண்ணவன் பசுக்கட்காலை
மட்டியும் போட்டுத் துள்ளி மாசுணன் றானையெல்லா
மட்டி யில்லாமல் வென்று அரைக்கணந் தன்னில் மீண்டு 33

தன்பதி மன்னன் பெற்ற தனையனைக்கண்டபோது
மன்பதி துரியன் சேனை மாண்டிட வதைத்தப் பின்னர்
பொன்பதி வளமுற்றோங்கும் புரந்தரன் மைந்தனோடு
×விண்பதி நாடிச்செல்ல விரைந்தன பசுக்களெல்லாம் 34

வெறுமனாந் துரியன் விண்ணில் விசையுடன் செல்லும்போது
தரும பூபதியெ னண்ணா சமயம் நீர் காக்காவிட்டால்
அருமையா முந்த னெமபி ஆருயிர் நீங்கு மின்றே
பெருமை யோரணியாய்ப்பூண்ட புண்ணியா வபய மென்றான் 35

அழுதிடுங் குரலைக் கேட்ட வறத்தின்மா மைந்தன்றானும்
பழுதுறு வதற்கு முன்னே பார்த்தநீ செல்வா யென்ன
தொழுதவர் துணைத்தாள் போற்றி துரியனுக் குதவி செய்யின்
நழுவிடு மறமு மிந்த நாட்டினி லென்று சொன்னான் 36

பொறுத்தவர் பூவியாள்வார் பொறையிலான் பொருமை கொண்டு
கறுத்தவர் மாள் வரென்று காசினி யதனிற் சொல்வார்
கிறுத்திடுந் துலைக்கோ லொப்பாய் நீவிரைந் தெதிர்த்த தெவ்வை
மறுத்தொரு கணத்தின் மீட்டு மன்னனை யழைத்து வாராய் 37

×விண்வின்னெனத்திரிந்தது

என்றலும் வில்லின் நாணி இசையெழ வளைத்துக் கோத்து
சென்றிடுஞ் சித்ரசேனன் றேர்தனைத் தடுத்தற் கென்று
வன்றிறல் வாளி யொன்றை மறைகொடு விடுத்தபோது
பொன்றிடா ரதத்தை விண்ணிற் போகாமற் பிணித்த தன்றே 38

கால்நடை யாகவந்தக்காண்டீபன் றன்னை யப்போ
மேலுல கத்திற் செல்லும் விபுதர்கோன் மைந்தன் கண்டு
கோல்கொடு யிவனை வென்று கொண்டிடத் தனது வில்லின்
நால்கொடு சரங்கட்கோத்து நொடிதனிற் கோடி யெய்தான் 39

பிறையென நாணி தன்னாற் பிணித்தவர் வளைத்த வில்லின்
குறையற நீரை வாரிக் கொண்டலும் பெய்த தொப்ப
கறையறு மிவர்களெய்தக்கணைமழை கண்டு தேவர்
திறை கொளுமசுரர் வேளுஞ் செய்தமர்க் கிணையாமென்றார் 40

தமையனுந் தம்பி தத்தந் தனுவளைத் தனேக வாளி
இமைபடுவதன் முன்கோடி யெய்தன ரிறுதி காலத்
தமைவிலாவுததியோடு அனிலமுஞ் சேர்ந்ததன்ன
உமையொரு பாகன்றேக மொளிசிக ருதிரமோட 41

இருவரும் விட்டவாளி யெதிரெதிற் றடுத்த தல்லால்
வெருவுறப் பட்டதில்லை விண்ணவன் மைந்தர்மீது
செருவறச் சித்ரசேனன் தேவதா வத்திரத்தை
கருவற விடுத்த காலை காண்டீபன் றடுத்து நின்றான் 42

ஆவதா யினுமின்றுத்தம் அம்புலி அரசன் விட்ட
தேவதா வத்திரத்தை செயித்தலும் பிரமை கொண்டு
நாவதா லுரைக்கப்போமோ நான்செயு மாண்மை தன்னை
போவதா யிவன்றன் வீரம் புகல்வதா வெனவு மீண்டு 43

விண்ணினி லிருக்கு மிந்த வீரனை வெல்வதற்கு
எண்ணறு சேனைசூழ எத்தனைக்கோடி வேந்தர்
பண்ணிசை தேரின் மீது பறந் தெதிர் வந்திட்டாலும்
மண்ணி லுள்ளோர்கள் வெல்ல மறந்திடுமென்று நக்கான் 44

முற்பொழுதறுபதினா யிரத்துடன் மூன்றுகோடி
அற்பரைவெல்ல யாட்டா தருச்சுனன் றன்னையேவ
வெற்பக முருவ வாளி வீசியத் தனுசர் தன்னை
பிற்பக லுக்குள் வென்ற பெருமைநீ யறியாய் போலும் 45

அருச்சுனன் மொழிந்த வார்த்தையமுதெனச் செவியின்வாயால்T
சர்ச்சன சித்ரசேனன் றானருந் திட்டபின்னர்
°விர்க்குனி தளர்த்தி வந்த வீரனீ யார்சொலென்ன
சர்ப்ப கன்னியை மணந்த தனஞ்சயன் சாற்றலுற்றான் 46

அந்தரந்தன்னை யாளுமமரர் கோன் பகைவரான
வெந்திறன்மூன்றுகோடி விறலறு நூறு நூறாந்
தந்திரவசுரர் தன்னை சங்கரித்தெந்தன் தந்தை
இந்திரற்காசு தந்தோனென்பெயர் கிரீடியென்றான் 47

தன்பெயருரைத்து மீண்டுந் தனுவெடுத்தென் முனின்ற
உன்பெயர் தன்னையிப்போ உரைத்திடவேண்டுமென்ன
வன்பெறுவசுரர் தன்னை வானுலகேற்றிமுன்னாள்
மன்பெறு மவனிவேந்தே வழுத்துவேன் வண்மையாக 48

T வாயால் வாயிலால்

°விற்குனி எதுகைக்காக விர்க்குனி எனத்திரிந்தது

தோயமாபுரத்திற்கன்று தூதுசென்றவனும்யானே
மாயமாமவுணர்செய்த வஞ்சகமறிந்தோன் யானே
நேயமாயவரைக்கொன்ற நெறியுணர்ந்தோனும் யானே
சேயனுன்விண்கோனுக்குன் செயலறியாதோன்யானே 49

பொறுத்திடவேண்டுங்குற்றம் பூபதியென்றுதேவை
திறுத்தியேதுரியன்றன்னை நிலத்தினிலவிழ்த்து விட்டு
செறித்திடேனெம்பியென்று செலவளித்திடவும்பெற்று
வெறுத்ததன்மனத்தினோடு விண்ணுலகதனிற்புக்கான் 50

துரியனுந் தருமர் முன்னுற் றேன்றிடக் கந்தமூல
மரியமா பலாவும் வாழை யருங்கனி விருந்து மாந்தி
உரியதன் நகரிற் செல்ல வுறுதுணை விசயன் றன்னை
சரியென வனுப்பச் சென்றான் தான்வனங் கடந்து நின்று 51

காட்டினிற் சென்ற நீங்கள் காவலர்க் குரிய வெங்கண்
ணாட்டினி லடியை வைத்தால் னறுக்குவே னிரண்டுதுண்டாய்
போட்டி சொல்லாமற் செல்வாய் பொறியெழும் வனத்திலென்ன
கேட்டிடச் செவியைப் பொத்தி கிரீடியுந் திரும்பிச் சென்றான் 52

அறந்தன்னாற் புரங் காணு மாற்ற லுடையாய் புவியி
லறந்தன்னை யவயவமா யவதரித்த அருட்கடலே
அறந்தன்னைத் துறந்தொழுகு மத்தி புரி யான்வேந்தன்
அறந்தன்னை முறியடித்தா னறைந்ததை யென்சொல்வதென்றான் 53

ஆனைவரும்பின்னே மணியோசை வரும்முன்னே
அனர்த்தவரும்பின்னே மதியதுதவறும்முன்னே
வானவர்கள்மண்ணவர்கடானவர்கடன்னில்
மோனவருவானவர் மொழிந்ததிவை சொன்னேன் 54

சூதிலாஐவர்காடு தோற்றவை பருவர்தன்னில்
ஓதியகவிகளேழு மும்பர்கோன் காமதேனு
தீதிலா வனச் சருக்கஞ் செப்பியவைதம்பத் தைந்தும்
கோதிலா முத்துவேலின் குருவருமுகவன் கூற்றாம் 55

அறந்தவா ஐவர்தங்க ளவனியை ஆண்டுவந்த
திறந்தவா துரியன்றன்னை சேணில மதனி லேற்றி
சிறந்தநா டாளச்செய்த செருத்தருக் கவிதை சேர்ந்து
அறைந்தது இருநூறோடா றைந்திடன் ஈரொன்றன்றே

காமதேனுவனச்சருக்கம்

முற்றிற்று.

| பக்கம் | வரி | | |
|---|---|---|---|
| 1 | 1 | மைந்தத | |
| 3 | 3 | மின்னுற் | |
| ,, | 7 | மகிழ்வாய | |
| 10 | 9 | நாம் | ந |
| 12 | 3 | புவுவியின் | புவ் |
| 19 | 25 | தோமீது | தேர் |
| 22 | 13 | திட்டாள் | திட்டதாள் |
| 23 | 7 | தருமருப்போ | தருமருமப்போ |
| ,, | 21 | பேசுகிறாய் | பேசுறாய் |
| 24 | 9 | வயிர் | வுயிர் |
| ,, | 13 | கார்மர | கார்மா |
| ,, | 19 | உதிர்ந்தன் | உதிர்ந்தன |
| 25 | 6 | வானுவகங் | வானுலகங் |
| 29 | 12 | விண்ணுலா | விண்ணுல |
| 32 | 5 | அச்சமொன்றியே | அச்சமொன்றின்றியே |
| 33 | 9 | சாயந்தது | சாய்ந்தது |
| ,, | 7 | முகந்தினான் | முந்தினான் |
| 34 | 22 | கணையாற | கணையாற் |
| ,, | 30 | வெட்டினான | வெட்டினான் |
| 35 | 10 | கார்திரள் | கார்த்திரள் |
| 39 | 18 | செர்ண | சொர்ண |
| ,, | 34 | குணண்டல | குண்டல |
| 40 | 29 | வெந்தன | வெந்தன் |
| 41 | தலைப்பு | பதிமூன்றாம் | பதின்மூன்றாம் |
| ,, | 21 | வென | வென் |
| 42 | 23 | நானில | நானில் |
| 43 | 26 | மன்னனன் | மன்னவன் |
| 44 | 14 | மருமங | மருமங் |
| ,, | 32 | விடுப்பவன | விடுப்பவன் |
| 45 | தலைப்பு | போர்ச்சுக்கம் | போர்ச்சருக்கம் |
| 46 | 9 | அறுத்தத | அறுத்துத் |
| ,, | 36 | கேள | கேன் |
| 47 | 3 | எனுன | ஏனுன |
| ,, | 22 | அம்போதே | அப்போதே |

| | | | திருத்தம் |
|---|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] | தைத்தியர் |
| [illegible] | [illegible] | [illegible] | பதின்மூன்றும் |
| [illegible] | [illegible] | [illegible] | கதிரும் |
| [illegible] | [illegible] | ..ல | அவனியிலெவ்வித |
| [illegible] | [illegible] | ..டுரெ | வீடுயென்பது |
| [illegible] | ..5 | தனு | தன |
| 51 | 2 | மன்னுவ.. | மன்னவர் |
| ,, | 23 | பயோத்தி | பயோததி |
| 52 | 7 | செஞ்சட | செஞ்சுட |
| ,, | 23 | புரி | பூரி |
| ,, | 34 | போயின் | போயின |
| 53 | 6 | உடைந்தது | உடைந்ததுன் |
| 60 | 12 | லோது | வோது |
| 61 | 36 | மேங் | மேஉங் |
| 64 | 8 | மெழும்பிட்ட | மெழும்பிட |
| 65 | 25 | மகா | மகர |
| 66 | 33 | செயித்துக | செயித்துக் |
| ,, | 20 | வந்தென்ன | வந்ததென்ன |
| 67 | 19 | மாமன்றனைக | மாமன்றனைக் |
| ,, | 28 | அணுவரு | அணுவுரு |
| 70 | 21 | கொல்லுவான் | வெல்லுவான் |
| 73 | 5 | லொரு | ரொரு |
| ,, | 11 | ருங்கியே | ருங்கிய |
| ,, | 14 | கன்னனை | கன்னனே |
| ,, | 21 | வேகத்திற்கமுன்றன | வேகத்திற்கமுன்றன |
| ,, | 30 | புடைத்தது | படைத்தது |
| 74 | 19 | வாருணு | வருணு |
| 75 | 19 | யாகுமே | யாகுமா |
| 76 | 24 | முத்துவேற் | முத்வேற் |
| 77 | 21 | னேன்று | னென்றுன் |
| 81 | 26 | இருக்கக | இருக்காற் |
| 85 | 13 | ரோர்த்த | ரோர்த்ததே |
| 90 | 14 | கொல் | கொலோ |

No. 103584

O-,194NMP1M
N54